ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 3 பிரமாதி௵ மார்கழி௴ கதிர் 6

ஜனவரி 1940

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை			1
காந்தியடிகளும் காங்கிரஸூம்	—	பாபு பகவான் தாஸ் M. A. D. LITT	9
காங்கிரஸ் வழி காட்டுகிறது			16
வீர பாலகர்கள்	—	ஸ்ரீ. ரா	19
நாமும் நமது நாடும்	—	வ. அ. தியாகராஜன் M. A.	21
கண்டங்களின் விஸ்தீரணம்			25
கல்வியறிவும் இலக்கறிந்து இலாபம் பெறுதலும்	—	"நாராயண சிவன்"	26
பின்லாந்து-என்ன அக்கிரமம்!	—		29
சமுத்திரங்களின் விஸ்தீரணம்			31
ருஷ்யா, ஏன் ஜெர்மனியோடு ஒப்பந்தம் செய்து கொண்டது?	—	காட்ஸ்லி பூஜே	32
ஜெர்மன்—ருஷ்ய ஒப்பந்த விவரம்			35
நக்ஷத்திரங்கள்	—	ச. மூ.	37
காதல் வேதனை	—	பொ. திருகூடசுந்தரம் M. A., B. L.,	40
சோர்வு கொள்ளாதே	—	வ. பார்த்தசாரதி	44
சங்கீதத்தின் பெருமை	—	"மௌனத்கல்யன்"	46
அக்கா (தொடர் கதை)	—	எம். வி. வெங்கடராமன்	48

வேதாந்த ரகசியங்கள் — ஸ்ரீ. ஸதானந்த சுவாமிகள் 54
ஓ! இந்தியனே! — "கண்ணன்" 58
பால கங்காதர திலகர் — "காங்கிரஸ்வாதி" 62
தந்தையைக் காத்த தனயன் — "சங்கர குமாரன்" 65
அடிமைத் தொழில் எப்படி ஆரம்பமாயிற்று? — ம. கா. ஈா. 71
உலகத்தின் விஸ்தீரணம் 73
மன நிலையும்—உறுதிப்பாடும் — சேவு. பழனியப்பன் 74
சுதந்திரத்தின் தேவைகள் யாவை? ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள் 4 வெ. சா. 75
அன்றாட உலகம் — 82
ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்? 86
கையெழுத்துப் போடு முன் 87
தமயனின் கடிதம் 9 — "தேவி தாசன்" 88

அநுபவ ஜோதிஷர்

இவர் பல பிரபுக்களால் உண்மைப் பலன்களுக்காகப் பரிசுகள் பெற்றவர். எதிர் காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் கணிக்க ரூபா 2. மாதவாரி, ஒரு வருடப் பலன் எழுத ரூ. 5. ஆயுள் பூராவாகப் பலன் எழுத ரூ. 25. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

Lt col. கிரஹாம் சேடன் ஹட்சின் D. S. O. M. C. 'W. பிளான்' 'சாபு' இவைகளின் ஆசிரியர் லண்டன், 19-12-38-ல் தெரிவிப்பதாவது:

இவர் தெரிவிக்கும் ஜோதிட பலன்கள் மிக அதிசயிக்கத் தக்க, உண்மையான அநுபவத்திலிருந்து வருகின்றன. எனக்கு மிகவும் முக்கியமான சில விஷயங்களில் இவர் மிகத் தெளிவான அடையாளங்களைத் தெரிவித்தார். அதன் மூலமாக நான் சௌகரியம் அடைந்து வருகிறேன்.

விலாசம்:—பிரபசர் காழியூர்-

கோவிந்தாச்சாரி,

3-2, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்டால்

பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் வாரம் வெளியிடப் பெறும்.

"ஜோதி"

வருஷ சந்தா

பர்மாவுக்கு	4—0—0
இந்தியாவுக்கு	4—8—0
மலேயா முதலிய எல்லா வெளி நாடுகளுக்கு	6—0—0

தனிப் பிரதி

பர்மா, இந்தியா	0—6—0
வெளி நாடுகளில்	0—8—0

— ஏஜெண்டுகள் எங்கும் தேவை —

விளம்பரங்கள் முதலிய விபரங்கட்கு நேரே எழுதுக.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்

நெ. 47, 31-வது வீதி,

இரங்கூன்.

ஜோதி

கதிர் 3 ஜனவரி—1940 சுடர் 6

எங்கே?

கிறிஸ்து நாதருக்கு வணக்கஞ் செலுத்திக் கொண்டு தான் **1940**ம் வருஷத்திற்கு வரவு கூற வேண்டுமென்று சங்கல்பம் செய்து கொண்டு, அந்தப் பரம கருணை நிதியை எங்கெங்கோ தேடிப்பார்த்தோம். 1939ம் வருஷத்திலே, 1938ம் வருஷத்திலே, அதற்கு முந்திய வருஷங்களிலே கூட அவரைத் தேடினோம். விஞ்ஞானத்துறையிலே வளர்ச்சிபெற்று விட்டதாகப் பெருமை கொள்ளும் ஐரோப்பாவிலே, சிவப்பு இந்தியர்களின் பூண்டே இல்லாமல் செய்து விட்டு நாகரிக சிகரத்தில் ஏறி நிற்கும் அமெரிக்காவிலே, கறுப்பு நீக்ரோவர்களுக்கு 'டிரஸ்டி' களாகத் தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்டவர்கள் நிரம்பிய ஆப்ரிக்காவிலே, 'புஷ்மென்' களைப் புதர்களுக்கு ஓட்டிவிட்டு, புறம் போக்காயுள்ள நிலங்களை யெல்லாம் தங்களுடைய போக பூமியாகக் கருதிக் கொண்டு வாழுகின்ற மக்கள் நிறைந்த ஆஸ்திரேலியாவிலே, இந்த நான்கு கண்டங்களிலும் தேடித் தேடிப் பார்த்தோம். ஏன்? பாலஸ்தீனத்திலே கூடப் பார்த்தோம். பெத்லேஹம் நகரத்தில் வீதி வீதியாக வலம் வந்தோம். 'எம்பெருமான்! எழுந்தருளாய்!' என்று கதறினோம். 'எமது நாதர் எங்கே?' என்று யாராரையோ கேட்டுப் பார்த்தோம். சேம்பர்லேனோ, ஹிட்லரோ, ஸ்டாலினோ யாராவது வாய்திறக்க வேண்டுமே. பதிலே கிடையாது. ஆயினும் நமது கடமையை நாம் செய்வோம். அந்த மகா புருஷன், ஏழைக் குடியிலே பிறந்து, ஏழைகளுக்காக வாழ்ந்த அந்த அன்பின் வடிவம், மனிதனாகத் தோன்றி தெய்வமாக இருந்து மக்களுக்கு வழிகாட்டிய அந்த மரியாளின் திருமகன், தம்மைச் சிலுவையிலே அறைந்தாரையும் ஆசீர்வதித்த அந்தக் கருணை வள்ளல்—அவருடைய திருப்பாத கமலங்களிலே எமது சிரத்தை வைத்துக் கொண்டு 'ஆண்டவனே! நீ எங்கிருந்தாலும் சரி; இந்தப் புதிய வருஷத்திலாவது எங்களுக்கு–உலகத்திற்கு – அமைதியைக் கொடு' என்று பிரார்த்திக்கிறோம். இந்தப் பிரார்த்தனையோடு தான் நாம் புதிய வருஷத்தை வரவேற்கிறோம்.

உலக மெங்கணும், சிறப்பாகக் கிறிஸ்தவ நாடுகளில் கிறிஸ்மஸ் திரு

விழா கொண்டாடப்பட்டது. போர்க்களத்திலே யுள்ள போர் வீரர்களுக்குக் கூட, சேனைத் தலைவர்கள் கிறிஸ்மஸ் செய்தி அனுப்பினார்கள். ஆம்; சமாதானத்தை நிலை நிறுத்துவதற்காகத் தானே இவர்கள் போர் புரிகிறார்கள்! ஆதலின் அந்தச் சமாதான புருஷனின் திருநாளை, போர்க்களத்தில் ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டியது அவசியந்தானே! போப்பரசர் முதல், குடிசையிலுள்ள ஏழைக் குடியானவன் வரை, எல்லாக் கிறிஸ்துவர்களும் இந்தத் திருவிழாவில் கலந்து கொண்டார்கள். ஆனால் கிறிஸ்து நாதர் எங்கே? கிறிஸ்துவ தர்மம் எங்கே? 'இந்த ஜனங்கள், உதட்டளவிலே என்னைக் கௌரவிக்கிறார்கள். அவர்களின் இதயமோ என்னினின்று எவ்வளவோ தூரத்தில் விலகி யிருக்கிறது!' என்ற விவிலிய வாசகம் இந்தச் சமயத்தில் நமது ஞாபகத்திற்கு வருகிறது.

கிறிஸ்மஸ் வந்து போய் விட்டது. பண்டிகையும் அதனுடைய தமாஷாக்களுடன் கொண்டாடப் பட்டு விட்டது. ஆனால் உலகத்திலுள்ள எத்தனை குடும்பங்களில், எத்தனை பேருடைய இதயங்களில் அமைதி நிலவி யிருக்கிறது? மகிழ்ச்சி குடி கொண்டிருக்கிறது? ஆகாயத்திலிருந்து வெடி குண்டு வந்துவிழுமோ வென்ற அச்சம் சில நாடுகளில்; வயிற்றுக் கில்லையே என்ற புலம்பல் சில நாடுகளில்; உரிமைச் சக்திகள் உறுமுகின்றன ஒரு புறத்தில்; அடிமைச் சக்திகள் அல்மருகின்றன மற்றொரு புறத்தில். சாந்தமும் சந்தோஷமும் எங்கே?

தற்போது, ஐரோப்பாவில்—ஆம்; கிறிஸ்துவர்கள் நிரம்பியுள்ள ஐரோப்பாவில் தான்—இந்தக் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் போது, எத்தனையோ குடும்பங்கள் துக்கக் கொண்டாட்டந்தான் கொண்டாடி யிருக்க முடியும். அநேக குடும்பங்களின் போஷணை கர்த்தர்கள், வாழ்க்கையின் சுவையை அனுபவியாத இளைஞர்கள், லட்சக் கணக்கில் யுத்தகளத்திற்குச் சென்று விட்டார்க ளல்லவா? அநேக வீடுகள் சூனிய மாகவே கிடக்கின்றன. அநேக தாய்மார்கள் என் மகனெங்கே, என் கணவனெங்கே, என் சகோதர னெங்கே என்று தான் கதறிக் கொண்டிருப்பார்கள். அமைதியாக இருந்து இயேசு நாதரைத்தொழ அவர்கள் இதயம் இடங்கொடுக்குமா? அது தான் துக்கப்போர்வையைப் போர்த்துக் கொண்டிருக்கிறதே.

கிறிஸ்து நாதர் அவதரித்தது விருந்து காலம் நீடிக்க நீடிக்க, தலைமுறைகள் கழியக் கழிய, அவருடைய புனிதவாழ்க்கைம் அவருடைய தருமோபதேசங்களும் மனிதர்களிடமிருந்து எட்டி எட்டிப் போகின்றனவோ வென்று அஞ்சுகிறோம். உலகத்தில் கடவுளின் ராஜ்யத்தை ஸ்தாபிக்கத்தோன்றிய எம்பெருமான், இப்பொழுது ஒரு முறை இந்த 1940ம் வருஷத்து நிலவுலகத்திற்கு வந்து பார்ப்பாரானால், 'அந்தோ! சாத்தான் ராஜ்யமல்லவோ ஸ்திரப் பட்டு விட்டது' என்று ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துப் போவார்.

கிறிஸ்து நாதர், அனைவரிடத்திலும் பணிவாக நடந்து கொள் என்று உபதேசித்தார். 'எவனொருவன் அனை

வருக்கும் முதலில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறானோ அவன் அனைவருக்கும் கடைசியில் இருக்க வேண்டும்; அனைவருக்கும் தொண்டனாக இருக்க வேண்டும்' என்பது அவருடைய திருவாசகம். ஆனால் இன்றைய கிறிஸ்தவ நாடுகளில் என்ன மிடுக்கு! என்ன அகம்பாவம்! பிறரை அடக்கியாள வேண்டுமென்ற ஆவல் எவ்வளவு நிரம்பி யிருக்கிறது!

'சத்துருக்களையும் நேசி; உன்னைத் துன்புறுத்துகிறவர்களுக்காகப் பிரார்த்தனை செய்' என்றார் கிறிஸ்துநாதப் பெருமான். இன்றைய ஐரோப்பாவில்—! அதை எப்படி வருணிப்பது! மௌனமாயிருந்து விடுதல் நல்லதல்லவா?

உலகத்திலே அவதரித்த மகா புருஷர்களில், சமாதானத்திற்காகப் பாடுபட்ட பெருமை கிறிஸ்து நாதருக்கு உண்டு. ஆனால், அவரைப் பின்பற்றுவோர்தான், இன்று உலக சமாதானத்தைக் குலைத்து வருகின்றனர். கிறிஸ்துவர்கள், கிறிஸ்துவர்கள் மீது போர் தொடுக்கிறார்கள்; கிறிஸ்தவரல்லாதார் மீதும் யுத்தஞ் செய்கிறார்கள். இவர்கள் வசிக்கும் நாடுகளிலுள்ள மாதாகோவில்களில் மணியடித்துக் கொண்டுதானிருக்கின்றது; பாதிரிமார்கள் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்து கொண்டுதானிருக்கிறார்கள். கிறிஸ்து நாதர் எங்கே! கிறிஸ்துவ தர்மம் எங்கே!

ஆயினும் கிறிஸ்துவ தர்மம் இறந்து படவில்லை; அஃது இறந்து படவும் படாது. கிறிஸ்து நாதர், ஒரு சாராருக்கு மட்டும் உபதேசம் செய்து விட்டுப் போகவில்லை. எல்லாப் பிரிவினரும் எல்லாக் காலத்திலும் அனுஷ்டிக்கக் கூடிய உண்மைகளை அவர் அருளியிருக்கிறார். அதனாலேயே கிறிஸ்துவர்கள் என்று நாமஞ் சூட்டிக் கொள்ளாத பலரும், கிறிஸ்துவ தர்மத்தின் முக்கியமான அம்சங்களைத் தங்கள் வாழ்க்கையில் நடத்திக் காட்டி வருகிறார்கள். அநேக கிறிஸ்துவர்கள், மகாத்மா காந்தியை ஒரு சிறந்த கிறிஸ்தவர் என்று போற்றிவர வில்லையா! காந்தியடிகளைப் போன்ற உண்மையான கிறிஸ்தவர்கள் உலகத்தில் இன்னும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் சிறுபான்மையோரா யிருக்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் அவர்களால் தான், உலகம் இந்த அளவுக்காவது வாழ்ந்து கொண்டிருக்கிறது. இயேசு நாதர், அவர் காலத்தில் எவ்வாறு பரிகசிக்கப் பட்டுத் துன்புறுத்தப் பட்டாரோ அதைப் போல் அவருடைய உண்மைச் சிஷ்யர்களும் ஏளனம் செய்யப் படலாம்; ஹிம்சிக்கப் படலாம். ஆயினும் அவர்கள் உலகத்தை நேசித்துக் கொண்டு தானிருப்பார்கள்; அன்பு உபதேசத்தைச் செய்து கொண்டு தானிருப்பார்கள். அவர்களுடைய முயற்சிகள், வெளிப்பார்வைக்கு எவ்வித பயனையும் கொடுக்கவில்லை போல் தோன்றலாம். ஆனால் மனிதர்களுடைய அன்றாட வாழ்க்கையில், ஒரு சமய மில்லா விட்டாலும் மற்றொரு சமயம் ஆழ்ந்த முத்திரையை இட்டுச் செல்லும் என்பது நமது திடமான நம்பிக்கை. மார்ட்டின் லூதரும், செயிண்ட் பிரான்சிஸ் ஆப் அஸிஸியும், ஸவனரோலாவும், இப்படி அநேக கிறிஸ்துவ மகான்கள், அவர்கள் காலத்தில் எவ்வளவு துன்புற்றார்கள்! எவ்வளவு பரிகாசத்துக்குள்ளானார்கள்!

ஆனால் அவர்களுடைய சேவையும், தியாகமும் இன்று, உலகத்தின் பல பாகங்களிலும் பிரதிபலிக்கவில்லையா?

இன்றைய உலக நிலையைப் பார்த்தால் யாருக்குமே ஒரு மலைப்பு ஏற்படத்தான் செய்யும். 'இந்தப் பேய் உலகம் நன்மையடையப்போகிறதா?' என்ற சந்தேகந்தான் தோன்றும். 'தீமையிலிருந்து நன்மை உண்டாகும்' என்ற வாசகம் பழமொழியளவில்தான் இருக்கிறதே தவிர, அநுபவத்தில் காணோமே யென்று தான் யாரும் கேட்பார். ஆனால் மனிதன், நம்பிக்கையில்தான் வாழ்கிறான். நம்பிக்கையை இழந்து விட்ட மனிதனுடைய வாழ்க்கை, ஒன்றுமில்லாத சூனியந்தான். ஆகையால், புதிய வருஷத்தில், கிறிஸ்துவ தர்மம், உலகமெங்கணும்-சிறப்பாக ஐரோப்பாவில்—நிலவும் என்று நம்பிக்கை கொள்வோமாக. கிறிஸ்து நாதர் எங்கே எங்கே யென்று ஒவ்வொருவரும் தேடி, அந்தத் தேடுகிற அலைச்சலிலே, உலகப் பிணக்குகளை மறந்து விடுவோமாக. இயேசு நாதர் வாழ்க! கிறிஸ்துவ தர்மம் செழிக்க!

* * *

பழசு !

1939ம் வருஷம் இனிப் பழைய வருஷந்தானே. அந்த வருஷம் உலகத்தில் நடைபெற்ற சம்பவங்களை நினைவுக்குக் கொண்டு வருகிற போது, உண்மையில் பழமை யெல்லாவற்றையுமே மறந்து விடுவோமா என்ற ஆத்திரம் உண்டாகிறது. 1938ம் வருஷத்திற்கு விடை கொடுத்து, 1939ம் வருஷத்தை நாம் வரவேற்ற போது, 'இந்த வருஷத்தை நாம் அவநம்பிக்கையோடுதான் பார்க்கிறோம்' என்றும் '1938ம் வருஷத்தைப் போலவே, 1939ம் வருஷமும் ஒரு தினுசாகக் கழிந்து விட்டால் போதுமானது என்ற திருப்தியோடுதான் 1939ம் வருஷத்தை நாம் வரவேற்கிறோம்' என்றும் குறிப்பிட்டிருந்தோம். துரதிர்ஷ்டவசமாக நாம் கொண்ட அவநம்பிக்கை ஊர்ஜிதமாகி விட்டது. யுத்தச் சூறாவளியிலே அகப்பட்டு உலகம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. உலகத்தை உத்தாரணஞ் செய்வதற்காக நூற்றாண்டுகளுக்கொரு முறை மகான்கள் அவதரிப்பார்கள் என்று சொல்வதுண்டு. ஆனால் இருபதாவது நூற்றாண்டு நாகரிக தருமப்படி, உலகத்தில் அவ்வப்பொழுது ஏற்பட்டு வருகிற கல்மஷங்களைத் துடைத்துக் கொண்டு போக, யமதர்ம ராஜன் கால் நூற்றாண்டுக்கொரு தரம் அவதரிக்கிறானோ என்ற சந்தேகம் நமக்கு உண்டாகிறது. 1914ம் வருஷம் தொடங்கிய யுத்தத்தை 'மஹா' என்று அடைமொழி கொடுத்து அழைத்தார்கள். ஆனால் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற யுத்தமானது 'மஹா மஹா' யுத்தமாகத் தோன்றி உலகத்தை சூறையாடி வருகிறது. சுதந்திரமும் நாகரிகமும் சிறைப்பட்டு விட்டன. ஐரோப்பாவிலுள்ள சிறிய நாடுகள், ஒன்றன் பின்னொன்றாகத் தங்கள் கடைசி மூச்சை விட்டுக் கொண்டு வருகின்றன. மற்றவர்களுடைய வாக்குறுதியை நம்பி வாழ்வது, இனிச் சிறிய நாடுகளுக்குத் துர்லபமாகி விட்டது.

1939ம் வருஷம் மார்ச் மாதம் 31ந் தேதி, ஸ்ரீ சேம்பர்லேன், காமன்ஸ்

சபையில் பேசிய போது, ஜெர்மனியால் போலந்து தாக்கப்படுமானால் அதனைக் காப்பாற்ற பிரிட்டனும் பிரான்ஸும் ஒற்றுமைப்பட்டிருக்கின்றனவென்று உறுதி கூறினார். ஆனால் போலந்து போய் விட்டது. அதனை ருஷ்யாவும் ஜெர்மனியும் பங்கு போட்டுக் கொண்டு விட்டன. உதவி செய்வதாக உறுதியளித்த ஸ்ரீ சேம்பர்லேன் ஆறுவது மாதத்தில், போலிஷ் மக்களுக்கு அநுதாபம் செலுத்தி விட்டார். ஆனால், போலிஷ் அரசாங்கம் இன்னும் இருக்கிறது! அதுதான் ஆச்சரியம். எங்கே? ஜெக்கோஸ்லோவேகியா அரசாங்கம் இப்பொழுது டாக்டர் பெனேஷினுடைய ஜனநாயக தத்துவார்த்தப் பிரசங்கங்களிலே எப்படி உயிர் வைத்துக் கொண்டிருக்கிறதோ, அப்படிப் போல, போலிஷ் அரசாங்கமும், மேற்கு வல்லரசுகளின் கற்பனையிலே, கற்பனையில்லாத" கவியைப் போல ராஜ்யமும், பிரஜைகளும் இல்லாத அரசாங்கமாக வாழ்ந்து கொண்டிருக்கிறது.

பின்லாந்து இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறதா அல்லது வீழ்ந்து விட்டதா வென்பது நமக்குத் தெரியாது. ஆனால் இனி அது தனித்து வாழ முடியாது. அதன் குடியரசுத் தலைவர் சர்வ தேச சங்கத்தின் பக்கமாக ஒரு கையையும், மற்ற வல்லரசுகளின் பக்கமாக மற்றொரு கையையும், ஆக இரண்டு கைகளையும் ஒருங்கே நீட்டிக் கொண்டு 'உலக மெல்லாம் ஒன்று திரண்டு வந்து எங்களுக்கு உதவி செய்வதாக' என்று உரக்கக் கூவலாம். உலகத்தின் பூரண அநுதாபமும் அதற்குக் கிடைக்கும்; உதவி மட்டும் கிடைக்காது. கிடைக்கலாம். துருப்பிடித்த சில யுத்த தளவாடங்களும், சொற்பப் பணமும் நிச்சயமாகக் கிடைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் பின்லாந்தும் அதன் சுதந்திரமும் காப்பாற்றப்படவேண்டுமென்ற கவலையோடு, தங்கள் சுய உரிமைகளைப் பணயமாக வைக்கக் கூடிய நாடுகள் உலகத்திலே எத்தனை இருக்கின்றன வென்று நாம் கேட்கிறோம். பின்லாந்துக்கு மட்டுந்தான் இந்தக் கதியா வென்று சிலர் கேட்கலாம். இல்லை. பால்டிக் கடலோரமாயுள்ள எல்லாச் சிறிய நாடுகளுக்கும் இந்தக் கதிதான் ஏற்படக் கூடுமென்று நாம் அஞ்சுகிறோம். லாட்வியா, எஸ்தோனியா, லிதுனியா முதலிய நாடுகள், சவலைக் குழந்தைகள் போல் உயிர் வைத்துக் கொண்டிருக்கின்றன. இவைகளைப் பெற்றெடுத்த வார்சேல்ஸ் உடன்படிக்கை எப்பொழுதோ மரித்து விட்டது. இவைகளைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சர்வதேசசங்கமோ ஜீவகளையில்லாமல் இருக்கிறது. இந்த நிலைமையில், ருஷ்யக் காடியின் நிழலிலே இவை எவ்வளவு காலம் தனித்து வாழ்ந்து கொண்டிருக்கப் போகின்றன? ருஷ்யாவை விலக்கிவிட்ட தீர்மானம் சர்வ தேச சங்கத்தில் பிரேரிக்கப்பட்ட போது, நார்வே, ஸ்வீடன், லிதுனியா, எஸ்தோனியா, லாட்வியா முதலிய நாடுகள் ஓட்டுப்போடாமல் நடுநிலைமை வகித்து விட்டனவென்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

ஆங்கிலோ—சோவியத் ஒப்பந்தம் பேச்சளவிலே தான் நின்றுவிடுமோ வென்று சென்ற வருஷம் ஜூலை

மாதம் (சுடர் 2—கதிர் 12) நாம் சந்தேகப்பட்டோம். ஆம். அது பேச்சளவோடுதான் நின்று விட்டது. ஆனால் இதன் தொடர்பாகவே, ருஷ்ய—ஜெர்மானிய ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. ஐரோப்பிய ராஜதந்திர சூத்திரக்கயிற்றின் மீது கை வைத்துக் கொண்டிரா தவர்களுக்கெல்லாம் இஃது ஓர் அதிர்ச்சியை உண்டுபண்ணியது. பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும், ருஷ்யாவோடு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் உண்மையிலேயே இருந்ததா வென்ற சந்தேகம் சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஒரு சிறிய விஷயத்தை மட்டும் எடுத்துக் காட்டி இந்தச் சந்தேகத்தைப் போக்கிவிட விரும்புகிறோம். 1939ம் வருஷம் ஏப்ரல் மாதம் 15ந் தேதியிலிருந்து ஜூலை மாதம் 27ந் தேதி வரை—அதாவது 104 நாட்கள்—ஆங்கிலோ—பிரெஞ்சு பிரதிநிதிகளுக்கும் ருஷ்யப் பிரதிநிதிகளுக்கும் ஒப்பந்தப் பேச்சுகள் நடைபெற்றன. இந்த 104 தினங்களில், 20 தினங்கள் தான், ருஷ்யப் பிரதிநிதிகள், தங்களுடைய யோசனைகள், திட்டங்கள், பிரேரணைகள், பதில்கள், பதிலுக்குப் பதில்கள் முதலியவைகளைத் தயாரிக்க எடுத்துக் கொண்டனர். பிரிட்டிஷ்-பிரெஞ்சுப் பிரதிநிதிகள் மிகுதி 84 நாட்களை எடுத்துக் கொண்டனர். இதற்கு நாம் எவ்வித வியாக்கியானமும் செய்ய விரும்பவில்லை.

இன்னொரு சந்தேகமும் சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. 23-8-39ல் தான், ருஷ்யாவுககும் ஜெர்மனிக்கும் முதன் முதலாக அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிற தென்று சிலர் கருதுகின்றனர். அப்படியில்லை. திடீரென்று இந்த நட்பு ஏற்படவில்லை. ஹிட்லர், ரூஸ்வெல்ட்டைப் பல முறை கண்டித்துப் பேசியிருக்கலாம். ஸ்டாலினும், ஏகாதிபத்திய வல்லரசுகளோடு ஜெர்மனியையும் சேர்த்துக் கூறியிருக்கலாம். ஆனால் இரண்டு நாடுகளுக்குமுள்ள அரசியல் தொடர்பு, சுமார் பதினேழு வருஷங்களாக ஒரே மாதிரியாகவே இருந்துகொண்டு வந்திருக்கிறது. 1914ம் வருஷத்து மகா யுத்தம் முடிந்த பிறகு, முதன் முதலாக ஜெர்மனிதான் ருஷ்யாவுடன் சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டது. 16-4-1922ல் நிறைவேறிய இந்த ஒப்பந்தத்திற்கு 'ராபல்லோ ஒப்பந்தம்' என்று பெயர். இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட காலத்தில், பிரான்ஸும் பிரிட்டனும் திகைத்துப் போய் விட்டன. இந்த 'ராபல்லோ ஒப்பந்தம்' மீண்டும் 1926ம் வருஷத்திலும் 1933ம் வருஷத்திலும் புதுப்பிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தங்களின் இயற்கையான விளைவுதான் 1939ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 23ந் தேதிய ஒப்பந்தம். ஆதலின் இதைப்பற்றியும் நாம் அதிகமாக வியாக்கியானம் செய்ய விரும்பவில்லை.

1939ம் வருஷம், ஜெர்மனி மிகவும் பருத்து விட்டதென்று கூற வேண்டும். 1939ம் வருஷம் ஹிட்லர் பதவி யேற்றுக் கொண்ட காலத்தில் ஜெர்மன் ஏகாதிபத்தியம், 182,000 சதுரமைல் விஸ்தீரணமுடையதாகவும், 63,181,000 ஜனத்தொகை யுடையதாகவும் இருந்தது. 1939ம் வருஷக்கடைசியில், இந்த ஏகாதிபத்தியம், ஏறக்குறைய 343,740

சதுரமைல் விஸ்தீரண முடையதாகவும், 99,?52,5000 ஜனத் தொகை யுடைய தாகவும் பருத்திருக்கிறது. அதாவது ஆறு வருஷ காலத்திற்குள் விஸ்தீரணத்தில் ஒன்றுக்கு இரண்டு மடங்கும், ஜனத்தொகையில் ஒன்றுக்கு ஒன்றரை மடங்கும் அதிகமாக வளர்ந்திருக்கிறது. இனி, இது வளர்ச்சியுறுமா வென்பது சந்தேகம். போலந்து ஆக்ரமிப்பின் போது, ருஷ்யா பங்குக்கு வாராமல் சும்மாயிருந்திருக்கு மானால், ஜெர்மனியின் வளர்ச்சி, தென் கிழக்கு ஐரோப்பாவின் பக்கம் நீடித்துக் கொண்டு போயிருக்கும். இப்பொழுது நடைபெறுகிற யுத்தத்தில் அஃது எப்படித் தேறி வருகிறதோ அதைப் பொறுத்தே அதன் எதிர்கால வாழ்வு இருக்கும். அதன் வாழ்வு மட்டுமல்ல, ஐரோப்பாவின் வாழ்வும், இந்த யுத்தத்திற்குப் பிறகு மாற்றியமைக்கப் படுமென்று கருதுகிறோம். அப்படித் தான் மாற்றியமைக்கப் படவும் வேண்டும்.

பின்லாந்தின் மீது படையெடுத்த குற்றத்திற்காக, ருஷ்யா சர்வதேச சங்கத்தினின்று விலக்கப்பட்டு விட்டது. 1933ம் வருஷம் வரையில், அமெரிக்காவும் ருஷ்யாவும் தவிர்த்து மற்ற எல்லாப் பெரிய நாடுகளும் சிறிய நாடுகளும் சர்வதேச சங்கத்தில் அங்கம் வகித்தன. 19?3ம் வருஷம், மஞ்சூரிய ஆக்ரமிப்பை வியாஜமாக வைத்துக் கொண்டு ஜப்பான், மேற்படி சங்கத்தினின்று விலகியது. பின்னர், அதே வருஷம் ஜெர்மனியும் விலகியது. இந்த நிலைமையில், உலக சமாதானத்திற்கு எந்த விதத்திலேனும் பங்கம் வந்து விடப் போகிறதே யென்று அஞ்சி, பிரெஞ்சு அரசாங்கம், ருஷ்யாவோடு பரஸ்பர உதவி ஒப்பந்தம் செய்து கொள்ள முயன்றதோடு, சர்வதேச சங்கத்தில் சேருமாறும் அதனைத் தூண்டியது. அப்படியே, 1934ம் வருஷம் செப்டம்பர் மாதம் ருஷ்யா சர்வ தேச சங்கத்தில் சேர்ந்தது. அப்படிச் சேருகிறபோது, ஏதோ பெரிய நன்மையை எதிர் பார்த்துச் சேரவில்லை. சர்வதேச சங்கம், பெரும்பாலும் ஆங்கிலேர்—பிரெஞ்சு ஆதிக்கத்தி லிருக்கிறதென்பதைத் தெரிந்து கொண்டுதான் அதில் அது சேர்ந்தது. 1934ம் வருஷத்திற்குப் பிறகு தான், அபிசீனியா, ஸ்பெயின், ஆஸ்திரியா, ஜெக்கோ—ஸ்லோவேகியா, அல்பேனியா முதலிய நாடுகள் வல்லரசுகளுக்கு இரையாயின. இப்படி இரையான நாடுகளுக்குச் சர்வதேச சங்கம் எவ்வித உதவியையும் செய்யவில்லை. அதே சங்கம், 1939ம் வருஷம் டிசம்பர் மாதம், ருஷ்யாவை விலக்கி யிருக்கிறது. ருஷ்யாவின் மீது எத்தனை குற்றங்கள் வேண்டுமானாலும் சாட்டலாம். ஆனால், சர்வதேச சங்கத்தில் அஃது அங்கத்தினராயிருந்த காலம் வரையில், அதன் விதிகளை மீறி நடந்திருக்கிற தென்று அதன் மீது யாரும் குற்றஞ் சாட்டமாட்டார்க ளென்றே கருதுகிறோம். ருஷ்யாவைப்பற்றி, இது காறும் கிரேட் பிரிட்டன் எவ்வித அபிப்பிராயத்தையும் தெரிவிக்கவில்லை. சமீபத்தில், ஆங்கிலேர்—ருஷ்ய சிநேகம் எப்பொழுதும்போல் இருந்து கொண்டிருக்கிற தென்ற செய்தி மட்டும் வெளிவந்தது.

பிரிட்டனுடைய யுத்த நோக்கங்களென்ன வென்பதை அறிய வேண்டு

மென்ற ஆவல், இந்தியாவில் மட்டு மல்ல; இங்கிலாந்திலும் இருக்கிறது. ஆனால் இந்த ஆவல் இதுகாறும் தணிக்கப்படவே யில்லை. ஹிட்லரிஸத்தை ஒழிப்பது ஒரு நோக்கமா யிருக்கலாம், ஆனால் அஃது எதிர்மறை நோக்கந்தான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், அதன் ஆதிக்கத்திலுள்ள மற்ற நாடுகளும், யுத்தத்திற்குப் பின்னர் எந்தவிதமான தொடர்புடையதா யிருக்கு மென்பதை முறையே தெரிவிக்க வேண்டும்; தெரிந்து கொள்ளவும் வேண்டும். இந்த யுத்தத்தில் ஜன நாயக சக்திகள் வெற்றி பெற வேண்டுமென்பதுதான் எல்லாருடைய அபிப்பிராயமும். அப்படியானால், அந்த வெற்றிக்கு எல்லாருடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பும் தேவையல்லவா? இதைப் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் விரைவில் உணர்தல் நல்லது.

முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகளாயுள்ள சக்திகளெல்லாம், ஒரு யுத்தம் ஏற்பட்டால் நசித்துப் போகுமென்று அறிஞர்கள் கூறுவார்கள். அது போல், தற்போதைய யுத்தம், பிற்போக்கான சக்திகளைத் துடைத்துப் போட்டு, உலகத்தைச் சுத்தஞ் செய்யும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம். இந்த யுத்தத்தையே வியாஜமாக வைத்துக்கொண்டு, மனிதனுக்கும், மனிதனுக்கும் தேசத்திற்கும் தேசத்திற்கும் இடையிலே தோன்றியுள்ள அவநம்பிக்கைச் சுவர்களைத் தகர்த்தெறிய வேண்டும். மனிதன், விஞ்ஞானத்திற்கு அடிமையாகி விட்டான். யுத்தத்திற்குப் பிறகேனும், மனிதன், விஞ்ஞானத்தை அடக்கியாள்வானாக. அதற்கு இந்த யுத்தமே ஒரு கருவியாகவும், துணையாகவும் இருக்குமாக.

நமது தாய் நாட்டுக்கு வருவோம். இங்கே பிரவேசித்த மாத்திரத்தில், சுற்றிச் சுற்றி வருகிற உணர்ச்சிதான் நமக்கு ஏற்படுகிறதே தவிர, முன்னேறுகிற உற்சாகம் உண்டாகவில்லை. முன்னேறவில்லையே யென்ற ஏக்கந்தான் உண்டாகிறது. நமது எழுதுகோல், இந்த வாக்கியங்களை எழுதிக் கொண்டு வருகிறபோது 1929ம் வருஷம் அ. இ. கா. கமிட்டி நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தின் வாசகம் ஞாபகத்திற்கு வருகிறது.

> இந்திய மகா ஜனங்களுடைய அதிக வறுமைக்கும் துயரத்திற்கும் காரணம் அந்நியர்களின் சுரண்டுதல் மட்டு மல்ல; இந்திய ஜன சமுதாயத்தின் பொருளாதார அமைப்பும் ஒரு காரணம். தங்களுடைய சுரண்டுதல், தொடர்ந்து நடைபெற வேண்டு மென்பதற்காக, அந்நிய ஆட்சியினர், இந்தப் பொருளாதார அமைப்பை ஆதரித்து வருகின்றனர். ஆதலின், இந்த வறுமையையும் துயரத்தையும் போக்கி, பாமர ஜனங்களின் நிலைமையை உயர்த்தும் பொருட்டு, சமுதாயத்தின் தற்போதைய பொருளாதார அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது அவசிய மாகும்.

இந்தத் தீர்மானம் நிறைவேறி பத்து வருஷங்களாகின்றன. சமுதாயத்தைத் திருத்தி யமைக்கிற விஷயத்திலோ, அதற்கு அடிப்படையாயுள்ள அரசியல் அதிகாரத்தைக் கைப் பற்றும் விஷயத்திலோ நாம் எவ்வளவு தூரம் முன்னேற்ற மடைந்திருக்கிறோம் என்பதை வாசகர்களின் தீர்ப்புக்கே விட்டு விடுகிறோம்.

1939ம் வருஷத்துத் திரையில், ராஜகோட்டை, காந்தியடிகளின் உப

(இதன் தொடர்ச்சி 42ம் பக்கம் பார்க்க)

காந்தியடிகளும் காங்கிரஸும்

—பாபு பகவான் தாஸ்
M. A. D. Litt.

இருபதாவது நூற்றாண்டின் முதல் நாற்பது வருஷ சரித்திரமானது, பல முக்கிய சம்பவங்களையுடையதாயிருக்கிறது. ஒரு சிலருடைய பெயர்களைச் சுற்றியே இந்தச் சரித்திரம் பிற்காலத்தில் எழுதப்படுமென்பது நிச்சயம். இந்த ஒரு சிலரில் மகாத்மா காந்தி, முக்கியமானவர் என்பதில் யாதொரு ஆட்சேபமும் யாருக்கும் இருக்க முடியாது. ஏனென்றால் அவர் ஒருவர்தான், அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் அஹிம்சா தர்மத்தைக் கொண்டு புகுத்தினவர். புத்தருக்குப் பிறகு, மஹாத்மா காந்தியைத்தான் சொல்ல வேண்டும். எதிர்காலத்துச் சரித்திராசிரியர்கள், தாங்கள் எழுதும் சரித்திரங்களில் காந்திக்குச் சமதையாக வேறு யாரையேனும் சேர்த்து எழுதலாமோ என்னவோ? அதைப்பற்றி இப்பொழுது நமக்குக் கவலையில்லை. ஆனால் இப்பொழுது—நிகழ் காலத்தில், மஹாத்மா காந்தியின் சக்தி தனித்துவம் பொருந்தியதாய் இருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. இதனால், இயற்கையாகவே அவரிடத்தில் எனக்கு ஒரு பக்தி ஏற்பட்டிருக்கின்றது. அவருடைய தபோ பலத்தில் நான் ஈடுபட்டுவிட்டேன். இந்தியாவின் முன்னேற்றத்திற்காக ஆத்ம பலம் தேவை என்று அவர் கூறுவது எவ்வளவு மகத்துவம் வாய்ந்ததாயிருக்கிறது? மற்றும் இந்தியாவின் அரசியல் விவகாரங்களில் அவர் தலைமை வகித்து நடத்துவதும் எனக்கு நிரம்பப் பிடித்திருக்கிறது. அவரிடம் காணப்படும் பரிசுத்தத் தன்மை, எல்லாரிடத்திலும் அவர் காட்டும் கருணை, தன்னடக்கம் முதலியன பலவும், அவரிடத்தில் யாரையும் இழுக்கச் செய்கின்றன. அவருடைய பெருந்தன்மை, எல்லாரிடத்திலும் அவர் காட்டும் மரியாதை, இந்தியாவின் நலனுக்காக அவருடைய மனமும் தேகமும சதா வேலைசெய்து கொண்டிருப்பது இவை அனைத்தையும், அவருடைய சத்ருக்களும் பாராட்டுகின்றனர். அது மட்டுமல்ல; அவர்கள் இவருடைய வழிக்கு இணங்கியும் வருகின்றனர்.

இந்த மனோ நிலைமையுடன்தான் நான் இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். இந்தச்சந்தர்ப்பத்தில், அவரை முன்னிலைப்படுத்திச் சிலபக்தி மலர்கள் தூவுவதோடு நான் திருப்தியடைய

விரும்பவில்லை. இந்த மாதிரி தாம் அர்ச்சிக்கப்படுவதைக் கண்டு, மகாத்மா காந்திக்கு சலிப்பு ஏற்பட்டிருக்கும் என்பது நிச்சயம். ஆகையால், இந்தச் சமயத்தில் நான் சில யோசனைகளைக் கூற விரும்புகிறேன். அப்படி நான் யோசனை கூறுவதானது, நான் அதிமேதாவி என்ற எண்ணங்கொண்டல்ல. நமது நாட்டின் புராதன நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டே இவற்றைக் கூறுகிறேனே யன்றி வேறல்ல.

நான்கு வருஷத்துக் கடுமையான வேதனையிலிருந்து, உலகமானது 1918ம் வருஷம் மீண்டெழுந்தது. ஆனால் அது மீண்டும் அந்த யுத்த நரகத்திற்கே சென்று கொண்டிருக்கிறது. ஸ்பெயின், உள் நாட்டு யுத்தத்தினால் சிதைக்கப்பட்டு விட்டது. பிராங்கோவும், பாஸிஸமும் அங்கு வெற்றி பெற்றுவிட்டன. இருப்பதா, இறப்பதா என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டே, சீனா, ஜப்பானுடன் போராடிக் கொண்டிருக்கிறது. இந்தியாவோ, அடிமைப்பட்டு, வறுமைப்பட்டு, ஆன்ம சக்தியிழந்து, அரசியல்—பொருளாதாரத் துறையில் அஹிம்சா தர்ம யுத்தத்தை நடத்தி வருகிறது. ஆனால் இடையிடையே வகுப்புக் கலவரங்களும் ஏற்பட்டு வருகின்றன. இந்தியத் தலைவர்களுடைய செய்கைகளினாலும், பிரிட்டிஷ் ராஜ தந்திரத்தின் செய்கையினாலும் உண்டான விளைவுகள் இவை. இரண்டு மதங்களினுடையவும் (ஹிந்து முஸ்லீம்) உண்மையான தத்துவங்கள் மறக்கப்பட்டுப் போனதோடுகூட, சிதைக்கப்பட்டும் போயின. இதனை, பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள், தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்கிறார்கள். இரண்டு சமூகத்தினருக்கும் பொதுப் படையான நன்மைகள் ஒன்றுமேயில்லை யென்றும், ஒரு சமூகத்தாரை வீழ்த்தித்தான் மற்றொரு சமூகத்தார் வாழ முடியு மென்றும் எண்ணங்கள், மேனாட்டு எண்ணங்களின் சாயலைத் தழுவி யிருக்கின்றன. கடைசியில், 1930ம் வருஷத்திலிருந்து 1933ம் வருஷம் வரை லண்டனில் கூடிய மூன்று வட்டமேஜை மகா நாடுகளின் பயனாக, தனித்தேர்தல் தொகுதிகள் ஸ்திரப்படுத்தப் பட்டன. அரசாங்க நிருவாகத்தின் ஒவ்வோர் இலாகாவிலும் வகுப்பு வாத உணர்ச்சி தலைகாட்டத் தொடங்கியது. அரசாங்க உத்தியோகங்களில் சேருகிறவர்களோ, சாதாரண ஜனங்களைவிட புத்திசாலிகளாகவும், விஷயம் தெரிந்தவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களிடம், அரசாங்கத்தின் அதிகார பலம் வந்து சேர்கிறது. அதிகார பலம் என்றால், அது, எளியாருக்கு உதவி செய்வதாக இல்லாமல், அவர்களுடைய முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக வல்லவோ உபயோகிக்கப் படுகிறது. பிரிட்டிஷ் ராஜதந்திரிகள், இந்தியாவில் வகுப்பு வாரியாகத் தேர்தல் தொகுதிகள் ஏற்படுத்திய பிறகு, இந்தியாவில் வகுப்பு வாதப் பிரச்னையே முக்கிய பிரச்னை யாகப் போய் விட்டது.

23-3-39ல், ஓர் அமெரிக்கப் பத்திரிகை நிருபர், டெல்லியில் மகாத்மா காந்தியை பேட்டி கண்டு பேசினார். அப்பொழுது மகாத்மாவைப் பார்த்து அந்த நிருபர் 'உங்களுடைய விருப்பப்படி இந்தியா முன்னேறிக் கொண்

டிருக்கிறதா?' என்று கேட்டார். அதற்கு, மகாத்மா, நன்கு ஆலோசித்துப் பிறகு, பின்வருமாறு பதில் கூறினார்:—

'ஆம்; அது முன்னேறிக் கொண்டுதான் வருகிறது. ஆனால் சில சமயங்களில் எனக்கு அச்சமும் உண்டாகிறது. என்றாலும் அடிப்படையில் முன்னேற்றம் இருக்கத்தான் செய்கிறது. அந்த முன்னேற்றமும் திருப்தி யாகவே இருக்கிறது. ஹிந்து—முஸ்லீம் வேற்றுமைகள் தான், மிகவும் கஷ்டமான பிரச்னையாக இருக்கிறது. இதுதான் ஒரு பெரிய முட்டுக்கட்டை. இந்த விஷயத்தில், முன்னேற்றம் இருப்பதாக நான் காண முடியவில்லை ஆனால் இந்த பிரச்னைக்கு ஒரு திருப்திகரமான முடிவு ஏற்படத்தான் வேண்டும். பொது ஜனங்களுடைய மனப் பான்மையில் எவ்வித கோளாறும் இல்லை. ஏனென்றால், அங்குச் சுய நலம் என்பது இல்லை. இரண்டு சமூகத்தினருடைய அரசியல் குறைகளும் பொருளாதாரக் குறைகளும் ஒன்றுதான்.'

உண்மை. இரண்டு சமூகத்தினருடைய குறைகளும் ஒன்றுதான். அப்படியானால் அவர்—மஹாத்மா காந்தி—இந்த உண்மையை இரண்டு சமூகத்தினருக்கும் எடுத்துச் சொல்லி ஏன் ஒன்று சேர்த்து வைக்கக் கூடாது? இந்தப் பிரச்னை, தானாகவே தீர்ந்து விடும் என்கிறார். வாஸ்தவம். ஆனால் எப்படி? ஸ்பெயினைப் போலவா? அல்லது சமாதான முறையிலா? சமாதான முறையில் இந்தப் பிரச்னையைத் தீர்க்க ஏதேனும் செய்ய முடியுமா? 'பொது ஜனங்களுடைய மனப் பான்மை நன்றாக இருக்கிறது. ஏனென்றால் அது சுய நலமற்றது' என்கிறார் காந்தியடிகள். இது சரி தானா? இந்தியா, சீனா, ஜப்பான் முதலிய நாடுகளிலும், ஆசியாவின் மற்ற நாடுகளிலும், விவசாயிகளே, ஜனத்தொகையில் பெரும் பான்மையோரா யிருக்கின்றனர். இவர்கள், எங்குமே சுய நல முள்ளவர்களா யிருக்கிறார்கள். சரி, அப்படியே அவர்களுடைய மனப்பான்மை திருப்திகரமாகவும், சுய நல மற்றதாகவும் இருக்கிறதென்றே வைத்துக் கொள்வோம். ஆனால் அந்தப் பாமர ஜனங்கள் தத்தம் மதத்தின் சாராம் சங்களைப் பற்றியும் சமுதாய அமைப்பின் முக்கியமான சில அமிசங்களைப் பற்றியும் அறிந்து கொண்டி ருக்கிறார்களா? அல்லது அறிவிக்கப் பட்டிருக்கிறார்களா? இந்தச் சமூகப்பிரச்னை, சமாதான முறையில் தீருமா வென்பது சந்தேகப்படக் கூடிய விஷயந்தான். அப்படி இந்தப் பிரச்னையை அமைதியான முறையில தீர்க்க வேண்டுமானால், பாமர ஜனங்களுக்கு, எல்லா மதங்களின் சாராம்சங்களை எடுத்துச் சொல்லியும், சமுதாய உரிமைகளைப் பற்றி விளக்கிச் சொல்லியும் சரியான படி பிரசாரம் செய்ய வேண்டும்.

காங்கிரஸின் 'அரசியல் பொருளாதாரப் போராட்டம், ஸ்தூலமாகப் பார்த்தால் அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறதென்பது சரிதான். ஆனால் உண்மையில் அப்படியில்லை. காங்கிரஸுக்குள்ளேயே பல ஊழல்கள் இருக்கின்றன. காங்கிரஸ் உத்தியோகங்களுக்காக ஏற்படும் தேர்தல்களில், ஓட்டுப் பெட்டிகள் களவாடப்பட்டும், எரிக்கப்பட்டும் இருக்கின்றன. தடியடிப்

பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன. பலருக்குக் காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஓரிருவர் மரணமுமடைந்திருக்கின்றனர்.

'ஹரிஜன்' பத்திரிகையில் மகாத்மா காந்தி எழுதி வரும் கட்டுரைகளிலிருந்தே இவை வெளியாகின்றன. வேறு அத்தாட்சி தேவையில்லை. திரிபுரி காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட ஊழல் ஒழிப்புத் தீர்மானமும் இதற்கு அத்தாட்சியாகும். இதில் நாம் ஆறுதல் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், இன்னும் அதிகமான சேதங்கள் ஏற்படவில்லையென்பதுதான்.

பாமர ஜனங்களின் விழிப்புக்கென்று மகாத்மா காந்தியினால், தொடங்கப் பெற்ற இந்தச் சிறந்த இயக்கங்களெல்லாம் எப்படி வெற்றி பெற வேண்டுமோ அப்படி ஏன் வெற்றி பெறவில்லை? நிச்சயமாக, தலைமை ஸ்தானத்தில் ஏதோ பெரிய குறை இருக்கிறது. இங்கே ஒரு விஷயத்தை வற்புறுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது, இந்தியாவின் தற்போதைய நிலைமையில் மஹாத்மா காந்தியின் ஒத்துழையா இயக்கம் அல்லது சட்ட மறுப்பியக்கம்——எந்தப் பெயர் வைத்து வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளட்டும்——அதுதான் மிகச் சிறந்தது. இதில் சந்தேகமேயில்லை. இந்த முறையினால், மஹாத்மா காந்தி, இந்திய மகாஜனங்களுக்கு ஒரு மனோ தைரியத்தையும், சரியானதோர் ஆயுதத்தையும் அளித்திருக்கிறார். தவிர, இந்த முறை, இந்தியாவின் புராதன தர்மத்தை அநுசரித்ததாகவும் இருக்கிறது. தீங்கிழைத்தவருடைய வாசற்படியில் உட்கார்ந்து, அந்தத் தீங்குக்குப் பரிகாரந்தேடிக் கொடா விட்டால் இறந்து போவதென்று நிச்சயப்படுத்திக் கொள்வது, மரணம் வரையில் பட்டினி கிடப்பது, சட்டங்களை மறுப்பது, தேசத்தினின்று வெளியேறுவது, அரசனைத் திரஸ்காரஞ் செய்வது, அரசனைப் பகிரங்கமாகக் கண்டிப்பது முதலிய வைகளெல்லாம் அஹிம்சா தர்ம முறையில் அநுஷ்டிக்கப் படக்கூடிய ஆயுதங்கள் என்று நமது புராதன நூல்களில் கூறப் பட்டிருக்கின்றன. ஆயுதந்தரித்த யுத்தத்திற்கு அங்கீகாரம் அளிக்கப் பட்டிருக்கிறதே யாயினும் அது விசேஷ சந்தர்ப்பங்களில்தான்; சமாதான முறைகள் கைவிடப் பட்ட பிறகு தான்.

இந்தச் சிறந்த இயக்கங்களெல்லாம் வெற்றியுறுமற் போனதற்குக் காரணம் ஏதோ ஒரு பெரிய குறை இருப்பதுதான். ஔஷதத்தில் முக்கியமான ஒரு மூலிகை இல்லையாதலினால், அந்த ஔஷதத்தினால் வியாதி தீர மாட்டேனென்கிறது. மாகாண மந்திரிகள், பொது ஜனங்களின் நன்மைக்காக இன்னின்ன விஷயங்களில் சட்ட திட்டங்கள் நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று மகாத்மா காந்தியோ, காங்கிரஸ் தலைவர்களோ ஒரு திட்டம் வகுத்துக் கொடுக்கவில்லை. இனி, கூடப் போவதாகச் சொல்லப்படுகிற அரசியல் நிர்ணய சபை, தங்களுக்காக இந்த வேலையைச் செய்யும் என்று எதிர்பார்க்கிறார்கள். எல்லா மகாண மந்திரிச் சபைகளின் விஷயத்திலும் இந்த அதிருப்தி இருக்கிறது. இந்தக் குறைக்குப் பரிகாரந் தேட வேண்டு

மென்பதை எங்களிற் சிலர், காங்கிரஸ் தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தோம். ஆனால் எங்கள் முயற்சிகள் வீணாயின. ஆனால் இப்பொழுது காங்கிரஸைக் குள்ளேயே பிணக்குகள் ஏற்பட்டிருப்பதால், தலைவர்களும் பொது ஜனங்களும் இது விஷயத்தில் கவனஞ் செலுத்துவார்களென்று நம்புகிறேன். இந்த உட்பிணக்குகளை வளர்த்துக் கொண்டு போவோமானால், சென்ற இருபது வருஷ காலமாகக் காங்கிரஸ் செய்து வந்த வேலைகளெல்லாம் பயனற்றதாகி விடும். ஆகையால், தேசத்தில் ஒற்றுமையை நிலவச் செய்வது தலைவர்களின் முதற் கடமையாகும்.

காங்கிரஸ் மந்திரிகள் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை ‡ மதுபான விலக்கு, கல்வியைப் பரவச் செய்தல், விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்தல், உள்நாட்டுக் கைத்தொழில்களை ஆதரித்தல், சுகாதார வசதிகளை அதிகப் படுத்துதல், நோய்களைப் பரவவொட்டாமல் தடுத்தல் முதலிய துறைகளில் அரிய வேலைகளைச் செய்திருக்கிறார்கள். அரசாங்க நிரந்தர உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப் பின்மையாலும், காங்கிரஸ் கட்சிக்குள் காணப்படுகிற பலஹீனத்தினாலும், காங்கிரஸ் மந்திரிகள் இன்னும் அதிகமான வேலைகளைச் செய்து வெற்றிபெற முடியவில்லை. மற்றும் 'சுய ராஜ்யம்' என்னவென்பதைப் பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லாமலிருப்பது ஒரு பெருங் குறையாகும்.

மஹாத்மா காந்தியோ, பண்டித ஜவஹர்லால் நேருவோ, பாபு சுபாஷ் சந்திர போஸோ, வேறு எந்தக் காங்கிரஸ் தலைவரோ (சி. ஆர். தாஸைத் தவிர) 'சுயராஜ்யம்' என்றால் என்னவென்பதை இதுவரையில் பொதுஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல வேயில்லை. 1936 அல்லது 1937ம் வருஷம் வரையில், மகாத்மா காந்தி, சந்தர்ப்பம் வாய்த்த போது, தம்மைப் பொறுத்த மட்டில சுயராஜ்யம் என்றால் 'டொமினியன் அந்தஸ்து' என்று சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார். மேலே சொன்ன 23-3-39ந் தேதி பேட்டியில், சுயராஜ்யத்தைப் பற்றிப் பத்திரிகை நிருபர் கேட்ட போது 'அது விஷயமாக நான் எந்த நிலைமையில் இருக்கிறேன் என்பது எனக்கு விளங்கவில்லை' என்று கூறினார். எப்படியோ, 'டொமினியன் அந்தஸ்து' என்பது, பிரிட்டிஷ் அரசாங்க முறையின் மற்றொரு நகல் மாதிரி. அந்தப் பிரிட்டிஷ் அரசாங்க முறையோ, ஜனநாயகம் என்று சொல்லப் படுகிறதேயானாலும், அடிப்படையில் சுயேச்சாதிகாரமாயிருக்கிறது. இந்தியாவில் எந்தவிதமான அரசாங்க முறை இருக்க வேண்டுமென்பதைக்காட்டிலும் இந்தியாவின் சமுதாய அமைப்பு, வருங் காலத்தில் எப்படியிருக்க வேண்டு மென்பதே முக்கியமாகும். இதைப்பற்றி மகாத்மா காந்தி, இது வரையில் ஒன்றுமே சொல்லவில்லை.

1914ம் வருஷமோ என்னவோ—அப்படித்தான் எனக்கு ஞாப

‡ காங்கிரஸ் மந்திரிகள் ராஜீனாமா செய்வதற்கு முன்னர் இந்தக் கட்டுரை எழுதப் பட்டதென்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

—ஆசிரியர்.

கம்—புனுவில், இந்தச் சமுதாய அமைப்பு விஷயத்தைப் பற்றி மகாத்மா காந்தி கேட்கப் பட்ட போது, அதைப்பற்றித் தாம் ஒன்றுஞ் சொல்ல முடியாதென்று மறுத்து விட்டார். ஆனால் அவர், அடிக்கடி, 'எனக்கு தூரதிருஷ்டி கிடையாது'—'என்னைச் சுற்றி இருள் சூழ்ந்திருப்பதைக் காண்கிறேன்'—'எனக்கு முன்னிருந்த தன்னம்பிக்கை இப்பொழுது கிடையாது'—'சுயராஜ்ய திட்டம் ஒன்று என்னிடம் இருந்தால் அதை உடனே பொது ஜனங்களுக்குத் தெரிவிப்பேன்'—'பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படும் அரசியல் நிர்ணய சபைதான் தீர்மானிக்க வேண்டும்'—என்பன போன்ற வாக்கியங்களைச் சொல்லிக் கொண்டு வருகிறார். அப்படியானால், இந்தியாவுக்கு சுயராஜ்யம் தேவையா இல்லையா என்பதைக்கூட அந்த அரசியல் நிர்ணய சபையின் முடிவுக்கு விட்டு விடலாமே! சுயராஜ்யத்தைப் பற்றி மகாத்மா காந்தி கொண்டுள்ள அபிப்பிராயம், அவருடைய 'ஹிந்த் சுயராஜ்யம்' என்ற புஸ்தகத்தில் இருக்கிறது என்று சொல்லலாம். இதனுடைய சாரமெல்லாம் என்னவென்றால், தற்கால நாகரிக அம்சங்களாகிய இயந்திர வகைகள், ரெயில்வே, கப்பல், ஆகாய விமானம், மின்சாரம், மோட்டார், தந்தி, தபால், ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடங்கள், வைத்திய முறைகள் முதலியன வெல்லாம் கெட்டவை; இவைகளை அடியோடு விலக்க வேண்டும். இவைகளைச் சீர்திருத்தியமைப்பதென்பது முடியாது; கூடாது என்பதுதான். இதனின்று நாம் ஊகிக்க வேண்டியதென்ன வென்றால் புராதன இந்திய நாகரிக அம்சங்களாகிய கோயில்கள், சித்திர வேலைப் பாடுகள், காவிய ரசனைகள் முதலியனவும் தொலைய வேண்டுமென்பதுதான் அவருடைய அபிப்பிராயம் என்று தெரிகிறது. ஆரம்ப காலத்து விவசாய நாகரிகந்தான் நல்லதென்று அவர் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது. ஏனென்றால் கடவுளும் இயற்கையும் சேர்ந்து இதைத்தான் மானிட சமூகத்திற்கு அளித்திருக்கிறார்கள். ஆனால், 'நாகரிகமும்,' கலைகளும், விஞ்ஞான சாஸ்திரங்களும் இயற்கையின் சிருஷ்டிகள்தானே!

தாம் சத்தியத்தைக் காண்பிக்க முடியாதென்றும் சத்திய மார்க்கத்தையே காண்பிக்க முடியுமென்றும் மகாத்மா காந்தி பல முறை ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால் நமது பாரத தேசத்துப் பண்டைக்கால முனிவர்கள், சத்திய மார்க்கத்தைக் காண்பித்ததோடு, சத்தியத்தையும் காண்பித்தார்கள். உபநிஷதம், கீதை, மனு ஸ்மிருதி முதலியவைகளில் என்ன கூறப்பட்டிருக்கிறதோ அதையே மகாத்மா காந்தி, தமது 'ஹிந்த் சுயராஜ்யம்' என்ற நூலில் ஒருவாறு நுகர்ந்திருக்கிறார். வெறும் விவசாய நாகரிகத்திற்குத் திரும்பிச் சென்று விடுதல் போதுமா? வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் நுகர்ந்து, பரிசீலனை செய்து, அநுபவித்து விட்ட பிறகு, மனிதனுடைய புறத் தேவைகளையும், அகத்தேவைகளையும் பூர்த்தி செய்து விட்ட பிறகு, பழைய வாழ்க்கைக்குச் செல்வதென்றால் அதில் ஏதோ அர்த்தமிருக்கிறதென்று சொல்லலாம். மகாத்மா காந்தி, அடிக்கடி சுயராஜ்யத்தை

ராம ராஜ்யத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். அந்த ராமராஜ்யம் எப்படியிருக்கும் என்றும அவர் தெளிவாகச் சொல்லவில்லை. வால்மீக முனிவர் சிருஷ்டித்துப் போயிருக்கிற ராம ராஜ்யம், விவசாய நாகரிகம் கொண்டதாக இல்லையே. அங்கு விவசாய நாகரிகம் பெரும் பாகமாக இருந்ததென்னவோ வாஸ்தவம். ஆனால் எல்லாம் கிராமங்களாக இல்லையே; நகரங்களும் இருந்தனவே. வால்மீகியின் அயோத்திமா நகரமும், இலங்கா புரியும், இயந்திர நாகரிகம் நிரம்பப் பெற்றதாகவே இருந்தன.

இந்தியாவிலுள்ள இளைஞர் கூட்டத்தார், ருஷ்யா வென்றும் போலஷ்வெஸம் என்றும் பேசுகிறார்கள். கொஞ்சம் வயதானவர்கள், ஜனநாயகம் என்றும்,பிரிட்டனென்றும பேசுகிறார்கள். ஆனால் யாரும் நாஜீபத்தையும் பாசிஸத்தையும் வெறுக்கிறார்கள். இந்த 'இஸம்'களெல்லாம், தங்களுடைய தீவிரக் கொள்கைகளை விட்டு விட்டு, கொஞ்சம் பாரமார்த்திக ஞானத்தை ஏற்றுக் கொள்ளுமானால், எல்லா நாடுகளும் எல்லா ஜாதியினரும் வெகு சீக்கிரத்தில் கை குலுக்கிக் கொள்வார்கள்.

நம்மிடையே இன்று அவதரித்துள்ள ஆன்ம சக்தியின் வடிவம, தபஸின் சக்தி ஆகிய மகாத்மா காந்தி, இந்தியாவின் சமுதாய அமைப்பு எப்படி இருக்க வேண்டுமெனபதைப் பற்றிக் கொஞ்சம் கவனஞ் செலுத்துவாரானால் இந்தியாவைக் காப்பாற்றினவராவார். மேனாட்டுக்கு, இந்தியா ஓர் உதாரணமாகவும் இருக்கும். இதற்கு முதற்படியாக, இந்தியாவுக்கு எந்த விதமான சமுதாய அமைப்பு ஏற்றதாயிருக்குமென்பதைப்பற்றி முதலில் மகாத்மா காந்தியும், காங்கிரஸ் தலைவர்களும் தங்களுக்குள் ஒரு முடிவுக்கு வரவேண்டும். பின்னர், கல்வி ஞானம் படைத்தவர்களும், உழைப்புக்குச் சலிப்புக் காட்டாதவர்களுமான தொண்டர் படையொன்றைத் தயாரித்து, பகுதி பகுதியாகப் பிரித்து இந்தியாவின் பல பாகங்களுக்கும் அனுப்பி புராதன இந்தியாவில் சமுதாய அமைப்பு எப்படி விஞ்ஞான ரீதியில் அமைந்திருந்ததென்பதைப் பற்றியும், எல்லா மதங்களின் சாரமும் ஒன்றுதான் என்பதைப் பற்றியும் பிரசாரம் செய்யச் சொல்ல வேண்டும். ஆங்காங்குள்ள காங்கிரஸ் கமிட்டிகள், இந்தத் தொண்டர் படைக்கு வேண்டிய உதவிகளைச் செய்யலாம். இந்தத் தொண்டர்கள், சுதந்திரம் என்றால் உரிமையை உபயோகிப்பது மட்டும் மல்ல, கடமையைச் செய்வதுங் கூட என்பதையும் வற்புறுத்தி ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

(மகாத்மா காந்தியின் 70 வது ஜனன விழாவை முன்னிட்டு ஸர் எஸ். ராதா கிருஷ்ணன் எழுதி வெளியிட்ட நூலினின்று எடுக்கப் பட்டது.)

காங்கிரஸ் வழி காட்டுகிறது

காரியக் கமிட்டி தீர்மானம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி, 21-12-39 கூடிய கூட்டத்தில் தற்போதைய இந்திய அரசியல் நிலைமையைக் குறித்துப் பின் வரும் தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறது:—

பிரிட்டிஷாருடைய யுத்த நோக்கங்களைப் பற்றியும், சிறப்பாக இந்தியாவின் சுதந்திரத்தைப் பற்றியும் தெரிவிக்க வேண்டு மென்று காங்கிரஸ் கேட்டதற்கு, அதனை மறைத்து, வகுப்புப் பிரச்னையைப் பற்றிப் பேசியுள்ள சமீபத்து இந்தியா மந்திரியின் பேச்சைக் கண்டு, காரியக் கமிட்டி பெரிதும் வருந்துகிறது.

மூன்றாவது கட்சி யொன்றின் மூலமாக, தாங்கள் சில சலுகைகளை—அவை தேசத்திற்கு விரோதமாயிருந்த போதிலும்—பெறலாமென்று பல கட்சியினரும் நினைத்துக் கொண்டிருக்கிற வரையில், வகுப்புப் பிரச்னை திருப்திகரமான முறையில் தீர்க்கப்பட மாட்டாதென்பது காரியக் கமிட்டியின் அபிப்பிராயம். அந்நிய ஆட்சியின் விளைவாக தேசத்தில் பல வேற்றுமைகள் ஏற்படுகின்றன. எல்லா ஜாதியினரையும் ஒன்று படுத்த வேண்டிய அவசியத்தை, காங்கிரஸ் எப்பொழுமே வற்புறுத்தி வந்திருக்கிறது.

தேசத்தில் ஒற்றுமையை உண்டாக்க, காங்கிரஸ் ஒன்றே விடாமல் பாடு பட்டுக் கொண்டு வந்திருக்கிறது. அந்நிய ஆட்சி அடியோடு வாபீஸ் வாங்கிக் கொள்ளப் படுமானால்தான், தேசத்தில் நிரந்தரமான ஒற்றுமை உண்டாகு மென்று காரியக் கமிட்டி அபிப்பிராயப்படுகிறது. சென்ற காரியக் கூட்ட நடவடிக்கைகளுக்குப் பிறகு, நடைபெற்ற சம்பவங்கள் இந்த அபிப்பிராயத்தை வலியுறுத்துகின்றன. தேசத்திற்குள்ளேயே கட்சிப் பிணக்குகள் இருக்குமாயின், சுதந்திரம் பெற்றால் கூட அதைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. எனவே, பிரிட்டிஷ் அரசாங்கத்தார், தற்போது வகுப்புப் பிரச்னையைக் கிளப்பியிருப்பது, அவர்களுக்கு, இந்தியாவின் மீது செலுத்தி வரும் அதிகாரத்தை விட்டுக் கொடுக்க மனமில்லை யென்பதை எடுத்துக் காட்டுகிறது.

காங்கிரஸ் கூறுகிறபடி அரசியல் நிர்ணய சபையை கூட்டுவதுதான், இந்த வகுப்புப் பிரச்னை தீருவதற்கு வழியாகும். இந்த அரசியல் நிர்ணய சபையில் எல்லா வகுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் இருக்கிறது. சிறுபான்மைச் சமூகத்தினருடைய உரிமைகள் அனைத்தும், அவர்கள்

திருப்தியுறும் வண்ணம் காப்பாற்றப் படும் என்று காங்கிரஸின் சார்பாக ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஏதேனும் அபிப் பிராய வேற்றுமைகள் ஏற்படுமானால் அவை மத்தியஸ்தத்திற்கு விடப்படு மென்றும் அறிவிக்கப் பட்டிருக்கி றது.

சிரமப்படாமல் சுதந்திரத்தைப் பெற்று விட முடியாதென்பதை காங் கிரஸ் காரர்கள் இது போழ்து உணர்ந் திருப்பார்கள். காங்கிரஸானது, அஹிம்சா தர்மத்திற்குத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண் டிருப்பதால், சத்தியாக்கிரகத்தின் ஓர் அம்சமாகிய சட்ட மறுப்பியக்கத்தைத்தான் இது தொடங்க முடியும். சத்தியாக்கிரகம் என்றால் பொதுவாக எல்லாரிடத்தி லும் அன்பு செலுத்துவதாகும். என வே, தனிப்பட்ட காங்கிரஸ் வாதிக ளுடைய கடமை யென்ன வென்றால், எல்லாரிடத்திலும் அன்பு செலுத்துவ தாகும். ஆகையால் காங்கிரஸ் வாதி கள், நிர்மாண வேலைத் திட்டத்தை நடத்திக் காட்டி, அதன் மூலமாகத் தங்களுக்கு அழைப்பு வந்த சமயத்தில் தயாரா யிருக்கத் தங்களைத் தகுதிப் படுத்திக் கொள்வார்க ளென்று காரி யக் கமிட்டி நம்புகிறது.

சுதந்திர பிரதிக்ஞை

காங்கிரஸ் கட்டளைக் கிணங்க பிரதி வருஷமும் ஜனவரி மாதம் 26ந் தேதி, சுதந்திர தினம் கொண்டாடப் படுவது நேயர்கள் அறிந்த விஷயமே. இந்தக் கொண்டாட்ட சம்பந்தமாக நடை பெறுகிற பொதுக் கூட்டங் களில் சுதந்திர பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளப்படுவது வழக்கம். 1940ம் வருஷம் ஜனவரி மாதம் 26ந் தேதி கொண்டாடப் பட வேண்டிய கொண் டாட்டத்தில், கீழ்க் கண்ட வாறு சுதந்திர பிரதிக்ஞை எடுத்துக் கொள் ளப் பட வேண்டு மென்று காங்கிரஸ் காரியக் கமிட்டியார் தீர்மானித் திருக் கின்றனர் :—

பிரதிக்ஞை விவரம்

மற்ற ஜனங்களைப் போல் இந்திய மகா ஜனங்கள் சுதந்திரம் பெற்று, தங்கள் உழைப்பின் பயனை நுகர்ந்து, வாழ்க்கையின் தேவைகளை அடைந்து, இவற்றின் விளைவாகப் பூரண வளர்ச்சி யடையும் சந்தர்ப்பங்களைப் பெற உரி மை யுடையவர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். மேற்படி உரிமைகளை எந்த அரசாங்க மேனும் மறுத்து, ஜனங்களை ஹிம்சிக்குமானால், அந்த அரசாங்கத்தை மாற்றவோ, அழிக்க வோ மேற்படி ஜனங்களுக்கு உரிமை யுண்டு என்றும் நாங்கள் நம்புகிறோம். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்க மானது, இந்திய மகா ஜனங்களுக்கு உரிமை யில்லாமற் செய்து விட்ட தோடுங் கூட, தனது ஆட்சி முறை யை, பாமர ஜனங்களைச் சுரண்டுதல் என்னும் அஸ்திவாரத்தின் மீது அமைத்துக் கொண் டிருக்கிறது. இதன் விளைவாக் பொருளாதாரத்தி லும், அரசியலிலும், கலைஞானத்திலும், பாரமார்த்திகத்துறையிலும் இந்தியா, அழிக்கப் பட்டுக் கிடக்கிறது. ஆகை யால், இந்தியா, பிரிட்டிஷ் தொடர்பை அறுத்துக் கொண்டு பூரண சுயராஜ் யம் அடைய வேண்டு மென்று நாங் கள் நம்புகிறோம். நாம் சுதந்திரம் பெற வேண்டு மானால் அது பலாத் காரத்தின் மூலமாக வல்ல வென்பதை

நாங்கள் அங்கீகரிக்கிறோம். சமாதான முறைகளையும் நியாயமான முறைகளையும் இது வரையில் கையாண்டு இந்தியா பலமும் தன்னம்பிக்கையும் பெற்று சுயராஜ்ய பாதையில் அதிக தூரம் முன்னேற்றமடைந்திருக்கிறது. இந்த முறைகளைக் கையாளுவதினாலேயே நமது நாடு சுதந்திரம் பெறமுடியும். இந்தியாவின் சுதந்திரத்திற்காக நாங்கள் மீண்டும் பிரதிக்ஞை செய்து கொள்கிறோம். இந்தியா, பூரண சுயராஜ்யம் பெறுகிற வரையில் சுதந்திரப் போராட்டத்தை அஹிம்சா தர்ம முறையில் நடத்த உறுதி கொள்கிறோம்.

அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு போராட்டத்தை நடத்துவதற்கு முன்னர் கதர், சமூக ஒற்றுமை, தீண்டாமை விலக்கு ஆகிய நிர்மாண வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டும். ஆதலின், நாங்கள், ஜாதி, வகுப்பு வேற்றுமையின்றி, எல்லா வகுப்பாரிடத்திலும் நல்லெண்ணத்தை உண்டு பண்ணுவோம். இதுகாறும் ஜன சமூகத்தினின்று புறக்கணிக்கப்பட்டவர்களை, அவர்களுடைய அறியாமையினின்றும் வறுமையினின்றும் கைதூக்கி விடுவோம். பின்னடைந்த வகுப்பினரென்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரென்றும் கருதப்படுவோரின் நலன்களை உயர்த்துவோம். ஏகாதிபத்திய முறையை ஒழிக்க நாம் முற்பட்டிருக்கிறோமாயினும், இங்கிலீஷ்காரரிடத்தில்—அவர்கள் உத்தியோகஸ்தர்களாயினுஞ் சரி, உத்தியோகஸ்தரல்லாதராயினுஞ் சரி—எவ்வித துவேஷமும் எங்களுக்கு இல்லை. ஹிந்துக்களென்றும் ஹரிஜனங்களென்றும் வித்தியாசங்கள் இருப்பது ஒழிய வேண்டுமென்பதை நாங்கள் அறிவோம். ஹிந்துக்கள், தங்கள் தினசரி வாழ்க்கையில் இந்த வேற்றுமைகளை மறக்க வேண்டும். நம்முடைய மத நம்பிக்கைகள் வெவ்வேறாயிருந்த போதிலும், அஹிம்சா தர்ம முறையில் நாம் காரியங்களைச் செய்வதற்கு இந்த வேற்றுமைகள் முட்டுக்கட்டையாயிருக்கின்றன. ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள், அரசியல், பொருளாதாரம் முதலியவைகளில் ஒரே நிலையிலுள்ளவர்கள் என்ற முறையில் எல்லாரும் பாரதமாதாவின் புதல்வர்கள் என்ற எண்ணத்துடன் நாம் பரஸ்பரம் அன்றாட வாழ்க்கையில் நடந்து கொள்வோம். இந்தியாவிலுள்ள ஏழு லட்சம் கிராமங்களைப் புனருத்தாரணம் செய்வதற்கும், ஜனங்களின் கொடிய வறுமையை ஒழிப்பதற்கும், கைராட்டினமும், கதரும் நமது நிர்மாண திட்டத்தில் இன்றியமையாத அம்சங்களாயிருக்கின்றன. ஆதலின், நாங்கள் ஒழுங்காகக் கைராட்டினத்தில் நூல் நூற்போம். எமது சொந்த உபயோகத்திற்குக் கதரையே உபயோகிப்போம். கூடிய வரையில், கிராமங்களிலே உற்பத்தியான பொருள்களையே உபயோகிப்போம். இப்படி உபயோகிக்கும்படி பிறரையும் செய்வோம். காங்கிரஸ் கொள்கைகளையும் முறைகளையும் ஒழுங்காக அநுசரிப்போம். இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை நடத்த, காங்கிரஸ் எப்பொழுது அழைப்பு அனுப்புமானாலும் அதற்குத் தயாராயிருப்போம்.

வீர பாலகர்கள்

—ஸ்ரீ. ரா.

அடிமையா யிருப்பதை யாவர் தான் விரும்புவர்? உயிரைக் கொடுத்தேனும் சுதந்திரம் பெற நாம் அவா உடையவர்களாய் இருக்கிறோம். வங்காளப் பிரிவினை காலத்தில் நாம் முழக்கின 'வந்தேமாதரம்' ஆங்கிலேயர்களை நடுங்க வைத்துவிடவில்லையா? சுதேசிப் பிரசாரமும் அந்நியத் துணி மறியலும் நமக்கு எவ்வளவு அடிகள், உதைகள், வாங்கிக் கொடுத்தன? 'வந்தேமாதரம்' என்று நாம் நம் தாயை வணங்கினதாலும், 'பாரதமாதாவுக்கு ஜே' போட்டதாலும் நம் முன் எத்தனை பேர் சிறைவாசம் பெற்றார்கள்? காயமடைந்தார்கள்? ஏன், உயிரையே விட்டார்கள்!

கொரியா தேசம் ஒரு அடிமை நாடே. அதன்மேல் ஜப்பான் அதிகாரம் செலுத்தி வந்தது. கொரியா, தன் சுதந்திரத்தை திரும்பிப் பெற தேசம் முழுவதும் முயற்சித்தது. பாலகர்களுக்கும் கூட தேசிய உணர்ச்சி கரை புரண்டோடியது. யுவர்களும், கிழவர்களும், ஸ்திரீகளும், புருஷர்களும், படித்தவனும் படியாதவனும்—எல்லோரும் தேச விடுதலைக்காக மிக்க முயற்சி செய்தனர்.

'கொரியா மாதா'வுக்கு ஜே கோஷம் போடப்பட்டது. சுதந்திர வேட்கைக் கவிகள் பாடப்பட்டன. கொரியா ஜண்டா உயரப் பறக்க விடப்பட்டது. இப்படிப்பட்ட காரியங்கள் செய்பவர்களை ஜப்பானியச் சிப்பாய்கள் பிடித்துப் போவதும், அடித்து வதைப்பதும், சிற்சில சமயங்களில் கொல்லுவதும் சகஜமாய் விட்டன.

* * *

ஒரு நாள் ஸ்யூல் நகரில் ஒரு பள்ளிக்கூடத்திலிருந்து ஊர்கோலம் புறப்பட ஏற்பாடாயிருந்தது. கொரியாவின் பெரிய பெரிய மனிதர்களெல்லோரும் அங்கு வந்திருந்தார்கள். அந்தச் சமயம் ஒரு பாலகர் படை அவர்களை நோக்கி வந்தது. அப்படையில் உள்ளவர் யாவரும் 12-13வயதுள்ள கொரியா சிறுவர்கள். பள்ளிக்கூடத்தில் இருந்த எல்லா ஜனங்களும் இச் சிறுவர்களைக் கண்டு ஆச்சரியமுற்றனர். அப்பொழுது ஒரு சிறுவன் அந்த பாலர் படையின் முன் வந்து நின்றான். தன் உள் சட்டையிலிருந்து கொரியா ஜண்டா ஒன்றை எடுத்து உயரத் தூக்கிப் பிடித்தான். அவனுடன் வந்திருந்த எல்லாச் சிறுவர்களும் அப்படியே செய்தனர்.

உடனே அந்தப் பையன் எல்லோர் முன்னாலேயும் பேச ஆரம்பித்தான். அதற்குள் ஜப்பானிய சைனியமும் அங்கு வந்து சேர்ந்தது. பையன் கர்ஜித்தான்—'பெரியோர்களே! கொரியாவை எங்களுக்குத் திருப்பிக் கொடுங்கள். இதை அடிமையாக்காதீர்கள்.' பிறகு 'கொரியா மாதாவுக்கு ஜே' 'கொரியா நீடூழி வாழ்க' என்ற கோஷங்களுடன் அந்த பாலர் படை ஊர்வலத்தில் கலந்தது. எச்சமயமும் ஜப்பானியர்கள் தங்களைப் பிடித்து வதைப்பார்கள் என்பது அப்பாலர்களுக்குத் தெரியும். என்றாலும் அவர்கள் அதைரியப் படாமல் கூட்டமாகச் சென்றார்கள்.

ஜப்பானியச் சிப்பாய்கள் இவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் சிறுவர்களோ நிற்கவில்லை. பின் என்ன? ஜப்பானியர் தங்கள் ஈட்டிகளையும், வாள்களையும் கொரியாச் சிறுவர்கள் மீது பிரயோகித்தார்கள். ரத்த வெள்ளம் ஓடியது. நூற்றுக் கணக்கான பாலகர்கள் துடித்து அழுது பூமியில் கிடந்தார்கள். அவர்களைக் காப்பாற்ற 'ரெட் கிராஸ் சொஸைட்டி'யிலிருந்து சில பெண் பிள்ளைகள் ஓடி வந்தார்கள். ஆனால் ஜப்பானியச் சிப்பாய்கள் அப் பெண்கள் மீதும் வாட் பிரயோகம் செய்தனர். கொரிய சிறுவர்களின் ரத்தம் கொதித்தது. தங்கள் தேக வலியை மறந்தனர். புத்துயிர் பெற்றாற் போல எழுந்தார்கள். 'கொரியாவுக்கு ஜே' என்று ஜப்பானியர் காது செவிடு படக் கூச்சலிட்டார்கள். எல்லோரும் கைது செய்து கொண்டு போகப்பட்டார்கள்.

அதே தினம் மற்றொரு பாலர் படை 'கொரியா மாதாவுக்கு ஜே' என்று கோஷமிட்டவாறு எதிர் வந்தது. ஜப்பானிய வீரர்கள் தங்களுடைய துப்பாக்கிகளை கெட்டிப் படுத்தினார்கள். முதன் முதலாக வந்த பையன் மீது குண்டு விழுந்தது. அவன் 'மாதாவுக்கு ஜே' என்று கூறியவாறு கீழே விழுந்து இறந்தான். மற்றொரு குண்டு அடுத்த பையன் மீது விழுந்தது. அவனும் 'மாதாவுக்கு ஜே' என்று கூறி விழுந்தான். இப்படியாகக் கணக்கில்லாத குண்டுகள் பாலர் படையில் நுழைந்தன. எத்தனை சிறுவர்கள் குண்டு பட்டு இறந்தனர்! ஆனாலும் ஒருவரும் அங்கிருந்து ஓடவில்லை.

ஒரு இடத்தில் கோர்ட்டில் இரண்டு வாலிபர்கள் நின்றார்கள். அவர்களின் குற்றமாவது-மாதாவுக்கு ஜே போட்டது, கொரியாவின் ஜண்டா கொண்டு சென்றது—ஆகியவைகள். அவர்கள் ஜட்ஜிடம் பின் வருமாறு வாக்கு மூலம் கொடுத்தார்கள்.—'ஒவ்வொரு தேசத்தின் ஜனங்களுக்கும் தங்களின் மாதாவுக்கு ஜே போடுவதற்கும், தேசக் கொடி பறக்க விடுவதற்கும் அதிகாரம் உண்டு. இது பகவானால் கொடுக்கப்பட்ட அதிகாரம். நாங்கள் இதை விட முடியாது. இதற்காக நாங்கள் தூக்கிலிடப் பட்டாலும் அஞ்சமாட்டோம்.'

பாலகர்களைச் சவுக்கினால் அடிக்கும்படி ஜட்ஜ் உத்திரவு செய்தார். சிப்பாய்கள் அடித்தார்கள். ரத்த வெள்ளம் பெருகியது. அந்த பன்னிரண்டு வருட பாலர்கள் 'கொரியா மாதா நீடூழி வாழ்க' என்று கூச்சலிட்டார்கள். அவர்கள் சரீரத்தில் பிராணன் இருக்கும் வரை அவர்கள் அவ்வாறே கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.

நாமும் நமது நாடும்

—வ. அ. தியாகராஜன்
M. A.

'மேனாட்டின் அழிவு' என்னும் புஸ்தகத்தில், ஆஸ்வால்ஸ்பேங்கள் என்னும் ஜெர்மானிய அறிஞர், ஒரு தேசத்து நாகரிகம் சுமார் ஆயிர வருஷ காலந்தான் என்றும், நாகரிகம் என்பது தேச வளர்ச்சியில் ஏறக்குறைய கடைசி நிலையில் வருவது என்றும் கூறுகிறார். அவர் மேலும் சொல்லுவது என்னவென்றால் ஒவ்வொரு தேசத்து நாகரிகமும் ஒரு முக்கியமான கொள்கையை தன்னுடைய சரித்திரத்தில் எத்தனை விதங்களில் விளக்க முடியுமோ, அத்தனை விதங்களிலும் விளக்குகிறது. அதன் பிறகு இயற்கையில் எப்படி பூ, காயாகவும், பழமாகவும் மாறி, விழுந்து விடுகிறதோ, அதுபோல தேசங்களின் நாகரிகங்களும் அழிந்து போகின்றன என்பதாம். இவர் 'அழிவு' என்னும் பதத்திற்கு தனி அர்த்தம் கொடுக்கிறார் என்பதைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஒரு தேசத்து நாகரிகம் தன்னுடைய முழு வேலையையும் செய்துவிட்டு மறைந்து போகுமானால் அதை, நாகரிகம் அழிந்து விட்டது என்று நாம் கருதக்கூடாது. இதுவே அழிந்து போவதற்கு வழியானால், இதைவிட நல்லவழி வேறெதுவும் இல்லை என்றே சொல்லலாம். ஆனால் இவர் சொல்வதில் ஒரு முக்கிய தத்துவத்தை நாம் அங்கீகரிக்கிறோம். அது என்னவென்றால் ஒவ்வொரு நாடும் தன்னுடைய முக்கியமான மனோதர்மத்தை தன்னுடைய கலைகளிலும், மதத்திலும், கட்டிடங்களிலும், சங்கீதத்திலும் தெரிவிக்கிறது என்பதேயாகும். உதாரணமாக புராதன எகிப்து தேசத்தில், ஒவ்வொருவரும், தன்னுடைய ஆன்மா எப்பொழுதும் அழியாமல் இருக்க வேண்டும் என்னும் எண்ணம் உள்ளவர்களாய் இருந்ததால், தங்களுடைய சவங்களை அழியாமல் பாதுகாக்கும் வழிகளைத் தேடி, அவற்றைப் பெரிய கட்டிடங்களில் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாச் சாமான்களுடனும்சேர்த்துப் புதைத்து வைத்தார்கள். இறந்த பிறகு எப்படி அழியாமல் இருப்பது என்பதற்கு, அவர்கள் இருக்கும் நாள்களையெல்லாம் செலவழித்தார்கள். இதுபோலவே தற்காலத்திய ஐரோப்பிய நாகரிகத்தின் முக்கிய நோக்கம் என்னவென்று அவரைக் கேட்டால், அவர், கைக்கெட்டக் கூடிய சிறிய பலன்களை வேண்டாம் என்று விட்டுவிட்டு, கைக்கெட்டாத பெரிய பலன்களை வேண்டும் என்று முயல்வதே தான் என்று சொல்கிறார். இதை

சுருக்கமாய் பவுஸ்டின் சிக்கல் என்று சொல்கிறார். இது, ஜெர்மனியில் கேயடே என்னும் அறிஞரின் நாடகத்தின் முக்கிய பாத்திரமாய் இருப்பவன் பெயரிலிருந்து எடுக்கப்பட்டது. பவுஸ்ட், சாதாரண மனிதர்கள் அடையக்கூடிய பயன்களை யெல்லாம்விட்டு விட்டு, மந்திர பலத்தைத் தேடி, சந்திரலோகத்தை எட்டிப் பிடிக்கலாமா? உலகத்தின் அர்த்தம் என்ன என்று மேகத்தின் மேல் பறந்து போய் அறியலாமா? அல்லது இறந்தவர்களை மீண்டும் உயிருக்குக் கொண்டு வரலாமா? என்று தத்தளிக்கிறான். சாதாரண வழியைவிட்டு விட்டு யாரும் போகாத வழியில் இவன் போக விரும்புவதால், தன்னுடைய ஆன்மாவை ஒரு பூதத்துக்கு எழுதிக்கொடுத்துவிடுகிறான். ஐரோப்பிய சங்கீதத்திலும், கட்டிடங்களிலும், விஞ்ஞான சாஸ்திரத்திலும் ஒரு இடத்தில் நில்லாமலும், உட்காராமலும், முன்னுக்கும் பின்னுக்கும் போவதிலேயே சந்தோஷத்தைத் தேடும் கொள்கையே ஸ்பெங்ளர் காண்கிறார்.

ஒவ்வொரு தேசத்து நாகரிகமும் ஒரு முகம் நோக்கிச் செல்கிறது என்பதை நாம் ஒத்துக்கொள்வோமானால், நம்முடைய தேச நாகரிகம் எந்தப் பக்கம் செல்கிறது என்பதை கவனிப்போம். இதை ஆராய்ச்சி செய்ய நமது நாட்டில் நாம் எதைப்பற்றி பெருமைப் படுகிறோமோ அவற்றை எல்லாம் எடுத்துக் கொள்வோம். நக்ஷத்திரலோகத்திலிருந்து ஒருவன் வந்து 'உன் தேசத்தில் பெருமை வாய்ந்தவற்றையெல்லாம் எனக்குக் காட்டு' என்றால் நாம் எதைக் காட்டுவோம்? மனோவேகத் துடன் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குப் போகும் சக்தி இருக்கிறது என்று நினைத்துக் கொள்வோம். அப்போது நாம் என்ன செய்வோம்? முதலில் நமது தேசத்து ஸங்கீதத்துடன் ஆரம்பிப்போம். 'குழலினிது, யாழினிது' என்று திருக்குறளில் சொல்வதைப் போல், குழலிலும், வீணையிலும் சில கீதங்களை கேட்கச் செய்வோம். பிறகு, நம்முடைய பழைய கோவில்களைக் காட்டுவோம், அஜந்தாவிலுள்ள சித்திரங்களையும், எல்லோராவிலுள்ள கைலாஸ ஆலயத்தையும் காட்டுவோம். பிறகு காளிதாஸன் எழுதிய நாடகங்களில் சில காட்சிகளைப் படித்துக் காட்டுவோம். கடைசியில் கீதையிலிருந்து சில வாக்கியங்களையும், உபநிஷதத்திலிருந்து சில வாக்கியங்களையும் எடுத்துக் காட்டுவோம். அதன் பிறகு, விண்ணுலகிலிருந்து வந்தவனுடைய அபிப்பிராயத்தை நாம் கேட்போமானால், அவன் என்ன சொல்வான்? அவன் பின்வருமாறு சொல்லலாம் :— 'உங்கள் நாகரிகத்தின் முக்கிய கொள்கை என்ன என்பது இப்பொழுது எனக்குத் தெரிகிறது. இயற்கையில் இருக்கும் ஒற்றுமையையும், இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள ஒற்றுமையையும் காண்பதே உங்களுடைய முக்கிய கொள்கையாகக் கொண்டிருக்கிறீர்கள்; உங்கள் ஆலயங்களில் இருக்கும் கோபுரங்களில், இயற்கையிலிருக்கும் ஜீவராசிகளெல்லாம் காணப்படுகின்றன. இதில் பறவைகளுக்கும், தவம் செய்வோருக்கும், ராக்ஷஸர்களுக்கும் இடம் இருக்கிறது. உலகம் பல விதமாய் இருக்கிறது என்று காண்பிக்கிறது. ஆனால் உங்களுடைய கோபுரம் ஒன்று சே[illegible]

நோக்கிச் செல்கிறது. அது போல் நங்கள் மனதும் இயற்கையிலும், மனிதனிலும், கடவுளிலும் இருக்கும் ஒற்றுமையைக் காட்டுகிறது' என்று சொல்லலாம். அப்போது நாம் நம் தேசத்து நாகரிகம் எவ்வளவு பெருமை வாய்ந்தது என்று தெரிந்து மகிழ்ச்சி கொள்வோம் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் மகிழ்ச்சியில் ஒரு விதமான துக்கமும் கலந்து இருக்கும் என்பதிலும் ஸந்தேகமில்லை. ஏனென்றால் நாம் இவ்வளவு பெருமைப் படக்கூடியவை எல்லாம் ஏறக்குறைய ஆயிர வருஷங்களுக்கு முன்னாலிருந்தே நமது தேசத்திலிருக்கின்றன. ஆதலால் அவை எல்லாம் நம்முடைய முன்னோரின் பெருமையைக் காட்டுகின்றனவே யொழிய நம்முடைய பெருமையைக் காட்டவில்லை. நம்முடைய முன்னோரின் பெருமையைப் பாராட்டும் போது நாம் நம்முடைய குலத்தையும் கோத்திரத்தையும் மெச்சுகிறோம். நாம் நம்முடைய முன்னோர்களாயிருந்த ரிஷிகள் பேரைச் சொல்கிறோம். அம்பரீஷரும் ஆங்கீரஸரும் நம்முடைய கோத்திரத்தை ஸ்தாபித்தவர்கள் என்று பெருமையாய்ச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் அம்பரீஷரும் ஆங்கீரஸரும் மறுபடியும் இங்கே வருவார்களானால், நாம் அவர்களைப் பற்றி எவ்வளவு பெருமைப் படுகிறோமோ, அது போல் அவர்கள் நம்மைப் பற்றி அவ்வளவு பெருமைப் படுவார்களா என்று சந்தேகிக்கலாம். நம்முடைய பழைய காலத்து நாகரிகத்தை ஒரு கோயிலுக்கு ஒப்பிட்டோம். ஆனால் அந்தக் கோயில் கோபுரங்களில் வௌவால்கள் தலை கீழாய்த் தொங்கிக் கொண்டு இருக்குமானால், இவைகளைப் பார்த்து கோவில் கட்டினவன் மகிழ்வானா என்பதைப்பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை.

ஆனால் இதைப் பற்றி மிகவும் வருத்தப் பட வேண்டியதும் இல்லை. இயற்கைக்கும் செயற்கைக்கும் ஒரு பெரிய வித்தியாச முண்டு. இயற்கை எப்பொழுதும் புதிதாகவே இருக்கிறது. ஆனால் செயற்கைப் பொருள்கள் சீக்கிரம் பழைய வஸ்துக்கள் ஆகிவிடுகின்றன. இதற்குக் காரணம் என்னவென்பதைச் சற்று ஆராய்ச்சி செய்வோம். மரங்களும், செடிகளும் நம் முன்னோர்கள் காலத்தில் இருந்ததைப் போல் இப்போதும் இருக்கின்றன. ஆகாயத்தில் மேகங்கள் முன் போல் பறக்கின்றன. அழிவில்லாத நக்ஷத்திரங்கள் இரவு தோறும் கண் கொட்டாமல் நம்மைப் பார்க்கின்றன. சூரியனுடைய செங்கிரணங்களும், பறவைகள் கூவுவதும் நமது மனதைக் கவர்கின்றன. பழைய காலத்து தபோவனங்கள் இன்னும் போய்விடவில்லை. ஏன்? இயற்கை எப்பொழுதும் புதிதாயும், எப்பொழுதும் பழையதாயும் இருக்கிறதென்றால், இயற்கை இரண்டு தொனிகளுடன் பேசுகின்றது. ஒரு புறம் இயற்கை எப்பொழுதும் அழிந்து கொண்டே இருக்கிறது. மறு புறம் இயற்கை வளர்ந்து கொண்டே இருக்கிறது. புல் எப்பொழுதும் பசுமையாகவே இருக்கிறது. ஆனால் போன வருஷத்துப் புல் எங்கே இருக்கிறது? மற்றொரு விஷயத்தை இங்கே கவனிப்போம். இயற்கையில் பழைய வஸ்துக்கள் அழிந்து கொண்டே இருந்த போதிலும், இயற்கை ஒரு போதும் அடியோடு அழிந்து போவது இல்லை. ஏனென்றால் இயற்கையில் ஒற்றுமை

இருக்கிறது சூரிய வெளிச்சத்தினால் இலைகள் துளிர்விட்டுப் பசுமையாகின்றன. முதிர்ந்த இலைகள் உதிர்ந்து விடுகின்றன. உதிர்ந்த இலைகள் மண்ணோடு கலந்து, எருவாகி மறுபடியும் மரத்துக்கும் செடிக்கும் வளர்ச்சிக்கு ஆகாரமாகின்றன. மறுபடியும் ஒரு நீர்த்துளியை எடுத்துக் கொள்வோம். இது ஒரு சமயம் ஒரு பனித்துளியாய் இருக்கலாம். மறு சமயம் ஆகாயத்தில் ஒரு மேகத்தில் இருக்கலாம். பிறகு மழையாய் வந்து ஆற்றிலும் சமுத்திரத்திலும் ஓடலாம். இயற்கையில் ஒற்றுமை இருப்பதால் மாறுதல்கள் உண்டே யொழிய அழிவு என்பது கிடையாது.

இந்த இயற்கை விதியை எந்த நாகரிகம் வழிபடுகிறதோ, அந்த நாகரிகத்துக்கு, நல்ல காலங்களும் கெட்ட காலங்களும், இயற்கையில் வெயிலும் மழையும் மாறி மாறி வருவதைப் போல் வரலாம். ஆனால் அந்த நாகரிகம் அடியோடு அழிந்து போகாது. பழைய காலத்து நாகரிகங்களில் பல அடியோடு போய்விட்டன. பிறரைக் கொள்ளையடித்து வாழ்வதே தமது தர்மம் என்றெண்ணி வளர்ந்த அஸீரியா நாகரிகமும், எகிப்திய நாகரிகமும், ரோம ஏகாதிபத்தியமும் இருக்கும் இடம் தெரியாமல் போய்விட்டன. ஆனால் நமது இந்திய நாகரிகம் இன்னும் அந்த நிலைக்குவரவில்லை. இதனால் நமக்கு என்ன தெரிகிறதென்றால், இந்திய நாகரிகம் க்ஷீணதசை அடைந்தபோதிலும் இன்னும் உயிரோடு இருப்பதற்குக் காரணம், இந்த நாகரிகம் இயற்கையின் விதியை அனுசரித்து இருப்பதேயாகும்.

ஒரு தேசத்து நாகரிகம் என்பது அந்த தேசத்து ஆகாயத்தில் பறவைகள் பறப்பதைப் போல் பறப்பதில்லை. எப்படி ஒரு மனிதனுடைய உயிர் ஒவ்வொரு அணுவிலும் இருக்கிறதோ, அப்படியே ஒரு தேசத்து நாகரிகமும், அந்த தேசத்து ஒவ்வொரு மனிதனுடைய ஒவ்வொரு காரியத்திலும் காணப்படுகிறது. அதனால் நம்முடைய கடமை என்ன என்பது இப்பொழுது விளங்குகிறது. நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் நம் பெருமைக்கல்ல, நம் நாட்டின் பெருமைக்கு என்று நினைத்துச் செய்வோமானால், நாம் நம்முடைய பெருமை வாய்ந்த நாகரிகத்தை மறுபடியும் உயிருக்குக் கொண்டு வரலாம். வருங்காலத்தில் நமது தேசத்தில் இருக்கும் ஜனங்கள் நாம் நம்முடைய முன்னோரின் பெருமையை எப்படி பாராட்டுகிறோமோ, அப்படியே அவர்களும் நம்மை நன்றியுடன் நினைப்பார்கள். நாம் நமது தேசத்தின் பெருமையை முன்னிடாமல் சுய நலத்தையே முன்னிட்டு, அ என்பவன் இ என்பவனையும் இ என்பவன் உ என்பவனையும் ஏமாற்றிப் பிழைப்பதே சுவர்க்கம் என்று நினைப்போமானால் அ, இ, உ என்பவர் எல்லோரும் ஒருவரையொருவர் ஏமாற்றி, ஒத்துழைக்க முடியாதவர்களும் தம்மையும் தம் நாட்டையும் பிறருக்கு தத்தம் செய்வதுமன்றி, நமது நாட்டின் ஐயாயிர வருஷ நாகரிகத்தையும் அழித்த பாதகர்களுமாவார்கள். அப்படிச் செய்பவர்கள் தமது முன்னோரின் இகழ்ச்சியையும், வருங்காலத்திலிருப்பவர்களின் அசட்டையையும் பெறுவார்கள். மறு ஜன்மம் என்பது இருக்கிறதோ இல்லையோ நமக்குத் தெரியாது. ஆனால் இந்த உலகில் அத்தகைய மனிதர்களைப்பற்றி யாரும்

பெருமையாய்ப் பேச மாட்டார்கள் என்பது நிச்சயம். நாம் நம்முடைய பழைய நாகரிகத்தை ஒரு கோயிலுக்கு ஒப்பிட்டோம். அந்தக் கோயில் கோபுரங்களில் வௌவால்கள் தலை கீழாய் தொங்கிக் கொண்டு இருக்கின்றன. கோபுரம் சில இடங்களில் சிலைகள் உடைந்து போய் இருக்கின்றன. இடையிடையே புல்லும் செடிகளும் வேரூன்ற ஆரம்பித்து விட்டன. நம்முடைய கடமை என்ன? நம்முடைய ஆலயங்களை பரிசுத்தமாய் வைத்துக் கொள்வோமாக. இந்த ஆலயங்கள் எங்கே இருக்கின்றன? இவை ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்திலும் இருக்கின்றன என்பதை நாம் இன்னும் சொல்ல வேண்டுமா?

கண்டங்களின் விஸ்தீரணம்

பெயர்.	சதுர மைல்.
ஆசியா	17,074,050
ஆப்ரிக்கா	11,521,530
வட அமெரிக்கா	8,000,000
தென் அமெரிக்கா	6,817,390
ஐரோப்பா	3,750,000
ஆஸ்திரேலியா	3,450,220

கல்வியறிவும் இலக்கறிந்து இலாபம் பெறுதலும்

"நாராயண சிவன்

உற்பத்தியும் விநியோகமும் வியாபாரத்தை ஒழுங்கு படுத்துகிறதென்றாலும் இந்தக் கொள்கையை சந்தைகளிலும் கடைகளிலும் விற்கப்படும் இதர பொருள்களைப் போல், படிப்பு, சாமர்த்தியம், புத்திசாலித்தனம் ஆகியவற்றிலும் அவற்றின் உண்மைக் குணங்களைக் கணக்கிடாது அவைகள் கிடைக்கும் அளவைக் கணக்கிடுகிறோம். சாதாரணமாய் அ. ஆ. படித்தஒருவனை விட மெட்ரிகுலேஷன் தேறிய ஒருவன் அதிகமாய் உபயோகப்படுவானென்பது பொதுவாக நாமெல்லோரு மறிந்த விஷயம். அதே போல் ஒரு பி. ஏ ஒரு மெட்ரிகுலேட்டுக்கும், ஒரு எம் ஏ. ஒரு பி. ஏக்கும் சிறந்தவனாகிறான். ஆனால் அவர்களது உண்மை மதிப்பை நாம் கணக்கிடுகிறோமா? நவீனக் கல்வி, உலகத்தில் பரவாமலும் கல்விகற்பது அநேகரின் சக்திக்கு அப்பாலுள்ளதாகவுமிருந்த காலத்தில் தன்னுடைய பெயருக்குப் பின்னால் இரண்டு எழுத்துச் சேர்க்கும் தன்மையையடைந்து ஒருவன் எல்லோராலும் ஆராதிக்கப் பட்டு வந்தான்: அவன் கலாசாலையை விட்டு வெளியேறினதும் தகுந்த உத்தியோகம் அவனுக்காக காத்துக்கொண்டிருந்தது. காரியாலயங்களிலோ, கலாசாலைகளிலோ உத்தியோகம் பெற்று எங்கும் கௌரவமாய் நடத்தப்பட்டு வந்தான். இந்தச் சலுகைகள் இளைஞர்களைக் கலாசாலைகளுக்கும் இழுத்துச் சென்று எவ்விதத்திலேனும் பட்டங்களைப் பெறுவதற்குப் பெரிதும் தூண்டிற்று பெற்றோர்களோ வெனில் அவர்களது படிப்பிற்காக அநேக கஷ்டங்களை யனுபவித்து தங்களது மக்கள் பெரியோர்களாகும் நாளை எதிர்பார்த்திருந்தார்கள். இவ்விதக்குழுமல் படித்த யுவர்களின் தொகையைப் பெருக்கி முன்னிருந்த கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படுத்திற்று. ஒரு பி. ஏ. பட்டதாரியின் பெருமை யெல்லாம் போய் விட்டது. நிரக்ஷர குக்ஷிகளும், பட்டதாரிகளும் தோளுக்குத் தோள் உரசிக் கொள்ளுவதோடல்லாமல் முன் சொல்லியவர்கள் பின்னவர்களை இகழும் படியான காலமுமாய் விட்டது. எண்ணிக்கையில் அதிகமானவுடன் சந்தையில், செழித்த சாமான்களுக்கு விலை மலிவாவது போல் பட்டதாரிகளின் விலை மதிப்பும் இறங்கி விட்டது. ஆகவே இன்று காரியாலயங்களிலுள்ள படாசாகிபுகளை

பல பட்டதாரிகள் வேலைக் கலைகுவதால் மிகவும் திறமையான ஒரு பி.ஏ. பட்டதாரிக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30 சம்பளம் கொடுக்க யோசிக்கிறார்கள். ஆவலுடன் விரும்பிய இப்பட்டத்தைப் பெறுவதற்கு அவர்கள் இதற்கு இருமடங்கு செலவு செய்துள்ளார்களென்பதை அவர்களறியாமலில்லை. அதனைப் பற்றி அவர்களுக்கேன் கவலை? சாப்பாட்டிற்கு வழியில்லாது வாங்கிய விலைக்கும் குறைவாய் ஒரு வியாபாரி தன் பொருளை விற்கும் போது அவனிடத்திலும் பேரம் பண்ணுமலிருக்கிறோமா? மேலும் வெந்த புண்ணில் வேல் நுழைப்பது போல் சில முதலாளிகள் இவர்களைப் பார்த்து நகைக்கவும் செய்கிறார்கள். அவர்கள் தங்களுக்குச் சொல்பப் படிப்பேயுள்ள தாயினும் அவருக்குக் கீழ் பலர் வேலை செய்வதாய் பெருமைப் படுகின்றனர். இன்னும் சில முதலாளிகள் மாதம் பூராவும் உழைத்துத் தாங்கள் ஒரு நாளில் சம்பாதிப்பதை விடமிகக் குறைவாய் சம்பாதிக்கிறார்களென்று சொல்லவும் துணிகிறார்கள்.

கற்ற இளைஞர்களுக்கு நாளுக்கு நாள் இழைத்து வரும் இந்த அவமானம் அவர்களைத்தன்னம்பிக்கை யிழக்கச் செய்வதுடன் தேச முன்னேற்றத்துக்கும் இடையூறாயிருந்து வருகிறது. அவர்களது படிப்புக்காகத் தங்களுடைய சொத்து முழுமையையும் இழந்த பெற்றோர்களுக்கு உதவக் கூடவில்லை. குடும்பத்திலுள்ள இதரர்களுக்கும் அவர்களால் பிரயோசனம் கிடையாது; அண்டை அயலாருக்கு உதவியளிக்க வேண்டுமென்ற எண்ணமிருந்தாலும் போதுமான வருமானம் கிடையாது. அறிவை விட அழகையே விரும்பும் அவனி, தேச முன்னேற்றத் திற்காக அவர்களது உள்ளங்களில் உதயமாகும் எண்ணங்களில் மண்ணைப் போட்டு விடுகிறது. அவர்கள் சொப்பனம் கண்டு கொண்டு கஷ்டப்பட்டு படித்தவையெல்லாம் பயன் பெற வில்லையே என்று கண்டு மயங்குகிறார்கள். அவர்களது ஊக்கம் குன்றி கேவலமான தொழிலையும் ஏற்றுக் கொள்ள சித்தமாகிறார்கள். சொல்லிக் கொடுத்த வேலையை மட்டும் செய்யக் கூடியவர்கள் பெறும் ஊதியத்தைப் பெறுகிறார்கள். இவ்விதமாகவே நாளுக்கு நாள் தேச சேவைக் குரிய பல இளைஞர்களின் வாழ்க்கை வீணுக்கப் பெறுகிறது. தகுந்த முறையில் கவனித்து தயா தாக்ஷண்யத்துடன் நடந்தால் இவர்களைத் தேச முன்னேற்றத்திற்கான வழியில் உபயோகப் படுத்தலாம். அதிக வேலையை வாங்கிக் குறைந்த விகிதம் கொடுக்கும் இரக்கமற்ற முதலாளிகளொருபுறம், அவர்களது சாமர்த்தியத்தைக் காட்டுவதற்குப் போதுமான சந்தர்ப்பம் கொடுக்காதது மற்றொரு புறம் இவைகளல்லாது கடினமான ஏழ்மைத் தனம் ஆகிய இவைகளெல்லாம் அவர்களது உயர்ந்த கருத்துக்களை குன்றச் செய்து அவர்களது அறிவின் ஓட்டத்தைப் பனிக்கட்டி போல் உறையச் செய்கின்றன. அவர்கள் புத்திசாலிகளாயிருந்தால் ஏன் வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டு போதுமான வருமானத்துக்கு வழிதேடிக் கொள்ளக் கூடாதென்று விவாதிக்கலாம். புத்திசாலித் தனத்தை உபயோகிப்பதற்கும் சந்தர்ப்பம் தேவை.

நம் தேசத்திலுள்ள படித்த இளைஞர்கள் சரீர உழைப்பையும் கடின வேலைகளையும் வெறுக்கிறார்களென்றும் சொல்லப் பெறுகிறது. அந்த காலெல்லாம் போய் விட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் காரணத்தால் உழைப்பின் சிறப்பை கற்றுக் கொடுக்காமலே அவர்கள் அறிந்து கொண்டுள்ளார்கள். ஒரு ஆக்ஸ்போர்ட் பி. ஏ. பட்டதாரி செருப்புதைக்கும் தொழிலைச் செய்வாராகில் அது ஒரு பெரிய செய்தியாகிறது. பத்திரிகைகளெல்லாம் கொட்டையெழுத்திட்ட தலையங்கங்களில் அவரை ஒரு பெரிய தேசிய வீரராகப் போற்றுகின்றன. சில காலத்திற்குள் ஒரு பெரும் முதலாளி இதனைப் பார்த்து அவரை அவரது தொழிலுக்கு கந்த ஒரு பெரிய ஸ்தானத்திலமர்த்தி வைக்கிறார்.

நம் தேசத்திலும் பட்டம் பெற்றுவிட்டு பெருமையைக் கருதாது தெருவில் கூவி விற்பவரும், வெற்றிலை பாக்குக் கடை வைப்பவரும், காரியாலயங்களில் பியூன் வேலை செய்பவரும் உள்ளதாய் நாமறிவோம். ஆனால் அவர்களுக்குத் தனிச் சலுகை காட்டும் முதலாளிகளோ அல்லது ஊக்கம் கொடுக்கும் இதரர்களோ இருக்கிறார்களா என்பதுதான் சந்தேகம்.

இந்த நிலையைத் தொலைக்க முடியாதா? நல்ல மூளைகளை நல்ல முறையில் நற்காரியங்களுக்குப் பிரயோஜனப் படுத்த முடியாதா? சட்ட ரூபமாக வில்லா விடினும், சர்க்காரும் மற்ற வியாபார சங்கங்களுமாகக் கலந்து கொண்டு சம்பளங்களை அறிவுக்குத் தக்கவாறு நிர்ணயிக்க முடியாதா? கலாசாலைப்படிப்பை மட்டும் கவனிக்க வேணுமென்பதல்ல எனது நோக்கம். இதர விசேஷ குணங்களிருக்குமிடங்களில் அதனை நன்கு பொருள் படுத்த வேண்டும். ஆனால் கல்வியறிவுக்கு சில நற்குணங்களெல்லா முண்டென்பதை மறுக்க முடியாது. அவைகள் நன்கு கவனிக்கப் பட வேண்டும். மாதம் ஒன்றுக்கு ஒரு பி. ஏ. க்கு இவ்வளவென்றும், எம். ஏ. க்கு இவ்வளவென்றும் நிச்சயப் படுத்துவது பொருந்தும்.

யுத்த காலத்தில் உணவுப் பொருள்களின் விலைகளை உயர்த்தி விடாது கவனிப்பதற்குக் கமிட்டிகள் நிறுவுவது போல் பட்டதாரிகள் அதிகமாவதைக் கருதி அவர்களின் மதிப்பைக் குறைத்து விடாது கண்காணித்துவர ஆங்காங்கு கமிட்டிகள் நிறுவுவதும் விரும்பத்தக்கதாகும்.

அவ்விதம் நிச்சயப் படுத்தி விட்டால் குறைந்த படிப் புள்ளவர்களை குறைந்த சம்பளத்தில் நியமித்துக் கொண்டு விடுவார்களே என்ற பயமேற்படலாம். தற்காலத்தில் அவ்விதப்பயம் ஏற்படுவதற்கு ஏதுவில்லை, வியாபாரஸ்தலங்கள் காலத்துக்கேற்ற விதத்தில் உயர்தரமான வேலைகளையே விரும்புவதால் உயர்ந்த படிப்பாளிகளை அமர்த்திக் கொள்ளாமல் போனால் போதுமான லாபம் பெற முடியாதென கண்டு கொண்டுள்ளன. பாடசாலைகளில் படிக்க வைக்கும் முறையும் உயர்ந்த தரமானதே. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாய் அதிகப் படிப்புள்ளவர்கள் அதிகமானதே இதற்குக் காரணமென்றும் சொல்லலாம். ஆகவே முன்னேறி வந்தவர்கள் குறைந்த படிப்பாளர்களைத் தேட விரும்புவார்களென்று நினைப்பதற்கில்லை.

பின்லாந்து— என்ன அக்கிரமம்!

ஐரோப்பாவின் வட கிழக்குக் கோடியிலுள்ளது பின்லாந்து. மிகச்சிறிய நாடு. இதன் விஸ்தீரணம் 132,608 சதுர மைல்; ஜனத்தொகை சுமார் 36½ லட்சம். இது ஸ்வீடன் தேசத்தின் ஆதிக்கத்திலும் ருஷ்யா தேசத்தின் வசத்திலும் மாறி மாறி வந்து கொண்டிருந்தது. கடைசியில் 1809ம் வருஷ முதல் 1917ம் வருஷம் வரையில் ருஷ்யாவின் வசத்திலிருந்தது. பின்னர், ஐரோப்பிய யுத்தத்தின் இறுதிக் காலத்தில் ருஷ்ய ஏகாதிபத்தியம் சிதறுண்டு போகவே, பின்லாந்து 6—12—1917ல் சுதந்திரக் கொடி தூக்கியது. 1920ம் வருஷம் டோர்பாட் என்ற நகரத்தில் நடைபெற்ற ஓர் உடன்படிக்கையின் விளைவாக பின்லாந்தின் சுதந்திரம் மற்ற எல்லா வல்லரசுகளாலும் அங்கீகரிக்கப்பட்டது. அது முதற் கொண்டு இஃது ஒரு குடியரசு நாடாக இருந்து வாழ்ந்து கொண்டு வருகிறது. இப்பொழுது இதற்கு ஆபத்தேற்பட்டிருக்கிறது. ருஷ்யா இதன் மீது படையெடுத்திருக்கிறதல்லவா?

இந்தப் பின்லாந்தின் படையெடுப்பைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்வது நல்லது! ஐரோப்பாவின் பல வல்லரசுகளிடமிருந்தும் ஏராளமான யுத்த உதவிகள் இந்த நாட்டுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றனவென்றும், ருஷ்யாவின் மகத்தான ஆகாயப்படையும் தரைப்படையும், இந்தச் சிறிய நாட்டை இன்னும் வெற்றி கொள்ள முடியவில்லையென்றும் பத்திரிகைகளில் படித்து வருகிறோம். ஆனால் இந்தப் பத்திரிகைச் செய்திகளிலிருந்து, ஓர் உண்மை மட்டும் சரியாகப் புலனாவதில்லையென்று அஞ்சுகிறோம். அதாவது, பின்லாந்தில் இப்பொழுது ஏதேனும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்குமானால் அது பெரும்பாலும் பின்லாந்தின் வடபாகத்திலேதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ருஷ்யா, தனது ராணுவ பலம் முழுவதையும் உபயோகித்திருக்குமானால், இத்தனை நாட்களுக்குள், பின்லாந்து இருந்த இடம் தெரியாமலே போயிருக்கும். ருஷ்யாவின் ஆகாய விமானங்கள், டாங்கிகள் முதலிய பலவற்றை பின்லாந்து படையினர், சுட்டுக் கீழே வீழ்த்திவிட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால், இரும்பு விலை மிகவும் உயர்ந்திருக்கும் இக்காலத்தில், வீழ்த்தப்பட்ட ஆகாய விமானங்கள், டாங்கிகள் முதலியவற்றிலிருந்து கிடைக்கும் இரும்புத் துண்டுகளை, யுத்த தளவாடங்கள் செய்யும் நாடுகளுக்கு விற்றால்கூட, பின்லாந்துக்கு நல்ல லாபம் கிடைக்குமே. இது கிடக்கட்டும். வட மகா சமுத்திரத்திலுள்ள, ஒரு சிறிய நாட்டைப்பற்றி ஏன் இவ்வளவு சச்சரவு?

பின்லாந்துக்குவடபாகத்தில்ரிபாச்சி தீபகற்பம் என்றொரு பிரதேசம்

இருக்கிறது. வட சமுத்திரத்துடன் பின்லாந்துக்குத் தொடர்பு ஏற்பட்டிருப்பது இந்தத் தீபகற்பத்தின் ஒரு சிறு பாகத்தின் மூலமாகத்தான். 1920ம் வருஷத்து டோர்பாட் உடன்படிக்கையின் விளைவாக, ருஷ்யாவினிடமிருந்த இந்தப் பிரதேசம் பின்லாந்துக்குக் கிடைத்தது. பின்லாந்துக்கு இந்தப் பிரதேசம் கொடுக்கப்பட்டதை நார்வே, ஸ்வீடன், ருஷ்யா முதலிய நாடுகள் அப்பொழுதே ஆட்சேபித்தன.

இந்த ரிபாச்சி தீபகற்பத்திலும், இதைச் சுற்றியுள்ள பெட்ஸாமோ ஜில்லாவிலும் நிக்கல் நாணயச் சுரங்கங்கள் இருக்கின்றன. தவிர, வட மகா சமுத்திரத்திற்கும் அத்லாந்திக் மகா சமுத்திரத்திற்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய ஒரு துறைமுகம் ரிபாச்சி தீபகற்பத்தில் இருக்கிறது. குளிர் காலத்தில் பால்டிக் கடலோரமாயுள்ள எல்லாத் துறைமுகங்களிலும் பனி உறைந்து போய், கப்பல் போக்குவரத்துக்குச் சௌகரியமாக இல்லாதிருக்கின்றன. தவிர, பால்டிக் கடலைச்சுற்றியுள்ள நாடுகள் மனது வைத்தால், இந்த பால்டிக் கடலை, கப்பல் போக்குவரத்துக்கு லாயக்கில்லாமல் அடைத்து விடலாம். ரிபாச்சி தீபகற்பத்திலுள்ள துறைமுகமோ, குளிர் காலத்திலும் கப்பல் போக்குவரத்துக்கு லாயக்காயிருக்கிறது. இந்தத் துறைமுகத்தில் பனி உறைவது கிடையாது. மற்றும், இந்தத்துறைமுகத்தின் மூலமாக, மீன் வியாபாரமும் மர வியாபாரமும் அதிகமாக நடைபெறுகின்றன.

1920ம் வருஷத்து டோர்பாட் உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டதற்கு, ஜெர்மானிய வமிசத்தினரான சில பணக்கார பிரபுக்களே காரணர்களாயிருந்தார்கள். பிற்காலத்தில், ஜெர்மனி மீது ருஷ்யா தாக்குமானால் அதற்கு ஒரு முட்டுக்கட்டை மாதிரி இருக்கட்டும் என்று கருதியே இந்த ஜெர்மானியப் பிரபுக்கள், மேற்படி உடன்படிக்கையை நிறைவேற்றி வைத்தார்கள். இப்பொழுது பின்லாந்துப் படையின் பிரதம சேனாதிபதியாயுள்ள தளபதி மான்னர்ஹீம் என்பவன், இந்த ஜெர்மானியப் பிரபுக்களில் ஒருவனே. எனவே, இப்பொழுது ருஷ்யா, பின்லாந்தின் மீது படையெடுத்திருக்கிறதென்று சொன்னால், மேற்படி டோர்பாட் உடன்படிக்கையை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்வதுதான். பின்லாந்தை, ருஷ்யாவுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம், ஸ்டாலினுக்குக் கிடையாதென்று சொல்லப்படுகிறது. ஆனால், இந்தச் சிறிய ஒரு துறைமுகத்தின் மூலமாக மேற்கு வல்லரசுகளால் தனக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படக் கூடாதென்று மாத்திரம் ருஷ்யா உறுதி பூண்டிருக்கிறது.

ஏற்கனவே ருஷ்யா இந்தத் துறைமுகத்தின் மூலமாக ஆபத்தை அநுபவித்திருக்கிறது. 1919–20ம் வருஷங்களில் சோவியத் குடியரசு ஏற்பட்டு அப்பொழுதுதான் குழந்தைப் பருவத்திலிருந்த காலத்தில், அதனை மேற்கு வல்லரசுகள் நசுக்க ஆரம்பித்தது இந்தத் துறைமுகத்தின் மூலமாகத்தான். அப்படிப் பட்ட ஆபத்து தனக்கு மீண்டும் ஏற்படக் கூடாதென்பதற்காகவே, தற்காப்பு நிமித்தம், ருஷ்யா இந்தத் துறை

முகம் தன் சுவாதீனத்தில் இருக்க வேண்டுமென்று கோருகிறது.

நடுவில் ஒரு சிறிய விஷயம். பெட்ஸாமோ பிரதேசத்தில் நிக்கல் சுரங்கங்கள் இருக்கின்றனவென்று சொன்னோமல்லவா? இந்தச் சுரங்கங்கள் யாவும் பிரிட்டிஷ் மூலதனத்தைக் கொண்டு நடைபெறுகின்றன. இத்தியாதி விஷயங்களினால் விளங்குவதென்னவென்றால், பின்லாந்து, பிறருடைய ஆடற் கருவியாக இருந்து கொண்டு சண்டை போடுகிறதென்பது நிச்சயமாகிறது.

ருஷ்ய ஆபத்தைத் தடுக்க வேண்டி, ஜெர்மனி, இத்தலி, பிரிட்டன், முதலிய நாடுகள் பின்லாந்துக்கு யுத்த தளவாடங்களைக் கொடுத்து உதவி செய்கின்றனவென்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. (இ. இ.)

சமுத்திரங்களின் விஸ்தீரணம்

பெயர்.	சதுர மைல்.
பசிபிக் மகா சமுத்திரம்	71,000,000
அத்லாந்திக் ,,	34,000,000
இந்திய ,,	28,000,000
தென் ,,	6,000,000
வட ,,	4,000,000

ருஷ்யா, ஏன் ஜெர்மனியோடு ஒப்பந்தம் செய்து கொண்டது?

—காட்ஸ்ஜீ பூஸே

1938ம் வருஷம் அக்டோபர் மாதம், ஜெக்கோ ஸ்லோவேகியாவைப்பற்றி ஒரு முடிவு கட்டுவதற்காக ம்யூனிக் மகாநாடு கூடியது. கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தலி ஆகிய இந்த நான்கு நாடுகளே இந்த மகா நாட்டில் கலந்து கொண்டன. இதற்கு ருஷ்யா அழைக்கப் படவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில், சர்வ தேசிய விவகாரங்களில் ருஷ்யாவின் அந்தஸ்து மிகவும் தாழ்மைப் பட்டதாக இருந்தது. மேற்கு ஐரோப்பிய வல்லரசுகள், ருஷ்யாவை அலட்சியமாகவே கருதின. ம்யூனிக் ஒப்பந்தம் நிறைவேறுவதற்கு முன்னரேயே ருஷ்யாவுக்கும் ஜெக்கோ ஸ்லோவேகியாவுக்கும் ஓர் உடன்படிக்கை நிறைவேறியிருந்தது. அதன்படி, ஜெக்கோ ஸ்லோவேகியா சம்பந்தப்பட்ட எந்த விவகாரத்திலும் தலையிட்டு வேண்டுவன செய்ய ருஷ்யாவுக்கு அதிகாரமிருந்திருக்கிறது. ஆனால் ஜெர்மனியும், இத்தலியும் சேர்ந்து, ம்யூனிக் மகா நாட்டில் ருஷ்யா கலந்து கொள்ளக் கூடாதென்று கண்டிப்பாகக் கூறி விட்டன. பிரிட்டனும் பிரான்ஸுமோ, ருஷ்யாவைக் கலந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை யென்று கருதிவிட்டன. இதனை, ருஷ்ய அரசாங்கத் தலைவர்கள், தங்களுக்கேற்பட்ட அவமானமாகவே கருதினார்கள். எனவே, அது வரையில் உள்நாட்டு எதிர்ப்புகளை அடக்குவதில் முனைந்திருந்த இவர்கள்—ருஷ்யத் தலைவர்கள்—அந்த வேலையை நிறுத்திக் கொண்டு, வெளி நாட்டு விவகாரங்களில் அதிகமாகக் கவனஞ் செலுத்தத் தொடங்கினார்கள். சில மந்திரிப் பதவிகள் மாற்றியமைக்கப்பட்டன.

இதற்கிடையில், ஹிட்லருக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்துக் கொண்டு வந்தது. ஜெக்கோ ஸ்லோவேகியா, மெமல் முதலிய பிரதேசங்கள் ஜெர்மனி வசம் போய்ச் சேர்ந்தன. ஐரோப்பா முழுவதிலும் ஒருவித பரபரப்பு ஏற்பட்டது. போலந்துக்கு, தான் இனி நேரடியாகத் தாக்கப் படலாமென்ற அச்சம் ஏற்பட்டது. பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் கவலை உண்டாயிற்று. என்ன செய்வதென்று தெரியாத நிலைமையில், தண்ணீரில் மூழ்குகிறவன் வைக்கோலைப் பிடித்துக் கொண்டு மிதக்க முயன்ற கதையைப் போல, எந்த ருஷ்யாவைச் சில மாதங்களுக்கு முன் அலட்சியமாகப் பார்த்தனவோ அதே ருஷ்யாவுடன் சமரஸம் பேச ஆரம்

பித்தன. இதே மாதிரி, இது காறும் ஜெர்மனிக்குச் சாதகமாகவும், ருஷ்யாவுக்கு விரோதமாகவும் இருந்த போலந்தும் திடீரென்று மாறி ருஷ்யாவுக்கு ஆதரவு காட்டத் தொடங்கியது. ஆனால் இதற்கு உள்ளூர ருஷ்யாவின் மீது சந்தேகம் இருந்து கொண்டிருந்தது. ஜெர்மனியைச் சுற்றி வளைத்துக் கொள்ள வேண்டுமென்ற திட்டம் வெற்றி பெற வேண்டுமானால், பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றுபட வேண்டியதாயிருந்தது. இதனால் பிரிட்டனும், பிரான்ஸும், ருஷ்யாவோடு ராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொள்ள ஏற்பாடு செய்தன.

இது, ஜெர்மனிக்கும் இத்தலிக்கும் திகிலைக் கொடுத்தது. எனவே, இந்த இரண்டு நாடுகளும், ஆங்கிலோ-பிரெஞ்சு-ருஷ்யக் கூட்டுறவினின்று ருஷ்யாவைப் பிரிக்க முயன்றன. இவைகளினால் என்ன ஏற்பட்டதென்றால், சில மாதங்களுக்கு முன்னர் வரையில் ருஷ்யாவைப் புறக்கணித்து வந்த எல்லா நாடுகளும், அந்த ருஷ்யாவையே காதலிக்கத் தொடங்குகிற காட்சி தோன்றியது.

ஜெர்மனிக்கு விரோதமாக, கிரேட் பிரிட்டனுடனும் பிரான்ஸுடனும் சேர்ந்து கொண்டு ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் ருஷ்யாவுக்கு இல்லையென்று தோன்றுகிறது. இந்த எண்ணம் இல்லையானால், அது — ருஷ்யா — ஏன் பிரிட்டனுடனும் பிரான்ஸுடனும் ராணுவ ஒப்பந்தம் நிறைவேறுவதற்கான சமரஸப் பேச்சுகள் நடத்த வேண்டும்? இது சரியான கேள்விதான். இதற்கு இரண்டு காரணங்களே இருக்க முடியும். ஒன்று, பிரிட்டனுடனும் பிரான்ஸுடனும் சமரஸப் பேச்சுகள் நடத்திக் கொண்டிருப்பதன் மூலமாக ஜெர்மனியின் மனதிலும் இத்தலியின் மனதிலும் ஒரு கலவரத்தை உண்டு பண்ணலாமென்றும், அது காரணமாக ஜெர்மனியிடமிருந்தும், இத்தலியிடமிருந்தும் அதிகமான சலுகைகளைப் பெறலாமென்றும் ருஷ்யா கருதியிருக்கலாம். இரண்டாவது, எந்த ஜனநாயக வல்லரசுகள் -பிரிட்டனும் பிரான்ஸும்- சமீபகாலம் வரை தன்னைப் புறக்கணித்தனவோ, அதே வல்லரசுகளுடன் இப்பொழுது சமரஸப் பேச்சுகள் நடத்தி, அது மூலமாகத் தன்னுடைய அரசியல் அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்ற ஆவலும் ருஷ்யாவுக்கு இருக்கலாம்.

ஜெர்மனியை விரோதித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் ருஷ்யாவுக்கு இல்லையென்று மேலே கூறினோம். இதற்கு முக்கியமான காரணம் ஒன்றுண்டு. அது தூர கிழக்குப் பிரதேசத்திலுள்ள நிலைமையை அநுசரித்தே இந்த நிலைமை இருக்கிறது. ஜப்பானும் ஜெர்மனியும் ஒன்று சேர்ந்து கொண்டு விட்டால், அது ருஷ்யாவுக்கு, ஆபத்தாக முடியும். ஏனென்றால், ஜெர்மனியும் ஜப்பானும் ஒன்றுபட்டு, ருஷ்யாவை ஒரே சமயத்தில் தாக்குமானால், ருஷ்யா தனது மேற்கெல்லைக்கும் கிழக்கெல்லைக்கும் ஒரே சமயத்தில் துருப்புகளை அனுப்பிச் சமாளிக்க வேண்டும். அது மிகவும் கடினமல்லவா? ஆகையினாலேயே, ஜெர்மனியையும் ஜப்பானையும்

ஒரே சமயத்தில் விரோதித்துக் கொள்ளக்கூடாதென்பது ருஷ்யாவின் நீண்ட காலக் கொள்கையாக இருந்து வருகிறது. இந்தக் கொள்கையை அநுசரித்துத்தான், அது ஜெர்மனியுடன் அநேக ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது.

கிரேட் பிரிட்டனும் பிரான்ஸூம் பலஹீனமான நாடுகள் என்றும், ஜெர்மனி பலமுள்ள நாடென்றும் ருஷ்யா கருதுகிறது. பலஹீனமான நாடுகளுடன் சேர்ந்து கொண்டு, பலமுள்ள நாட்டுடன் சண்டை போடுவதில் பிரயோஜனமில்லையென்று அது நினைக்கிறது. பலமுள்ள சத்துருவைப் பகைத்துக் கொள்ளாதே என்பது ருஷ்ய அரசியல் வாதிகளின் முதல் கொள்கை. கொள்கை வித்தியாசம் காரணமாக பகைத்துக் கொள்ளலாமா, கூடாதா வென்பது இரண்டாம் பட்சந்தான். தவிர, ருஷ்ய அரசியல் தலைவர்கள் சென்ற 1914ம் வருஷத்து யுத்தத்தின் போதும், ருஷ்யப் புரட்சியின் போதும், மற்ற ஐரோப்பிய வல்லரசுகளிடமிருந்து நல்ல பாடங்கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதை அவர்கள் மறந்துவிட விரும்பவில்லை.

1914ம் வருஷ யுத்தத்தின் போதும், ருஷ்யப் புரட்சியின் போதும் இந்தக்கட்டுரை எழுதுகிறவர் ருஷ்யாவிலிருந்தார். அப்பொழுது, மேற்குப் போர்முனையில் ஜெர்மானியர்கள், நேசக் கட்சிப் படைகளைப் பலமாகத் தாக்கித் திணற வைக்கிற சமயத்தில், தாங்கள் சிறிது விடுதலை பெறும் பொருட்டு, ருஷ்யர்களைக் கிழக்குப் போர்முனையிலிருந்து ஜெர்மானியர்களைத் தாக்குமாறு, பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும் கூறுவார்கள். இதற்கு உடனே ருஷ்யர்கள் இணங்கா விட்டால் யுத்த தளவாடங்களும் பணமும் உதவ முடியாதென்று பயமுறுத்துவார்கள். இதற்காக, ருஷ்யர்கள், கிழக்குப் போர் முனையில் ஜெர்மானியர்களைத் தாக்கி அதிகமான நஷ்டத்தையடைவார்கள். அப்படி நஷ்டமடைந்து பின்னடைகிற போது, நேசக் கட்சியினர், மேற்குப் போர் முனையில் ஜெர்மானியர்களைத் தாக்காமல் சும்மா இருப்பார்கள்.

பிரிட்டனுடையவும் பிரான்ஸினுடையவும் இந்தச் சுய நலங் காரணமாக, ருஷ்யா, ஜெர்மனியுடன் தனியாகச் சமாதானம் செய்து கொண்டு விடுமென்றும், ருஷ்யாவிலேயே ஒரு புரட்சி உண்டாகக் கூடுமென்றும், இந்தக் கட்டுரை எழுதுகிறவர், எந்த ஜப்பானியப் பத்திரிகைக்கு (ஓஸாகா மைனிச்சி) பிரதிநிதியாக இருந்தாரோ அந்தப் பத்திரிகைக்கு எழுதினார். இந்தச் செய்தி, அப்பொழுதைய ஜார் அரசாங்கத்திற்கு அதிக கோபத்தை உண்டு பண்ணி விட்டது. அதற்காகச் சிறிது காலம், இந்தக் கட்டுரை எழுதுகிற வரை, சிறையிலும் அடைத்து வைத்தது. அந்தக் காலத்தில்—அதாவது 1914ம் வருஷ யுத்த காலத்தில்—பிரிட்டனுடையவும் பிரான்ஸினுடையவும் சுய நலங் காரணமாக, ஜெர்மானியர்களுடைய தாக்குதல்களினால் தாங்கள் அதிக நஷ்டமடைந்த அநுபவத்தை ருஷ்யர்கள் இன்னும் மறக்கவில்லை. ஆகையால், அது,—ருஷ்யா—பிரிட்டனையும் பிரான்ஸையும் கைவிட்டு விட்டு, ஜெர்மனியோடு கைகுலுக்கியதில் என்ன ஆச்சரியமிருக்கிறது!

(காண்டம்பரரி ஜப்பான்)

ஜெர்மன்-ருஷ்ய ஒப்பந்த விவரம்

1939ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 23ந் தேதி, ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்பட்டதல்லவா? இந்த ஒப்பந்தந்தான், தற்போதைய யுத்தத்திற்கு மூலகாரணம் என்று அரசியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆதலின் இந்த ஒப்பந்தத்தைக் கீழே தருகிறோம்.

ஒப்பந்தம்

ஜெர்மனிக்கும், சோவியத் அபேதவாதக் குடியரசு ஐக்கிய நாட்டுக்கும் மத்தியில் இருக்கிற சமாதான நிலைமையை வலுப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், 1926ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும்ஏற்பட்ட மத்தியஸ்தஒப்பந்தத்தை[1] அடிப்படையாகக் கொண்டு, ஜெர்மன் ரீச்[2] சும் சோவியத் அபேதவாதக் குடியரசு ஐக்கிய நாடும்[3] கீழ்க்கண்ட ஒப்பந்தத்திற்கு வந்திருக்கின்றன:—

ஷரத்து—**1**. ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட உபய கட்சியினரும், எந்தப் பலாத்காரச் செயல்களினின்றும், எந்த ஆக்ரமிப்புச் செயலினின்றும், பரஸ்பரம் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்வதினின்றும், தனிப்பட்டோ, சேர்ந்தோ மற்ற அரசுகளைத் தாக்குவதினின்றும் தங்களைத் தகைந்து கொள்கிறார்கள்.

ஷரத்து—**2** உபய கட்சியினருள் எவரேனும் ஒரு கட்சியினர், வேறொரு மூன்றாவது வல்லரசின் யுத்தச் செயலுக்கு இலக்காகுவாரானால் மற்றொரு கட்சியினர், அந்த மூன்றாவது வல்லரசுக்கு எந்த விதத்திலும் உதவி செய்யக்கூடாது.

ஷரத்து—**3**. உபய கட்சியினருடைய அரசாங்கங்களும், இருதரப்பினருடைய நலன்கள சம்பந்தப்பட்ட விஷயங்களில் அடிக்கடி கலந்தாலோசிக்கும்படியான கூட்டுறவை வைத்துக் கொள்ள வேண்டும்.

ஷரத்து—**4**. உபய கட்சியினரில் எவரேனும் ஒரு கட்சியினருக்கு விரோதமாக, மற்ற வல்லரசுகள் ஒரு குழுவாகச் சேர்ந்து கொள்ளுமானால்

---

1 இதற்கு 1926ம் வருஷத்து பெர்லின் உடன்படிக்கை யென்று பெயர், 1921ம் வருஷத்திலிருந்து 1929ம் வருஷம் வரை, இரண்டு நாடுகளுக்கும் ஏற்பட்ட பல முக்கியமான ஒப்பந்தங்களுள் இதுவும் ஒன்று.

2 ரீச் என்றால் ராஜ்யம்.

3 ருஷ்யா.

—ஆசிரியர்.

அந்தக் குழுவுடன் (கூட்டத்துடன்) உபய கட்சியினரும் சேரக்கூடாது.

ஷரத்து–5. உபய கட்சியினருக்குள்ளும் எந்த விஷயத்தைப் பற்றியேனும் தகராரோ, அபிப்பிராய வேற்றுமையோ ஏற்பட்டால், இரண்டு கட்சியினரும், அந்தந்த தகராறுகளையும் அபிப்பிராய வேற்றுமைகளையும் ஒருவர்க்கொருவர் கலந்து பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்; அல்லது மத்தியஸ்த கமிட்டிகள் வைத்துத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

ஷரத்து–6. இந்த ஒப்பந்தம் பத்து வருஷ காலத்திற்குச் செல்லுபடியானதாயிருக்கும். இந்தக் கால வரையறை முடிவதற்கு ஒரு வருஷம் முன்னர், உபய கட்சியினருள் எவரேனும் ஒரு கட்சியினர், இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்தாலொழிய, இந்த ஒப்பந்தம் இந்தப் பத்து வருஷத்திற்குப் பின்னர் தொடர்ந்தாற் போல் ஐந்து வருஷம் அமுலில் இருக்கும்.

ஷரத்து–7. இந்த ஒப்பந்தம் கூடிய சீக்கிரத்தில் ஊர்ஜிதம் செய்யப்படும். இந்த ஊர்ஜித பத்திரம் பெர்லினில் உபய கட்சியினராலும் ஏற்றுக் கொள்ளப்பெறும். ஒப்பந்தம், கையெழுத்தானவுடனே அமுலுக்கு வரும்.

இருபது வருஷங்களுக்கு முன்னர் கெய்ஸரோடு போராடியது போல், இப்பொழுது நேசக் கட்சியினர், ஹிட்லரோடு போராடுவதாகச் சொல்லப் படுகிறது. சென்ற தலைமுறையில் ஏற்பட்ட துயரங்களும், தியாகங்களும், நல்ல புத்தியுடைய ஓர் உலகத்தைச் சிருஷ்டித்துக் கொடுக்கவில்லை. இப்பொழுது, ஹிட்லரைத் தோற்கடித்து விடுவதனல் மட்டும், மானிட சமூகம் எப்படி நன்மை யடையப் போகிறது? சத்துருக்களைத் தோல்வியுறச் செய்வதென்ற ஒன்றே நமது நோக்கமாயின், இந்தத் தலைமுறையினர் கொண்டுள்ள நம்பிக்கையெல்லாம் சிதறிப் போகுந்தான். நாம் ஹிட்லரோடு யுத்தஞ் செய்ய வேண்டுவதில்லை. பொருளைக் குவிக்கப் பண்ணி அதனல் நைந்து போயிருக்கிற சமுதாய அமைப்போடும், ஒன்றுக் கொன்று சம்பந்த மில்லாத பொருளாதார முயற்சிகளுடனும், பலரை அடிமை கொண்டு ஒரு சிலரை சௌக்கியமாக வாழப் பண்ணுகிற சமுதாய அமைப்புடனும் போராட வேண்டும்.

—ஸர். எஸ். ராதாகிருஷ்ணன்

நட்சத்திரங்கள்

—ச. மு.

வான சாஸ்திரம், நட்சத்திரங்களைப் பற்றியும், நமக்குப் பெரிதாகவும் பிரதானமாகவும் தோன்றும் இப்பூவுலகத்தைப் பல கோடி உலகங்களுள் ஒன்றாகக் காட்டி, பிரபஞ்சத்தின் பெருமையையும் நம் மனதுக்கு அறிவுறுத்துவது.

தினமும் பொழுது விடிகிறது; நாள்முழுவதும்ஜனங்களுக்கு எத்தனையோ வேலையும் விசாரமும்; பொழுது சாய்கிறது; வானத்தில் நட்சத்திரங்கள் தோன்றி முழுவதும்பிரகாசிக்கின்றன; இத்தனை மின்மினிகள் சேர்ந்தும் பகலவனுக்குச் சமானமில்லையேயென்று எண்ணி, விளக்கேற்றி முன்னிரவில் வேலைகளை முடித்துவிட்டு, ஜனங்கள் படுத்துத் தூங்குகிறார்கள். இவ்வழிப் போக்கருக்கு வெளிச்சம் காட்டுவதற்காகவே, கருணைக் கடவுள் நட்சத்திரங்களை சிருஷ்டித்தார் என்று பல ஜனங்கள் சாமானியமாய் எண்ணுகிறார்கள்.

பிரபஞ்சத்தின் உண்மை அமைப்பும் பெருமையும் வெகு நாளாக ஜனங்களுக்குத் தெரியவில்லை. கி. பி. பதினைந்தாவது நூற்றாண்டில் 'கோபர்னிகஸ்' என்ற வான சாஸ்திரி, பூமி இப்பிரபஞ்சத்துக்கு நடுநாயகமாக விளங்கவில்லை; சூரியன் அதைச் சுற்றவில்லை; சூரியனைச் சுற்றும் உபகிரகங்களில் பூமி ஒன்று என்று உண்மையைக் கண்டுபிடித்துச் சொன்ன பொழுது பல ஜனங்களும் அவ்வுண்மையை நம்பவில்லை.

தூரத்தால் மின் மினிகளாகத் தோன்றும் நட்சத்திரங்கள் உண்மையில் பல சூரியன்கள்; செவ்வாய், சனி, பூமி முதலிய உபகிரகங்கள சூரியனைச் சுற்றுவது போல, அந்தச் சூரியன்களுடைய உபகிரகங்கள் அவற்றைச் சுற்றுகின்றன என்று நிரூபிக்க 'ப்ரூனோ' என்ற வான சாஸ்திரி, அவ்வுண்மையை ஸ்தாபிக்க முயன்றதற்காக உயிரை இழந்தார்; அந்த நாளில் மத போதகர்கள், அவர் கொள்கை கிறிஸ்துவ மதக்கொள்கைகளுக்குவிரோதமானது என்று எண்ணி, அவரை உயிரோடு தீக்கொளுத்திக் கொன்றார்கள். அவர் தண்டனைக்குள்ளாகி மூந்நூறு வருடங்களுக்குள் அவர் கொள்கையின் உண்மை அறிஞர் அனைவர் மனத்திலும் நிலை பெற்றது.

இப்பொழுதோ 'பிரபஞ்சத்தில் பல சூரிய லோகங்கள் உள்ளன; அந்தச் சூரியன்கள் பல நமது பூமி பிரதட்சிணம் செய்யும் சூரியனைக் காட்டிலும் ஆயிர மடங்கான விஸ்தீரணமும்

தேஜசும் உள்ளவை; காலால் தேய்த்துத் தீ அவித்து விடக் கூடிய வாணப் பொறிகளை ஒத்து மினுமினுக்கும் நட்சத்திரங்கள் உண்மையில் பிரமாண்டமான தீக் கோளங்கள்; ஒரே கும்பலாய்த் தோன்றும் நட்சத்திரங்களுக்கிடையில் கணக்காலன்றி மனோபாவனையால் எண்ண முடியாத அளவிறந்த தூரம் கிடக்கிறது' என்ற வானசாஸ்திர உண்மைகளை உலகம் ஒப்பிப் பள்ளிக் குழந்தைகளுக்குப் பாடங்களாகக் கற்பிக்கப் படுகின்றன.

பிரபஞ்சம் இப்படிப் பட்டதென்றால், மற்ற உலகங்களில் உயிர் வாழ்வுண்டோ? எவ்வகைப் பிராணிகள் அவ்வண்டங்களில் சஞ்சரிக்கக் கூடுமோ? அப்பிராணிகள் இப்பூவுலகத்து மனிதரையும் விலங்குகளையும் ஒத்திருப்பரோ? அறிவில் நம்மினும் மேதாவிகளாய் இருப்பார்களோ? என்ற பிரச்னைகள் உண்டாகின்றன. இக்கேள்விகளுக்குத் தீர்மானமான பதில் வுன்றுமில்லை.

சாஸ்திர ஞானத்துக் கெட்டிய வரை நட்சத்திரங்கள் சூரியனையொத்த தீக்கோளங்களாகத் தோன்றுகின்றன. ஆனால், அந்த சக்கரவாளங்கள் பலவற்றுள்ளும் உயிர் நிலைக்கக் கூடிய கிரகங்கள் ஒன்றுமில்லை யென்று நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும்? சீதமும், உஷ்ணமும், காற்றும், நீரும், இன்ன இன்ன பாங்காயிருந்தால்தான் நாம் அறிந்தபடி உயிர் நிலைக்கக் கூடும் என்று நமக்குள்ள அநுபவ ஞானத்தைக் கொண்டு, பூமியுடன் சூரியனைச் சுற்றும் உப கிரகங்களில் செவ்வாய் ஒன்றைத் தவிர்த்து மற்றவற்றில் உயிர் வாழாது என்று மட்டும் சொல்லலாம்.

இப்பொழுது சந்திர மண்டலம் சிதப்பட்டு விட்டது; முற்பட்ட ஓர் யுகத்தில் அதில் உயிர் வாழ்வு இருந்திருக்கலாம் என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். செவ்வாய், வாழ்வுள்ள கிரகமா இல்லையா என்பது இன்னும் நிச்சயிக்கப்படவில்லை. செவ்வாயின் சீதோஷ்ண ஸ்திதியில் உயிர் வாழ்வு கூடும். தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாகப் பார்த்ததில் செவ்வாயின் மேல் பரப்பில் ஆயிரக் கணக்கான கால்வாய்கள் போன்ற கோடுகள் தென்பட்டன. இவற்றைக் கொண்டு அந்த கிரகத்தின் பெரும் பான்மையான இடங்களில் நீர் வற்றிப் போய்விட்டதென்றும், உத்தர தட்சண துருவங்களை மூடி யிருக்கும் பனியுருகி நீர்ப் பாய்ச்சல் ஏற்படும்படி அறிவுள்ள செவ்வா யுலகத்தார் • துருவங்களிலிருந்து மத்திய பாகத்துக்குக் கால்வாய்கள் வெட்டி யிருக்க வேண்டுமென்றும், இத்தகைய செயற்கைத் திறம் வாய்ந்தவர்கள், தேக அமைப்பிலும், யூகத்திலும், அறிவிலும், நாகரிகத்திலும் நம்மினும் சிறந்தவராய் இருத்தலும் கூடும் என்றும் சில வான சாஸ்திரிகள் நினைக்கிறார்கள்.

மற்றவர்கள் செவ்வாயில் இயற்கையில் அமைந்த மேடு பள்ளங்களை தூரப் பார்வைக்குக் கால்வாய்கள் போலத் தோன்றுகின்றன என்றும், அந்த கிரகத்தில் உயிர்ப் பிராணிகள் உண்டு என்று எண்ண ஒரு அத்தாட்சியுமில்லை என்றும் சொல்கிறார்கள். நாம் செவ்வாய் உலகத்தாரைப் பற்றி யோசிப்பது போல, அதி விவேகிகளாயிருக்கக்கூடும் செவ்வாயர், பூமி

யைப்பற்றி என்ன சிந்திக்கிறார்களோ என்று எண்ணி, இந்த பூமியில் அறிவுள்ள உயிர் சஞ்சாரம் உண்டு என்று அவர்களுக்கு நிரூபிக்க, செவ்வாயை நோக்கி பீரங்கி வெடி போட்டும், ஆகாச பாணங்கள் விடுத்தும் 'வைர்லெஸ்' தூதனுப்பியும் பார்த்தார்கள் சிலர். இந்த சைகைகள் செவ்வாய் வரை எட்டியதா, அங்கு எவராலும் கவனிக்கப்பட்டதா என்று ஒன்றும் தெரியவில்லை.

பூமியின் அளவை சூரியன் அளவுடன் ஒப்பிட்டால் ஒரு தேங்காயுடன் கடுகை ஒப்பிட்டாற்போற் காணுமாம். சூரியன் எம்மடங்கு பூமியை விடப் பெரியதோ அம்மடங்கும், அதற்கு மும்மடங்கும் சூரியனைவிடப் பெரிய பெரிய சூரியன்கள் உள்ளன. பூமிக்கும் அவற்றுக்குமுள்ள தூரத்தால், அவை சிறு நட்சத்திரங்களாகத் தோன்றுகின்றன. பல, தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாகவன்றி வெறும் கண் பார்வைக்குத் தென்படுவதேயில்லை. பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் 93,000,000 மைல்கள். சூரிய ஒளியின் ஒரு கிரணம் அத்தூரத்தைக் கடந்து பூமியைச் சேருவதற்கு 7 நிமிஷங்களாகின்றன. நட்சத்திரங்கள் சிலவற்றிலிருந்து ஒரு கிரணம் பூமியைச் சேருவதற்கு 200 வருடங்களாகுமாம்! அவ்வளவு தூரத்துக்கப்பால் உள்ள ஒரு நட்சத்திரம் திடீரென்று பொடியாக மறைந்து விட்டால் கூட, அது நாசமாகி 200 வருடங்கள் வரை அதன் கடைசி கிரணங்கள் ஒவ்வொன்றாய் பூமியில் வந்து சேர்ந்து அது நமக்குப் புலப்பட்டுக் கொண்டேயிருக்குமாம்!

நட்சத்திரங்களின் அளவையும் அவற்றிடைக் கிடைக்கும் தூரத்தையும் கணக்கால் பெருக்கிச் சொல்லலாமே யொழிய, நம்மனத்தால் அளந்தறிய முடியாது. பிரபஞ்சத்தில் எப்பொருளும் கடைசியில் அணுக்களாகப் பாகுபடுவது. அணுவே வஸ்துக்களின் பகாப் பொருள். அணுவின் சிறுமையை உருவகப் படுத்திச் சொல்லலாமே யொழிய, எண்ணி அறிய முடியாது. பதினாயிரம் அணுக்களை ஒரு ஊசி முனையில் வைத்தால், ஐரோப்பா கண்ட முழுவதிலும் பதினாயிரம் ஜனங்கள் மட்டும் சமதூரத்தில் நின்றால் அவர்களுக்கிடையில் எவ்வளவு வெற்றிடம் கிடைக்குமோ, அம்மடங்கு வெற்றிடம் அவ்வூசி முனையில் பதினாயிரம் அணுக்களுக்கிடையில் கிடைக்குமாம்!

பிரபஞ்சத்தின் அண்டங்களையும் நாம் மனோபாவத்தால் அளந்தறிய முடியாது. அவற்றின் அணுக்களையும் நாம் அளந்தறிய முடியாது. ஒரு நட்சத்திரத்திலிருந்து மற்றொரு நட்சத்திரத்துக்கு நாம் அடியெடுத்து வைக்க முடியாதது போலவே, ஓர் அணுவிலிருந்து மற்றோர் அணுவுக்கும் அடிவைக்க முடியாது.

பிரபஞ்சத்தின் மகிமையைநினைத்து நட்சத்திரங்களைப் பார்க்கும் பொழுது, நமது வாழ்வின் சுக துக்கங்களும் வீண் சஞ்சலங்களும் எம்மாத்திரம் தோன்றுகின்றன! அணுக்களுக்கும் அண்டங்களுக்கும் அசைவளிக்கும் சக்தியை நினைத்து நாம் திடப்படுவோமாக!

ரு.க

காதல் வேதனை

(லிண்ட்ஸே பெருமாட்டி இயற்றியது)

மொழிபெயர்ப்பு —— பொ. திருகூடசுந்தரம்

M. A., B. L.,

ஆடுகளும் மாடுகளும் வீடு வந்திட்டன;
ஊரும் அடங்கிவிட்டது.—அதோ
என் கணவரும் சுகமாகத் தூங்குகிறார்.
ஆனால் என் துன்பங்களோ—மனத்திடைப்பொங்கி
என் விழி வழி பெருகு கின்றன. 1

என் அழகன் ஜேமி என்னைக் காதலித்தார்;
என்னை மணந்து கொள்ள விரும்பினார்;
ஆனால் அவர் கையில் காசில்லை.
மாலுமி வேலை பார்க்கச் சென்றார்.
எல்லாம் என் பொருட்டே. 2

அவர் போய் இரண்டு வாரமாகவில்லை.
என் தந்தை கை முறிந்துவிட்டது.
தயார் நோயாய் விட்டாள்,—பசுவையுங் காணோம்.
அப்பொழுதுதான் வயதான ராபின் க்ரே
என்னை மணம் பேசிவந்தார்.
ஆனால்—என்ஜேமியோ—கடலிலே—. 3

என் தந்தைக்கு வேலை செய்ய முடிய வில்லை
என் தாய்க்கு நூற்க முடிய வில்லை.
நான் இரவு பகலாய் உழைத்தேன்.
ஆயினும் அவர்களைப் போஷிக்க முடியவில்லை.
ராப் தான் காப்பாற்றி வந்தார்.
கண்களில் நீர்பெருக நின்றார்.
ஜென்னி! அப்பா அம்மா பொருட்டு
என்னை மணப்பாய் என்று வேண்டினார். 4

ஏன் இதயம் இணங்க வில்லை.
ஏன் ஜேமியையே எதிர் நோக்கி நின்றேன்.
ஆனால் ஐயோ! பெரும் புயல்—
அந்தக் கப்பலும் அமிழ்ந்து விட்டது,
ஏன் ஜேமி சென்ற கப்பல். 5

என் தந்தை வற்புறுத்தினார்.
என் தாய் பேசவில்லை, இதயம் ஒடியும் வரைநோக்கினாள்.
என்னை மணம் செய்து கொடுத்தனர்.
வயதான ராபின் க்ரே என் கணவர் ஆனார்.
ஆனால் என் இதயமோ—கடலிலே. 6

மனைவியாய் நான்கு வாரமாகவில்லை.
வாயிற்படியில் வருத்தத்தோ டிருந்தேன்,
ஒருவர் வந்தார்—என் ஜேமிதான்.
ஆனால் மணக்க வந்து விட்டேன் என்னும்வரை
அவரை அறிந்து கொள்ள முடியவில்லை. 7

கண்ணீர் பெருக்கினோம்—பல பல பேசினோம்.
ஆனால் ஒரே ஒரு முத்தம் தான்.
ஆம்—போய்விடும் என்று கூறினேன்.
ஐயோ! நான் இறந்துவிட்டே னில்லையே!
ஆனால் நான் இறப்பவள் போல் தோன்றுகிறேனா?
ஐயோ, இந்தத் துன்பத்திற்கு ஏனோ பிறந்தோம்? 8

நடைப்பிணம்தான்—நூற்கமனம் செல்லவில்லை.
ஜேமி—ஆம் என் ஜேமி.
ஆனால் அவரைப்பற்றி நினைக்கத் துணியேன்.
அது பாபமாகு மல்லவா?
உண்மை மனைவியா யிருக்க முயல்வேன்.
ராபின் க்ரே என்னிடம் பட்சமா யிருக்கிறார் அல்லவா? 9

(8ம் பக்கம் தொடர்ச்சி)

வாசம், திரிபுரி காங்கிரஸ், ஸ்ரீ போஸின் ராஜீநாமா, பண்டித ஜவஹர்லாலின் இலங்கை—சீனு பிரயாணம், காங்கிரஸ் மந்திரிகளின் ராஜீநாமா, காந்தி—லின்லித்கோ சம்பாஷணை, ஜனுப் ஜின்னுவின் பிணக்கு முதலிய பல காட்சிகள் தோன்றி மறைந்தன. ஆனுல் சுயராஜ்ய பாதையில் இவை எத்தனை மைல் கற்களாயமைந்தன வென்பது நமக்குத் தெரியவில்லை. 1938ம் வருஷத்தில் காங்கிரஸ் காரியக்கமிட்டி ஆறு முறையும் அ. இ. கா. கமிட்டி இரண்டு முறையும் கூடின. 1939ம் வருஷம், காரியக் கமிட்டி ஏழு தடவையும், அ. இ. கா. கமிட்டி நான்கு தடவையும் கூடியிருக்கின்றன. 1938ம் வருஷத்தைவிட, 1939ம் வருஷத்தில், காங்கிரஸ் தளகர்த்தர்கள் அடிக்கடி சந்தித் திருக்கிருர்கள் என்பதை நாம் மகிழ்ச்சியுடன் அங்கிகரித்துக் கொள்கிறேம். ஆனுல் அந்த மகிழ்ச்சி, நமது முன்னேற்றத்திற்குத் துணை செய்ய வேண்டுமென்பதே நமது ஆவல். அகில இந்திய பிரதிநிதி ஸ்தாபனம் காங்கிரஸ் ஒன்றுதான். ஆகையால் அஃது ஒரே குரலில் தான் பேசவேண்டும். இதையே 1940ம் வருஷத்தில் நாம் எதிர்பார்க்கிறேம்.

மற்ற வருஷங்களைப் போலவே, 1940ம் வருஷமும் வெகு சீக்கிரத்தில் 'பழைசு' ஆகிவிடும். ஆனுல் நாம் புதியவர்களாக வேண்டும்; புதிய வாழ்வு நடத்த வேண்டும். இதுவே நமது பிரார்த்தனை.

வந்தேமாதரம்.

* * *

ஆசிரியர்கள்

மேனுட்டில், நூலாசிரியர்கள், நூலெழுதி லட்சக் கணக்கில் சம்பாதிக்கிருர்கள். ஸர் ஜேம்ஸ் பாரி என்ற ஒரு பிரபல நூலாசிரியன், இறக்கும் போது சுமார் இருபத்தைந்து லட்சம் ரூபாய் பெறுமான ஆஸ்தியை வைத்து விட்டுப் போனுன். ருட்யார்ட் கிப்ளிங்கினுடைய ஆஸ்தி மதிப்பு சுமார் இருபது லட்சம் ரூபாய் மேரி கொரெல்லி என்ற பெயர் படைத்த நாவலாசிரியை, ஒரு நாவலுக்கு மட்டும் சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் பெற்ருள். சில ஆசிரியர்கள், ஒரு வார்த்தைக்கு ஒரு பவுன் விகிதம் பெற்றிருக்கிருர்கள். ஆனுல் இந்தியாவிலே—? சிறப்பாகத் தமிழ் நாட்டிலே—? ஆசிரியர்களின் நிலைமையா? நிலைமை யென்று ஒன்று இருக்கிறதா என்ன அவர்களுக்கு? கை சோர, மெய் சோர, உள்ளஞ் சோர, உலகமெல்லாம் சூனியமாகக் காண, வறுமையின் ஆழத்திலே அடைக்கலம் புகுந்து கொண்டு 'கோவிந்தா—கோவிந்தா'— என்று அரற்றிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

* * *

இருந்தால்—?

ஜெர்மனியின் ஆக்ரமிப்பை ஜெக்கோஸ்லோவேகியா எதிர்த்து நிற்கு மாறு ஸ்ரீ சேம்பர்லேனும் ஸ்ரீ பான்னெட்டும் (பிரெஞ்சு மந்திரி) அதற்கு ஒரு வருஷத்திற்கு முன்னர் ஆதரவு காட்டியிருந்தால், ஹிட்லர் ஆஸ்திரியாவை விழுங்குவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்த முசோலினியின் ஆப்ரிக்கப் படையெடுப்பு நிகழ்ந்திராவிட்டால், ஸ்ரீவில்லியம் ஸ்ட்ராங்குக்குப் பதில் லார்ட் ஹாலிபாக்ஸ், மாஸ்கோவுக்கு (ஆங்கிலோ—ருஷ்ய சமரஸப் பேச்சு சம்பந்தமாக)

சென்றிருந்தால்,1939ம்வருஷம் மார்ச்மாதத்திற்குப் பிறகு, போலந்து, தனக்குத் தேவையான யுத்ததளவாடங்களை வாங்கிக் கொள்ளுமாறு அநுமதிக்கப் பட்டிருந்தால், ஸ்ரீ சேம்பர்லேனுடைய ஸ்தானத்தில் ஸ்ரீ சர்ச்சிலோ அல்லது வேறு யாரோ இருந்தால்—

யுத்தம் நடைபெறாமலிருந் திருக்கும் என்று இந்த வாக்கியத்தை முடிக்கப் பார்க்கிறார் ஓர் அரசியல் அறிஞர். 'எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி விடுகிறவர்' போலும் இந்த அன்பர்!

* * *

யுத்தச் செலவு!

பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி, சமீபத்தில் நிகழ்த்திய ஒரு ரேடியோ பிரசங்கத்தில், பிரிட்டனுடைய தினசரி யுத்தச் செலவு சுமார் எட்டு கோடி ரூபாயாகிறது என்று கூறினார். ஏறக்குறைய வருஷத்திற்கு மூவாயிரம் கோடி ரூபாயாகிறது. பிரான்ஸின் 1940ம் வருஷத்து யுத்தச் செலவு சுமார் 570 கோடி ரூபாயாகிறது. ஜப்பானுடைய 1940ம் வருஷ வருமானத்தில் நூற்றுக்கு 65 விகிதம் யுத்தச் செலவுக்ென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனி, ருஷ்யா முதலிய நாடுகளின் யுத்தச் செலவுகள் வேறே இருக்கின்றன. இவையனைத்தையும் ஒன்று கூட்டிக் கணக்குப் பார்க்கிற போது, உண்மையில் யாருக்குமே ஒரு பிரமிப்பு உண்டாகும். இந்தப் பணம் ஏழை மக்களின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்துவதற்காகச் செலவழிக்கப் படுமானால், உலகம் எவ்வளவு க்ஷேமப்படும்!

* * *

பாக்கியில்லை!

சிறிய விஷயந்தான். ஆனால் எவ்வளவு கூர்ந்து கவனிக்க வேண்டிய விஷயம்! சர்வ தேச சங்கத்தில் அங்கத்தினராயுள்ள ஒவ்வொரு நாடும் அதற்கு வருஷந்தோறும் சந்தா செலுத்த வேண்டுமல்லவா? அது போல், ருஷ்யாவும், 1939ம் வருஷத்துச் சந்தாவில் பாக்கியாயிருந்த 739,000 தங்க பிராங்கு தொகையை டிசம்பர் மாதம் 3ந் தேதிக்கு முன்னர், சர்வ தேச சங்க பொக்கிஷத்தில் செலுத்தி விட்டது. அதே தினத்தில், பின்லாந்தும் தன் பாக்கியைச் செலுத்தி விட்டது. ஆனால் டிசம்பர் மாதம் 14ந் தேதி, ருஷ்யா, சர்வ தேச சங்கத்திலிருந்து விலக்கப்பட்டு விட்டது! பின்லாந்து, சர்வ தேச சங்கத்தின் அநுதாபத்துடனேயே மூழ்கிக் கொண்டிருக்கிறது! விசேஷமென்ன வென்றால், இரண்டு நாடுகளும், சர்வ தேச சங்கத்திற்குப் பாக்கிதாரர்களில்லை!

நண்பர்களுக்கு

ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கிற யுத்தம் காரணமாக, காகித விலை பெரிதும் கூடியிருப்பதால் "ஜோதி" யின் பக்கங்களைக் குறைத்து வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. தவிர நாம் உத்தேசித்திறபடி அதிகமான கார்ட்டூன், படங்கள் முதலியவற்றையும் வெளியிட முடியவில்லை. தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்தக் குறைச்சலை நண்பர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

மானேஜர்.

சோர்வு கொள்ளாதே

—வ. பார்த்தசாரதி

குழந்தாய்! 'என்னால் ஒன்றுஞ் செய்ய முடியவில்லையே. நான் ஏன் பிறந்தேன் இந்த உலகத்தில்!' என்று சோர்ந்துவிடாதே. உலகத்தில் நீ எப்படியோ பிறந்து விட்டாய். அப்படிப் பிறந்தது உன் இச்சையினாலல்ல. ஆனால் நீ நடத்தும் வாழ்க்கை உன் இச்சையைப் பொறுத்திருக்கிறது. நீ பிறந்து விட்ட ஒரு காரணத்தினாலேயே உன் வாழ்க்கையை ஒழுங்காக நடத்த வேண்டுமென்ற அவசியம் வற்புறுத்தப் படுகிறதல்லவா! உலகத்திலே ஜென்மம் எடுத்து விட்ட பிறகு, ஏன் பிறந்தோம் என்ற கேள்வியைக் கேட்க உனக்கென்ன உரிமை யிருக்கிறது?

உன் முன்னாலே உலகம் விரிந்து பரந்து கிடக்கிறது. அதில் அழகும் அழுக்கும், நன்மையும் தீமையும் கலந்துதான் இருக்கின்றன. நீ உலகத்தை எப்படிப் பார்க்கிறாயோ அப்படித்தான் உலகமும் உனக்குக்காட்சியளிக்கும். 'மனம் போல மாங்கல்யம்' என்ற பழமொழி உனக்குத் தெரியாதா? மகனே! மஹாபாரதத்தில் ஒரு கதை உண்டு. ஞாபகப்படுத்துகிறேன் கேள். கௌரவர்களும் பாண்டவர்களும் சிறுவர்களாயிருந்து துரோணரிடம் கல்வி கற்று வந்தபோது இவர்களுடைய மனப்போக்கைப் பரிசோதிக்க எண்ணி துரோணர் ஓர் உபாயம் செய்தார். இரண்டு வீடுகளை காலி செய்து கொடுத்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீட்டைப் பூரணமாக நிறைத்துக் காட்ட வேண்டும் என்றார். கௌரவர்களின் மூத்தவனான துரியோதனன் தன்னுடைய வீட்டை வைக்கோலால் நிரப்பி விட்டான். பாண்டவர் தலைவனான தருமபுத்திரன் தன்னுடைய வீட்டை தீபாலங்காரம் செய்து நிரப்பினான். இதிலிருந்து இருவருடைய மனப் போக்கையும் துரோணர் தெரிந்து கொண்டார். இந்தக் கதை உண்மையா இல்லையா என்பதைப்பற்றி நீ கவலைப்படாதே. இதன் கருத்தை மட்டும் கிரகித்துக் கொள். உலகத்தில் எப்பொழுதும் அழகைப்பார். நன்மையைத் தேடு. அப்பொழுது தான் நீ அழகனாவாய்; நல்லவன் ஆவாய். ஆகையால் உன் மனத்தில் சோர்வு என்ற கறை மட்டும் படவேண்டாம்.

உனக்கு, காலமிருக்கிறது; வசதிகள் இருக்கின்றன. இவற்றை நீ எப்படி உபயோகித்துக் கொண்டாய்? இந்த நாகரிக காலத்திலே எதற்கெடுத்தாலும் எனக்கு நேரமில்லை என்று சொல்லுவது ஒரு சம்பிரதாயமாகி விட்டது. அப்படி நீ சொல்லாதே. மஹாத்மா காந்தி எழுநூறு ஸ்லோகங்களுள்ள கீதையை எப்படி மனப்பாடம் செய்தார் தெரியுமா? காலைவேளையில், தான் பல் துலக்குகிற இடத்தில் தினம் ஒவ்வொரு ஸ்லோகமாக எழுதி வைத்துப் பல் துலக்கிக் கொண்டே கீதை முழுவதையும்

மனப்பாடம் செய்தார். தள்ளாத வயதினில், சிறையில் அடைபட்ட பண்டித மதன் மோஹன் மாளவியர் அந்தச் சிறை வாசத்தின் பொழுது தான் கீதையையும் பாகவதத்தையும் படித்து அவற்றின் தத்துவார்த்தங்களில் மனம் லயித்துப்போய் விட்டார். ~~சர் வால்டர் ஸ்காட் என்ற ஆங்கிலப் புலவனைப்பற்றிக் கேள்விப்~~ பட்டிருக்கிறாயா? அவன் ஆங்கிலத்தில் சுமார் 150 நூல்களுக்குமேல் எழுதியிருக்கிறான். ஆனால் அவன் கடுமையான நோயாளி. நோயென்றோ, அவகாசமில்லையென்றோ அவன் முனகவே இல்லை. மார்டின் லூதர் என்பவனைத் தெரியுமா? அவன் தான் கிறிஸ்தவ மதத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று பாடுபட்டவன். அவன் சுமார் மூன்று வருஷ காலத்திற்குள், 350 நூல்களுக்கு மேல் எழுதினான். இது தவிர ஓயாமல் பிரசங்கங்கள் செய்து கொண்டும் வந்தான். பணக் கஷ்டம் ஒரு பக்கம், குடும்பப் பொறுப்பையும் ஒழுங்காக நடத்தி வந்தான். அப்படியும் அவனுக்கு ஓய்வு கிடைத்தது. அந்த வேளைகளில் புன்றிமேய்ப்பான். கடியாரங்கள் ~~பழுது பார்ப்பான். இப்படிப்பட்ட மனிதர்களுடைய~~ வாழ்க்கையை உனக்கு முன்னர் நிறுத்திப்பார். ஓய்வில்லை என்று சொல்வது அவமானம் என்று கருது. அப்படி நீ சொன்னால் அறிஞர்கள் உன்னை ஒரு சோம்பேறி என்றுதான் கருதுவார்கள்.

சோம்பலும், தூக்கமும் நெருங்கிய நண்பர்கள் என்பது உனக்குத் தெரியுமா? ஏதேனும் ஒரு வேலையை—அந்த வேலை பிறருக்கு நன்மை தருவதாயிருக்கட்டும்—செய்து கொண்டே இரு. தூக்கம், சோர்வு, அறிவிலே ஒரு கலக்கம் ஏதேனும் ஏற்படுகிறதா பார்? எந்த நோயும் உன்னை அணுகாது. மின்சாரத்திற்கு எவ்வளவு மகத்தான சக்திகள் உண்டு என்பதை உலகத்திற்கு நிரூபித்துக் காட்டிய தாமஸ் எடிசன் தினம் ~~24 மணி நேரத்தில்~~ 20 மணி நேரம் வேலை செய்தான். இரவு என்றும் பகல் என்றும் அவன் வித்தியாசம் பாராட்டியதே கிடையாது. தூங்கின நாட்களைவிட தூங்காத நாட்கள்தான் அவனுக்கு அதிகம். ஆனால் உலகத்தில் பெரும்பாலோருக்கோ தூங்கின நாட்கள்தான் அதிகம். அந்தப் பெரும்பான்மைக் கூட்டத்தில் நீ சேர்ந்து விடாதே. பண்டித ஜவஹர்லால் நேருவுடன் ஒரு நாள் உன்னால் தங்க முடியுமா? அவரைப் போல் நீ உழைப்பது ஒரு புறம் இருக்கட்டும். அவருடைய அன்றாட வேலைகளைக் கண்டு நீ முதலில் திக்பிரமை கொள்ளாதிருக்க வேண்டுமே! இப்படிப்பட்ட மனிதர்கள் எல்லோரும் உண்ணும் போதும், உறங்கும் போதுங் கூட வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். தங்கள் நலத்துக்காக அல்ல; உலக நன்மைக்காக. அதனால் தான் அவர்கள் முகத்தில் எப்பொழுதும் புன் சிரிப்புக் காணப்படுகிறது. அவர்களுக்கு வயது ஆக ஆக முதுமையும் எட்டி எட்டிப் போகிறது. ஆகையால் நீ சந்தோஷமாயிருக்க வேண்டுமானால் ஓய்வு என்பது கொள்ளாதே. எப்பொழுதும் வேலை செய்து கொண்டிரு. உடல் சோர்வோ, மனச் சோர்வோ பனியைப் போல மறைந்து விடுகிறது பார்.

சங்கீதத்தின் பெருமை

"மௌத்கல்யன்"

சங்கீதம் என்பது என்னவென்று ஒருவன் கேட்டால் வாயால் பாடிக் காட்டவேண்டுமே யொழிய அது இப்படி இருக்கும் என்று எழுதிக் காட்ட முடியாது. எந்த விஷயங்களை யும் அனுபவித்த பிறகு அவைகளி னிடத்தில் கொஞ்சம் வெறுப்புத் தோன்றுவது சகஜம். ஆனால் ஒருவன் தினம் கானம் செய்து கொண்டிருந் தாலோ அல்லது அக்கானத்தைக் காதாரக் கேட்டுக் கொண்டிருந் தாலோ அவனுக்குச் சலிப்பே கிடை யாது. இதனாலேயே சங்கீதத்தின் பெருமை சொல்லாமலே விளங்கும்.

சங்கீதத்திற்குக் காந்தர்வவேதம் என்று பெயர். இது வேதத்தினு

அமெரிக்காவிலே ஒரு சிறுவன். அவன் மனதில் என்ன தோன்றிய தோ என்னவோ இந்த உலகத்தில் தன் னுடைய வாழ்க்கை எவ்வித பிரயோ சனமும் இல்லை என்று தீர்மானித்துக் கொண்டுவிட்டான். எனவே பகிரங்க மாக தற்கொலை செய்து கொண்டுவிட வேண்டு மென்று முடிவு கட்டினன். இவனுக்கு அறிவு நிரம்ப இருந்தது. ஆனல் கடமை, ஒழுங்கு முதலிய ஒன் றினைப்பற்றியும் தெரியாது. ஒரு நாள் பகிரங்கமாக பிரசங்கம் ஒன்று செய்துவிட்டு தன்னைத்தானே சுட்டுக் கொள்ளப் போவதாக விளம்பரப் படுத்தினன். அந்தக் கூட்டத்திற்குத் தலைக்கு ஒரு டாலர் வீதம் டிக்கட் வைக்க ஏற்பாடு செய்தான். வசூலா கும் தொகையில் பாதி தன்னுடைய ஈமச்சடங்குகளுக் கென்றும், பாதி, நாஸ்திக நூல்கள் சில வாங்கி நகர சபை புத்தகாலயத்திற்குக் கொடுத்து விட வேண்டு மென்றும் ஏற்பாடு செய்தான். ஏற்பாடு செய்த படியே இவன் பிரசங்கத்திற்கு ஏராளமான கூட்டம் கூடியது. பணமும் நிறைய வசூலாகியது. இவனும் பிரசங்கம் செய்துவிட்டு தன் ஜேபியிலிருந்த கைத் துப்பாக்கியினல் சுட்டுக் கொண்டு கீழே விழுந்து விட்டான். 1868ம் வருஷம் ஆகஸ்டு மாதம் அமெரிக்காவிலுள்ள இல்லினய் என்ற மாகாணத்தில் காப்ரோன் என்ற ஊரில் நடைபெற்ற சம்பவம் இது. இவனைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? இவனை ஒரு வீரன் என்று மதிக்கிறா யா? இல்லை. இல்லை. இவன் ஒரு பெரிய கோழை தன்னைப் படைத்த கடவுளுக்குத் துரோகம் செய்து விட் டவன். தன்னைப்பற்றி மிகவும் பெரு மையாக நினைத்துக் கொண்டு விட் டான். அந்தக் கர்வம்தான் இவன் உயிருக்கு உலை வைத்து விட்டது. ஷெரிடன் என்ற ஓர் ஆங்கிலக் கவி சொல்வது போல மனிதனிடத்திலே குடி கொண்டுள்ள தீயகுணங்களுக் கெல்லாம் முதன்மை ஸ்தானம் வகிப் பது அகம்பாவந்தான். ஆகையால் மகனே, அகம்பாவத்தை விட்டொழி. உன்னைப்பற்றி அதிகமாக நினைத்துக் கொள்ளாதே. நீ பெரிய மனிதனாக வும் இருக்கலாம்; சிறிய மனிதனாக வும் இருக்கலாம். அதைப்பற்றி உல கம் கவலைப் படப் போவதில்லை. நீ யும் கவலைப்படாதே. ஓயாமல் வேலை செய். சோர்வு கொள்ளாதே. அது தான் உனது கடமை.

டைய உபாங்கமாகும். இதைக் கைலாச மலையில் நிருதி மூலையில் பரமசிவன் நிருத்தம் என்னும் பெயருடன் உபதேசித்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த உபதேசம் பெற்ற ரிஷிகள் உலகில் இதைப் பற்பல நூல்களாக எழுதி வைத்தார்கள். யாவரும் சங்கீதத்தை வேதத்திற்குச் சமமாய்ப் பாவித்து வந்தார்கள். கடவுளைக் காண்பதற்குச் சங்கீதம் முக்கிய கருவிகளில் ஒன்று என்று நினைத்து வந்தார்கள். 'ஒருவன் எந்தப் பொருளில் பிரீதி யுடையவனா யிருக்கிறானோ அந்தப் பொருளைக் கொண்டே அவனிடம் சென்றால் அவன் அன்பைப் பெறலாம்' என்ற ஒரு நியாயப்படி சங்கீத கர்த்தனை அந்த உலக நாதனைப் பிரீதி பண்ணுவதற்குச் சங்கீதமே தகுந்த துணை என்பது அவர்களுடைய அபிப்பிராயம். அந்த முனி சிரேஷ்டர்கள் யாவரும் கர்த்தனுடைய பெருமையையும் அவனுடைய நித்தியத்துவத்தையும் அவன் தன்மையையும் குறித்துப் பாடினார்களே யொழிய தங்களைப் பற்றியாவது அல்லது இதர லௌகீக கானங்களையாவது செய்யவில்லை. அவர்கள் பகவானைத் தங்கள் இஷ்டப் பிரகாரம் பாவித்துப் பக்தி செய்து கொண்டிருந்தார்கள். சிலர் கடவுளைக் கணவனாகவும், சிலர் மனைவியாகவும் பாவித்தனர். எங்கும் நிறைந்த எம்பெருமானை எஜமானனாக எண்ணினார் சிலர்; தண்ணருள் சுரக்கும் தயாநிதியைத் தந்தையாகத் துதித்தார் சிலர். அல்லல்களை அறுக்கும் ஆபத்சகாயனை அரசனாக எண்ணி ஆதரித்தார் சிலர்; பிரிவாற்றாமையினால் பிரலாபித்தார் வேறு சிலர்; இடர் தீர்க்க இறைஞ்சினார் மற்றுஞ் சிலர்; அவனைக் காண வேண்டி மனத்தையோ அல்லது மற்றதையோ தூது விடுத்தார் சிலர்; தாங்கள் அவனை அணுக அருகரோ என அலறினார் சிலர். இப்படியாகப் பகவானைச் சங்கீதத்தினால் உருக்கி அதனால் தாங்களும் உருகிக்கொண்டு வந்தார்கள். இதற்காகவே அவர்கள் சங்கீதத்தைப் பலவழிகளிலும் விருத்தி செய்து கொண்டு வந்தார்கள்.

நான்கு வேதங்களில் ஒன்றான சாமவேதம் என்பது சங்கீதத்தின் உருவமே யாகும். சாமவேதந் தெரிந்தவர்கள் எல்லாம் சங்கீதத்தில் நல்ல ஞானவான்களாய் இருப்பார்கள் என்பது பெரியோர் கொள்கை. சாமகானம் செய்பவர்களுக்கு 'சாமகன்' அல்லது 'உத்காத்திரி' என்று பெயர். சரஸ்வதி, தும்புரு, நாரதர், ஹனுமான், பரவசிவன், பார்வதி முதலானவர்கள் எல்லாரும் சங்கீதத்திற்கே வசப்பட்டவர்கள், சங்கீத சாஸ்திரத்தில் மஹா நிபுணர்கள். ஹனுமானுக்குச் சங்கீதம் தெரியுமோ என்று சிலர் ஆசங்கிக்கலாம். நாரதரே ஒருதரம் இவரிடம் வந்து இவர் இராம நாம சங்கீர்த்தனம் செய்வது கண்டு உருகிப் போனதாகச் சொல்லப்படுகிறது. மேலும் ஸ்ரீராமன் ஹனுமானுக்கு வசமானதற்கெல்லாம் காரணம் சங்கீதமே. இன்னும் குசலவர்கள் ஸ்ரீராமனைச் சந்தோஷப் படுத்தியது சங்கீதத்தினாலேயே. இதனை ஸ்ரீ வால்மீகி பகவான் பின்வருமாறு வர்ணிக்கின்றார் :—

"* * * அச்சிறுவர்களும் அவரிடம் உபதேசம் பெற்றுப் படிப்பினும், பாடினும் இனியதாகி த்ருதம், மத்யம், விலம்பிதம் என்று சொல்லப்பட்ட மூன்றளவுள்ளதாகியும் ஏழுசுரங்கள்

அமைந்ததாகியும் உள்ள வீணையில் சங்கீதத்துடன் பாடப் பொருந்தி, சிருங்காரம், கருணை, ஹாஸ்யம், வீரம், பயாநகம், ரௌத்ரம் முதலிய நவரசங்களையும் பொழியும் இக்காவியத்தைப் பாடத் தொடங்கினார். அவ்விருவரும் சங்கீதத்தின் நுட்பமெல்லாம் அறிந்தவர்கள்; வீணை முதலிய வாத்தியங்களில் தேர்ந்தவர்கள்; மெதுவாகவும், நடுத்தரமாகவும், உரக்கவும் உச்சரிக்க வேண்டிய இடங்கள் மூன்றும் நன்றாய் உணர்ந்தவர்கள்; உடன் பிறந்தமையால் ஒக்கப் பாட அமைந்த குரலுடையவர்கள்; இனிதான சாரீரம் படைத்தவர்கள். * * * சிறந்த முனிவர்களால் ஆங்ஙனம் கொண்டாடப் பெற்ற குசலவர்கள் மிகவும் ஒழுங்கான விகங்களோடு மிகுந்த இனிமையுடன் பாடினார்கள். அதைக் கேட்டு மனங்களித்த ஒரு முனிவன் மரவுரியைக் கொடுத்தான். மற்றொருவன் கிருஷ்ண ஜினத்தைக் கொடுத்தான். * * * பின்பு இராமனது வாயால் ஏவப்பட்ட அக்குசலவர்கள் இருவரும் மார்க்கம் என்கிற இராகத்தின் ஆலாபன வழியைக் கொண்டு இராமாயணத்தைப் பாடினர். அப்பொழுது இராமனும் அதில் மனமூன்றி அருகிலிருந்து கேட்டனுபவிக்க விரும்பியும் சீதையின் கதையாகையால் அதைக் கேட்டுத்தரிக்கலாமென்று ஆதரங் கொண்டும் மெல்ல மெல்ல சபையின் நடுவே வந்தனன்."

இன்னும் இலங்கேசனை இராவணன் அதிகர்வங் கொண்டு கைலாச மலையைப் பெயர்க்கும் போது பரமசிவன் அவனைக் கதறும் படியான துன்பத்தில் ஆளாக்க அப், பரமசிவனை இராவணன் பரவசப் படுத்தியது சாமவேத கானத்தி லேயே. இதனாலே ஈச்வரனுக்குச் சாமகானப் பிரியன் அல்லது சாம வேதப்பிரியன் என்று பெயர். இதனை அப்பர் சுவாமிகள்

'கைத்தலங்களிருபதுடை யரக்கர் கோமான் கயிலைமலையது தன்னைக்கரு தாதோடி, முத்திலங்கு முடிதுளங்க விரல்களொற்றி முடுகுதலும் திருவிரலொன்றவன் மேல் வைப்பப், பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டு, பரிந்தவனுக் கிராவணனென் றீந்த நாமம், தத்துவனைத் தலையாலங் காடன் றன்னைச் சாராதே சாலநாள் போக்கி னேனே'

என வியந்து பாடியிருக்கிறார். மற்றும் ஸ்ரீ கிருஷ்ணன் அண்டபிண்ட சரா சரங்களையும் மயங்க வைத்தது புல்லாங்குழல் என்னுங் கருவியைக் கொண்டு பாடினதாலேயே. இதனைப் பெரியாழ்வார் பதினொன்று பாட்டுகளால் கண்ணன் குழலூதற் சிறப்பைப் பற்றிக் கூறும் போது ஒரு பாட்டில்

'முன்னரசிங்கமதாகி யவுணன் முக்கியத்தை முடிப்பான் மூவுலகின், மன்னர் அஞ்சு மது சூதனன் வாயிற் குழலினோசை செவியைப்பற்றி வாங்க நன்னரம் புடைய தும்புருவொடு நாரதனுந் தந்தம் வீணைமறந்து, கின்னர மிதுனங்களும் தந்தம் கின்னரந் தொடுகிலோமென்றனரே'

என்று அற்புதமாய்க் கூறுகின்றார். ஹா ஹா, ஹூ ஹூ என்ற கந்தர்வர்கள் கானத்தில் வல்லவர்கள் என்று சொல்லப்படுகிறது.

ஆதலின் அனைவரும் சங்கீதத்தைப் பயில்வோமாக.

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜி எழுதிய

: அக்கா :

——எம். வி. வேங்கடராமன்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

ஆருவது அத்தியாயம்

சுரேந்திரன் வீட்டிற்குப் போய் ஆறு மாசம் ஆகிவிட்டது. இதற்கிடையில் மாதவி மனோரமாவுக்கு ஒரு முறைதான் கடிதம் போட்டாள்; பிறகு போடவில்லை.

துர்க்கா பூஜை சமயத்தில் மனோரமா தன் பிறந்தகம் வந்தாள். மாதவியிடம், 'நீ வளர்க்கிற ஹனுமந்தரைக் காட்டு, காட்டு' என்று 'நச்சரிக்க' ஆரம்பித்தாள்.

'குரங்குக்காக நான் எங்கே போகிறதடி!' என்முன் மாதவி. மனோரமா அவளுடைய மோவாயைப் பிடித்துக் கொண்டு பாடத் துவங்கினாள்.

'உன் குரங்கை காட்டுவாய் நீ!
காண ஆவல் கொண்டு துடிக்கி
[றேன் நான்!—
உன்னுடைய செம்பாதங்களில்,
எவ்வளவு அழகாயிருக்கும் அது!—
நீ வளர்த்தாயே அந்த குரங்கு
எங்கே?' 'எப்போது?'

'ஞாபகமில்லையா? அதான், உன்னைத்தவிர வேறே யாரையும் அறியாதது?'

மாதவிக்கு முதலிலேயே தெரிந்து விட்டது. அதனால்தான் அவளுடைய முக நிறம் அடிக்கடி மாறிக்கொண்டிருந்தது. ஆனாலும் மனதை அடக்கிக் கொண்டு சொன்னாள். 'ஓ ஹோ! அவரையா சொல்லுகிறாய்? அவர் தான் தாமாகப் போய் விட்டாரே!'

'இவ்வளவு அழகிய பாத கமலங்கள் கூடவா அவருக்குப் பிடிக்கவில்லை?'

மாதவி பதிலளிக்காமல் முகம் திருப்பிக் கொண்டாள். மனோரமா மிகவும் மரியாதையுடன் அவளுடைய முகத்தைத் திருப்பினாள். அவள் பரிகாசம் தான் செய்து கொண்டிருந்தாள்; ஆனால் மாதவியின் கண்களில் நீர் நிறைவதைக் கண்ட அவளுக்கு தாங்க முடியாத ஆச்சரியம் உண்டாகி விட்டது.

'மாதவி இதென்னடீ?'

இன்னும் மாதவியால் சமாளிக்க முடியவில்லை. முந்தானையால் முகத்தை மூடிக் கொண்டு அழஆரம்பித்தாள்.

மனோரமாவுக்கு ஒரே ஆச்சரியம் ஆகிவிட்டது. மாதவியை எப்படித் தேற்றுவதென்றும் அவளுக்குத்தெரியவில்லை. கொஞ்ச நேரம் அழும்படி

விட்டாள். பிறகு தானாக அவனுடைய முந்தானையை இழுத்து விட்டு வருத்தத்துடன் கேட்டாள்:-'இந்த சின்ன பரிகாசத்தைக் கூடவா உன்னால் பொறுக்க முடியவில்லை?'

மாதவி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, 'நான் விதவை அல்லவா!' என்றாள்.

பிறகு இருவரும் நெடு நேரம் மௌனமாக இருந்தனர். இருவருமே மௌனமாக அழத் தொடங்கினர். மாதவி கைம்பெண்—கஷ்டப் படுகிறாளே என்று மனோரமா அழுது கொண்டிருந்தாள். ஆனால் மாதவி அழுத காரணம் வேறு. மனோரமா ஒன்றும் அறியாது 'உன்னைத் தவிர வேறு யாரையும் அவனுக்குத் தெரியாது' என்று வேடிக்கையாகச் சொன்னதைப்பற்றி அவள் யோசித்துக் கொண்டிருந்தாள். மனோரமா சொன்னது சரி என்று அவள் அறிவாள்.

வெகு நேரம் கழித்து மனோரமா, 'காரியமே கெட்டுப் போச்சு!' என்றாள்.

'எந்தக் காரியம்?'

'அதைக் கூட நான் சொல்ல வேணுமா? எனக்கு எல்லாம் தெரிந்து விட்டது!'

ஆறுமாசமாக மிகவும் கஷ்டப்பட்டு மாதவி மறைத்து மறைத்து வைத்துக் கொண்டிருந்த விஷயத்தை மனோரமாவிடம் மறைக்க முடியவில்லை. கண்டு பிடிக்கப் பட்ட அவள் குழந்தை போல் மறுபடியும் அழுதாள்.

கடைசியில் மனோரமா கேட்டாள்: 'ஆனால் அவர் ஏன் போய் விட்டார்?'

'நான்தான் போகச் சொன்னேன்—'

'ரொம்ப புத்திசாலித்தனமான வேலை தான்—'

மனோரமா ஒன்றுமே புரிந்து கொள்ளவில்லை என்று மாதவி நினைத்துக் கொண்டாள். ஆகையால் அவள் மெதுவாக எல்லா விஷயங்களையும் விவரமாகச் சொன்னாள். அப்புறம் கூறினாள், 'அவர் மாத்திரம் பிழைத்திருக்கா விட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்துப் போயிருக்கும்.'

'இப்போது மாத்திரம் பிடிக்கவில்லை யாக்கும்!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் மனோரமா.

அன்று ரொம்ப வருத்தமாக மனோரமா வீட்டுக்குத் திரும்பினாள். ராத்திரியே தன் கணவருக்குக் கடிதம் எழுத உட்கார்ந்தாள்.

'ஸ்திரீகளை நம்பக் கூடாது என்று தாங்கள் சொன்னது மிகவும் சரி. நான் இன்று அதை ஏன் சொல்லுகிறேன் என்றால், மாதவி அதை எனக்குக் கற்பித்து விட்டாள். குழந்தைப் பருவத்திலிருந்தே நான் அவளை அறிவேன். அவளைக் குற்றம் சொல்ல எனக்கு மனசு வரவில்லை; தைரியமும் வரவில்லை. அதற்காக நான் ஸ்திரீ ஜாதி முழுவதையும், பகவானையும் குற்றம் சாட்டுகிறேன். அவர் இவ்வளவு மிருதுவான, ஜலத்தை யொத்த திரவ பதார்த்தத்தால் பெண்ணின் ஹிருதயத்தை ஏன் செய்தார்?

அந்த ஹிருதயத்தில் இவ்வளவு அன்பை நிறைக்கும்படி அவரை யார் வேண்டிக் கொண்டார்கள்? 'அவர்களுடைய' ஹிருதயங்களை இன்னும்

கொஞ்சம் கெட்டியாகப் படைக்கும்படி நான் அவரைப் பிரார்த்திக்கிறேன். தங்களுடைய சரணாரவிந்தத்தில் தலையை வைத்து, தங்கள் முகத்தை தரிசித்தபடியே உயிர் துறக்க முடிய வேண்டும் என்று தங்களைப் பிரார்த்திக்கிறேன். மாதவியைப்பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. என்னுடைய வாழ்க்கையில் நான் கொண்டிருந்த கொள்கைகள் எல்லாவற்றையும் அவள் அழித்து விட்டாள். என்னையும் அதிகமாக நம்ப வேண்டாம். சீக்கிரம் வந்து அழைத்துக் கொண்டு செல்லுங்கள்.'

கணவருடைய பதில் வந்தது.

'அழகுள்ளவன் அதை வெளியில் காட்டிக் கொள்ளத்தான் செய்வான்; குணமுள்ளவன் அதை வெளிப்படுத்தத்தான் செய்வான்; காதல் நிறைந்த நெஞ்சுள்ளவன், காதலிக்கத் தெரிந்தவன் காதலிக்கத்தான் செய்வான்! மாதவிக் கொடி ரஸால விருக்ஷத்தை தாங்கித்தான் வாழும். இதுலோகரீதி. அதற்கு நீயும் நானும் என்ன செய்ய முடியும்? உன் மீது எனக்கு ஏராளமான நம்பிக்கை இருக்கிறது. அதற்காக நீ கவலைப்பட வேண்டாம்.'

மனோரமா தன் கணவருடைய கடிதாசியை நெற்றியில் ஒற்றிக்கொண்டு அவரை நமஸ்காரம் செய்து எழுதினாள்.

'எரி மூஞ்சி மாதவி!—விதவை செய்யக்கூடாத காரியம் செய்து விட்டாள். தன் மனதால் இன்னொருத்தனை யல்லவா நேசித்து விட்டாள்!'

கடிதத்தைப்படித்த அவள் புருஷர் மனதிற்குள் சிரித்துக் கொண்டார். பரிகாசமாகப் பதில் எழுதினார்.

'மாதவி எரி மூஞ்சி என்பதில் சந்தேகமே யில்லை; ஏனென்றால் கைம்பெண்ணாக இருந்தும் அவள் இன்னொருத்தனை நேசித்து விட்டாள். அவள் செய்த காரியம் உங்களுக்கு கோப மூட்டத்தான் செய்யும்; ஏனென்றால் அமங்கலியான அவள் சுமங்கலியான உங்களுடைய உரிமையில் அல்லவா கை போட்டுவிட்டாள்! நான் உயிரோடு இருக்கும் வரை நீ கவலைப்பட வேண்டாம்; இம்மாதிரி சந்தர்ப்பத்தை நீ இழந்துவிட வேண்டாம். இருந்த சிறு காலத்திற்குள் நீ இன்னொருத்தனை தாராளமாக நேசிக்கலாம்! ஆனால் மனோரமா, உன்னால் என்னை மயக்க முடியவில்லை என்பதை நீ அறிவாயா? நான் ஒரு முறை ஒரு கொடியைப் பார்த்தேன். அது அரைக்குரோச தூரம் வரை தரையிலேயே படர்ந்து ஒரு மரத்தை தொத்திக் கொண்டிருந்தது. அதில் இப்போது எத்தனை இலைகளும் மலர் மொட்டுகளும் துளிர்களும் இருக்கின்றனவோ. நீ இங்கே வந்ததும் இருவரும் போய் அதைப் பார்க்கலாம்.'

மனோரமா கோபம் அடைந்து அதற்குப்பதில் ஒன்றும் எழுதவில்லை

ஆனால் மாதவியின் கண்களுடைய கீழ்ப்பாகம் கறுத்து விட்டது. மலர்ந்திருக்கும் அவளுடைய முகம் கம்பீரமாகி விட்டது. முன் போல் அவளுக்கு வேலையில் ருசி இல்லை; ஏதோ சோர்வு உண்டாகி விட்டது. முன்பைவிட அதிகமாகத்தான் அவள் எல்லோரையும் கவனித்து வருகிறாள்.

ஆனால் முன் போல் எல்லா விஷயங்களும் ஞாபகம் இருப்பதில்லை; நடு நடுவில் மறந்து போய்விடுகிறது.

இப்போதுகூட அவளை எல்லாரும் 'அக்கா' என்கிறார்கள். எல்லோரும் அந்த கற்பகத்தருவையே நாடுகிறார்கள்; அதன் முன்னிலையில் கைகளை நீட்டித் தேவையானதைப் பெறுகிறார்கள். ஆனால் அந்த விருக்ஷம் முன் போல் ஸ்வாரஸ்யமாக இல்லாததைக் கண்டு, அது எங்கே உலர்ந்துவிடப் போகிறதோ என்று எல்லோருக்கும் பயம் உண்டாகி விட்டது.

மனோரமா தினம் வருகிறாள். இதைப்பற்றியே அவர்கள் எப்போதும் பேசுவதில்லை; இன்னும் எத்தனையோ விஷயங்களைப் பேசுகிறார்கள். இதைப்பற்றி பேசுவதால் மாதவிக்கு வருத்த முண்டாகும் என்று அவளுக்குத்தெரியும்; ஆகையால் முடிந்தவரை இந்தப் பேச்சை அவள் எடுப்பதில்லை. 'மாதவி இதை மறக்க மாட்டாளா?' என்று கூட அவள் ஏங்கியதுண்டு.

* * *

சுரேந்திரன் சௌக்கியமாகி தன் தகப்பனாரோடு வீட்டுக்குப் போய் விட்டான். மாற்றாந்தாய் பழைய 'கெடுபிடி'யைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டாள். அதனால் அவனுடைய உடம்புக்கு கொஞ்சம் சுகம் கிடைத்தது. ஆனால் அது சரிவர குணமாகவில்லை; அதுக்குள் ஏதோ கோளாறு இருந்து கொண்டிருந்தது. அழகையோ இளமையையோபற்றி யோசிக்க அவனுக்கு இன்னும் புத்தி வரவில்லை. முன்போலவே இப்போதும் மறதியுள்ளவனாகவே இருக்கிறான்; முன்னைப்போலவே தன்னையே தாங்கி வாழ அவனுக்குத் தெரியாது; யாரைத்தாங்கி வாழ வேணும் என்றும் அவனுக்குத் தெரியாது; தெரியாததால் தன் வேலைகளைத்தானே செய்து கொள்ளுகிறான் என்றால் அதுவும் இடையாது; முன்னைப் போலவே ஒவ்வொரு காரியமும் இன்னொருத்தன் ஒத்தாசையைக் கொண்டுதான் செய்ய வேண்டி யிருக்கிறது. ஆனால் முன் போல் அவன் மனசு சரியாக இல்லை; அவனுக்கு எதுவும் பிடிக்கவில்லை. ஒவ்வொன்றிலும் ஏதாவது குற்றம் தோன்றிக் கொண்டே இருக்கிறது. அதையெல்லாம் பார்த்து அவனுடைய மாற்றன்னை, 'இப்போது சுரேந்திரன் முன்னைப் போல இல்லை; ரொம்ப மாறிப் போய் விட்டான்' என்று கூறுகிறாள்.

நடுவில் ஒரு நாள் அவனுக்கு ஜ்வரம் அடித்து ரொம்பவும் கஷ்டப் பட்டான். அவன் கண்களிலிருந்து ஜலம் பெருக் கெடுத்தது. அதைக் கண்டதும் அருகிலேயே உட்கார்ந் திருந்த அவனுடைய சித்தியின் கண் களிலும் ஜலம் நிறைந்து விட்டது. அன்புடன் அவனுடைய கண்களைத் துடைத்துக் கொண்டே அவள் கேட்டாள், 'ஏன், என்ன விஷயம் அப்பா?' என்று.

சுரேந்திரன் பேசவில்லை. பிறகு அவன் ஒரு போஸ்ட்கார்டு கேட்டு வாங்கிக் கொண்டான். அதில் கோணலும் மாணலுமாக, 'அக்கா' எனக்கு ஜ்வரம் அடிக்கிறது; ரொம்பவும் கஷ்டப்படுகிறேன்' என்று எழுதினான்.

ஆனால் அந்தக் கடிதம் தபாலாபீஸுக்குப் போகவேயில்லை. கட்டிலிலிருந்து கீழே விழுந்த அதை வீடு

கூட்டி ஆரஞ்சு பழத்தோல்களோடும், பிஸ்கோத்து துண்டுகளோடும், திராட்சைப் பழ சக்கைகளோடும் சேர்த்துக் கூட்டித் தள்ளி விட்டான். சுரேந்திரனுடைய ஹிருதயத்தின் ஆசை புழுதி யோடு கலந்து காற்றில் பறந்து பனியில் நனைந்து, கடைசியில் ஒரு நாவல் மரத்தடியிலேயே கிடந்து விட்டது.

முதலில் 'பதில் வரும், வரும்' என்று நம்பிக் கொண்டிருந்தான். அவன், அக்காவின் கை எழுத்தைப் பார்க்கலாம் என்று ஆவலோடிருந்தான். ஆனால் பல நாளாகியும் பதில் வரவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக இவனுடைய ஜ்வரமும் இறங்கி விட்டது; பத்தியத்துடன் அவன் எழுந்தான்.

பிறகு அவன் வாழ்க்கையில் ஒரு புதிய சம்பவம் நடந்தது. சம்பவம் புது சானாலும் சர்வசாதாரணமானது தான். அவனுடைய தகப்பனார் அதைப் பல நாளாக அறிவார்; நடக்கும் என்று நம்பிக்கை கொண்டுதான் இருந்தார்; சுரேந்திரனுடைய தாய் வழிப் பாட்டனார் பப்னா ஜில்லாவில் மத்திய வகுப்பைச் சேர்ந்த ஒரு ஜமீன்தார். இருபது இருபத்தைந்து கிராம ஜமீன்தாரி; வருஷ வருமானம் சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் இருக்கும்; அவருக்கு குழந்தையோ குட்டியோ ஒன்றும் இல்லை என்பதோடு ரொம்பவும் செட்டுக்காரர்; கருமி என்று கூடச் சொல்லி விடலாம். ஆகையால் தன்னுடைய நீண்ட வாழ்வுக் காலத்தில் ஏராளமாகப் பணம் சேர்த்து வைத்திருந்தார். அவர் போய் விட்டால் அவருடைய சொத் தெல்லாம் ஒரே பேரனான சுரேந்திரனைத் தான் சேரும் என்று அவன் தகப்பனருக்குத் தெரியும்: கடைசியில் அப்படியே நடந்தும் விட்டது. மாமனார் சாகக் கிடக்கிறார் என்று சுரேந்திரனுடைய தகப்பனருக்குத் தகவல் கிடைத்தது. உடனே அவர் மகனைக் கூட்டிக் கொண்டு பப்னாவுக்கு புறப்பட்டார்: ஆனால் அவர் அங்கே போய் சேருவதற்குள் மாமனார் சுவர்க்கத்திற்கு புறப்பட்டு விட்டார். அவருடைய கிரியைகளை எல்லாம் சுரேந்திரனுடைய தகப்பனார் ஏகதடபுடலாகச் செய்தார்.

ஏற்கனவே துன்பப்பட்டுக் கொண்டிருந்த குடிகள் கைதேர்ந்த வக்கீலின் ஆட்சியில் இன்னும் கஷ்டத்திற்குள்ளாயினர்; அவர்களுக்குத் தலைவலி போய் மார்வலி வந்ததுபோலிருந்தது!

இப்போது சுரேந்திரனுக்குக் கலியாணம் பண்ணி வைக்கவேண்டியதும் அவசியமாகி விட்டது. கலியாணம் செய்விக்கிற நாவிதர்கள் வருவதும் போவதுமாக கிராமத்தில் எங்கேயும் கூட்டமும் கூச்சலுமாக இருந்தது. ஐம்பது குரோசதூரத்திற்குள் எங்காவது ஒரு பெண் இருப்பதாகத் தகவல் எட்டினால் போதும்; நாவிதர்கள் பெண் வீட்டில் எழுந்தருளி விடுவார்கள். பெண்ணைப் பெற்றவர்களின் வயிற்றில் பால் வார்ப்பதாகச் சொல்லி விட்டுத் திரும்புவார்கள்.

இம்மாதிரி அமர்க்களத்தில் கலியாணம் நிச்சயம் ஆகிவிட்டது.

கடைசியில் மாற்றாந்தாய் வந்தாள். அவளுடைய சொந்தக் காரர்கள் எல்லோரும் வந்தார்கள். வீட்டில் பந்துக்கள் ஏகமாகக் கூடி விட்டார்கள்.

பிறகு ஒரு நாள் காலையில் மேளதாளங்களின் முழக்கத்திற்கும் கரகோஷத்திற்கும் நடுவில் சுரேந்திரனுக்குக் கலியாணம் ஆகிவிட்டது.

வேதாந்த ரகசியங்கள்

—ஸ்ரீ ஸதானந்த சுவாமிகள்

இயற்கை மன அழகு :—

அழகை விலைக்கு வாங்கின புத்திமான்.

ஒருவன் இயல்பாய்த் தனக்கு அமைந்திருக்கின்ற அழகைக் கொண்டு திருப்தியடையாமல் கவலைப் பட்டுக் கொண்டும் இன்னும் அழகு விருத்தியாவதற்கு வேண்டிய பலரிடம் அவ்வுபாயங்களைப்பற்றி விசாரித்துக் கொண்டு மிருப்பது வழக்கமாயிருந்தது. ஒருநாள் அவனுடைய உற்றநண்பன் இவ்விதமாக உபதேசஞ் செய்தான் : நண்பனே! நீயேன் இவ்வளவு சிந்தாகுலனாய் வருந்துகின்றாய்? ....என்பவனிடம் 'அழகை விருத்தி செய்வதற்காக ஒரு சித்த ஔஷத மிருக்கின்றது ; அதை வாங்கி உட்கொண்டால் உன் அபீஷ்டம் நிறைவேறும்.' இதைக் கேட்டவுடன் அவனுக்கு அடங்காத மகிழ்ச்சி தோன்றி அக்கணமே அவ்வைத்தியரிடம் போய் சரியான விலை கொடுத்து நண்பன் உபதேசித்த மருந்தை வாங்கலாயினான். பத்திய விஷயங்களைப் பற்றி விசாரித்ததில் வைத்தியர் சொன்னதாவது 'இது அழகை மென்மேலும் விருத்தி செய்யத்தக்க மருந்தாகும். நிர்ப்பந்த பத்தியா சாரணைகளும் மற்றுள்ள நிர்ப்பந்தங்களும் இதற்கு வேண்டாம். ஆனால் மருந்து சாப்பிடும் பொழுதெல்லாம் 'குரங்கினுடைய முகத்தை மட்டிலும் நினைத்துக் கொள்ளக் கூடாது.' இவ்வளவையும் வேத வாக்கியமாக அங்கீகரித்து வீட்டுக்கு வந்த நமது மித்திரமணி, மருந்து சாப்பிடுதற்காக ஆரம்பிக்கும் பொழுது வைத்தியர் சொல்லியிருந்த நியமத்தைக் கடந்து விடக் கூடாதெனும் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக முயற்சித்தான்.

அன்று குரங்கின் ஞாபகத்தை, மறந்து ஔஷதத்தை நாளைக்கு அருந்துவோமே எனத் தீர்மானித்தான். மறுநாளும் மருந்தைக் கையிலேந்தி—வைத்தியரின் வாய்மொழியை நினைத்தான். அன்றும் மருந்து சாப்பிட வில்லையெனவே சொல்ல வேண்டும்! இவ்விதம் எவ்வளவோ நாட்களாகப் பிரயத்தனஞ் செய்தும் சாப்பிடுதல் சாத்தியமில்லாமற் போகவும் கடைசியில் கண்ணாடியை யெடுத்து முகத்தைப் பார்க்கும் பொழுது

அதில் குரங்கினுடைய முக அழகும் சேர்ந்து காணப்பட்டது! இந்த சரீரம் சிவப்பாக வேண்டி மருந்தினை உட்கொண்டு பாண்டு ரோகத்தினை வருவித்துக் கொண்டவன் கதையாக வல்லவோ முடிந்தது! இதனினும் பன்மடங்கு அழகாயிருந்த முந்திய முகமே போது மானதாயிருந்ததே என விசன முற்றான்.

இதன் கருத்து

சாந்தம் சம்பாவனை சந்தோஷம் என்பனவாதி குணங்கள் தாம் ஒருவனுக்கு மாறாத அழகாகும். மற்ற அழகுக ளெல்லாம் மாறியழிவனவாம். மிகவும் பிரயாசைப் பட்டாயினும் தேடிக் கொண்டுவரும். இதனை விட்டு முகத்தினுடைய அழகிற்காக வெகு கஷ்டப்பட்டு வீணே விசனிக்க வேண்டிய அவசியமில்லை. அவரவர்க்கு இயற்கை யாகச் சித்தித்துள்ள அழகே அழகு.

அறிவாளரின் சொற் கேட்டு நடத்தல் :—

ஆட்டு மந்தையில் அறிந்த விநோதம்

ஆடுகள் எப்பொழுது இலைகளைத் தின்பதற்கு இஷ்ட முள்ளனவும் தீனியில் வெகு பிரிய முள்ளனவுமாகிய ஜெந்துக்கள், இரவு பகலொழியாது தின்று வந்தாலும் அவைகட்கு ஓர் காலத்தும் திருப்தி யுண்டாவதில்லை. புத்தி விஷயத்திலோ என்றால் இத்தகைய பயனற்ற ஜெந்துக்கள் வேறில்லை யெனக் கூற வேண்டிதாய் வரும். ஆயர்தம் குலச் சிறுவர்கள் இந்த தினுசிலுள்ள பல்லாயிரக்கணக்கான ஆடுகளை ஒருங்கே திரட்டிக் கொண்டு மேய்ப்பதற்குச் செல்லுவார்கள். ஒரு இடத்தில் சேர்வதற்கும் கிடை போடுவதற்கும் அப்பால் அங்கிருந் தெழுந்து சென்று தண்ணீர் குடிப்பதற்கும் மேய்வதற்குமாக ஒவ்வொரு சத்தக் குறிகளை ஆடுகளுக்குப் பழக்கப் படுத்தியிருப்பார்கள். இச் சிறுவர்களால் அளிக்கப் படுகின்ற குறிகளாகிய (அடையாளங்களாகிய) ஆக்கினைகளை ஆடுகள் தெரிந்து கொண்டு நடந்து கொள்ளுகின்ற முறைகள் நாம் ஒவ்வொருவரும் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியவைகளேயாம். இதென்ன விந்தை? ஒரு சிறுவன் ஐயாயிரம் ஆடுகளை ஒரே யிடத்தில் கிடக்கும்படி ஆக்கினை யிட்டுப் போவான், அவன் திரும்பி வரும் வரையில் ஆடுகளைச் சூழ்ந்து எத்தகைய சுவை பொருந்திய தீனிகள் காணப் பட்டாலும் அக்கூட்டத்திலிருந்து ஓர் ஆடு கூட எழுவது மில்லை! சிறுவனிட்ட உத்தரவைக் கடந்து போய் மேய்வதற்குச் செல்வதுமில்லை! சிறுவனது கட்டளைப்படி நடப்பதால் பக்கத்திலுள்ள விஷயங்களிற் செல்லாது இருக்கத்தக்க மனச் சக்தியானது இப்பகுத்தறிவற்ற ஆடுகளுக்குக் கிடைத் திருக்கின்றது. இது ஒரு பெரிய யோகாப் பியாஸஞ் செய்து கிடைத்த சித்தியல்ல! கட்டளைக்கு அடங்கி நடக்குந் திறனால் அமையப் பெற்றதாகும்.

இதன் கருத்து

மானிடர்கள் மற்ற எல்லாப் பிராணிகளினும் மேலானதான புத்தி நுட்பம் வாய்ந்தவர்க ளென்பது உலகப் பிரசித்தம். அவர்கள் புத்திமான்களின் உத்திரவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் அவ்வண்ணமே அநுசரித்து நடப்பதற்கும் சாமர்த்தியம் வாய்ந்தவர்

கள். எனினும், மனிதரின் தற்காலத்தைய அனுபவத்தைப் பற்றி நினைக்குங்கால் அவர்களின் செயல்களில் ஒற்றுமையென்பது சிறிதும் காணப்படுவதில்லை, ஆனால் ஒவ்வொருவரும் வெவ் வேறு விதமான அபிப்பிராய(பேத)ங்களையுடையவர்களாய்க் காணப்படுகின்றார்கள். அதற்குக் காரணம் யாதெனில், அவர்கள் தமது வெளிப் புலன்களையடக்கி உள்ளே திரும்பச் செய்து அங்குள்ள—மிக்க மேலானதான ஞான போதத்தை அநுபவித்து அமைதி நிலையில்லாததால் எல்லா விதத்தாலும் ஒற்றுமையும் உத்திரவிட்ட வண்ணம் அடங்கி நடத்தலும் நன்மையைப் பின் பற்றிச் செல்லலும் இல்லாதாகிக் காணப்படலாம். மதியற்ற ஆட்டுக் கூட்டங்கட்கு அவைகளின் தலைவனது ஆணையைக் காப்பாற்றிக் கொள்வதில் இவ்வளவு ஒற்றுமைப் பழக்கம் கிடைத்திருக்கின்ற நிலைமைக்கு. புத்திவிலாசமுள்ள மனிதர்கள் சமபுத்தியுள்ளவர்களாயும், மேதாவிகளுடைய கட்டளையை அங்கீகரிப்பவர்களாயும் காணமுடியாமற் போனது வெகு விந்தையேயாகும், இதனாலன்றோ பண்டித பாமரர் யாவரும் துன்புறுகின்றனர்!

'ஒற்றுமை யுயர் வளிக்கும்'
சங்கே சக்தி : கலௌயுகே'

இரக்கம் :—

எளியாரின் பரிதாபக் காட்சி.

சில மனிதர்களுடைய சரீரத்தின் எல்லா பாகங்களும் புழுத்தும் வெகு துர்க்கந்தத்தோடும் காணப்படுகின்றன. இவர்கள் புழுக்களுடையகடியினால் இரவுபகலென்னேரமும் தூங்குவதில்லை; வெகு வேதனையை யநுபவித்துக் களைத்துவிடுகின்றார்கள்; பசிதாகத்தால் பீடிக்கப்படுகின்றார்கள்; ரோட்டுகளின் இரண்டு பக்கங்களுமே இவர்களுக்குப் படுக்கைகளாயின. இவர்கள் துன்பக் கடலில் மூழ்கிக் கிடக்கின்றார். இவர்களுக்கு உதவி செய்ய யாருமேயில்லை. இங்ஙனம் உடுத்த ஆடையின்றித் தரையிற் கிடந்து பரிதபித்து அழுகின்ற மனிதர்களை நாம் பல சமயமும் காண்பதுண்டல்லவா! இவர்களைப் பிடித்து வருகின்ற நோயின் பெயர் குஷ்டம். இத்தகையோர்களை விட்டுப் பிரியாது சதாகாலமும் சூழ்ந்து கொண்டு சிலரிருப்பதைக் காணலாம். இவர்களின் பெயர் ஈ முதலியனவாம்! ஆகா! என்ன பரிதாபமான காக்ஷி! வழிப்போக்கரிற் சிலர் இவர்களைக் கண்டு காரியுமிழ்ந்து செல்வார்கள். வேறு சிலர் 'சீ! பூடா! கண்ணில் காணாவண்ணம் வேறு எங்கேனுஞ் சென்று விடவேன்!' எனக் கூறிக் கல்லையும் மண்ணையுங் கலந்தெடுத்து எறிவார்கள். மற்றுஞ் சிலர் 'இவனுக்கு ஒருவரும் உதவி செய்யக்கூடாது' என்பார்.

'இவன் இவ்விதமே அநுபவிக்க வேண்டியனாவன். ஓர் சமயம் இவன் என்னை, அளவுக்கு மிஞ்சித் திட்டியதுண்டு எனது பரம சத்ருவாகிய இவன் இவ்வித நிலைமைக்கு வந்து காணும்படிக்குக் கிடைத்த இந்த பாக்கியத்தைப் பார்க்கிலும் எனக்கு இனி என்ன வேண்டும்' எனப்புகன்று மிகச் சந்தோஷித்தவனாய் (சிரித்துக் கொண்டே) செல்வார்கள். இங்ஙனம் பார்ப்பவர்களில் பெரும்பான்மையரும் ரோகியினுடைய ஹிருதயம் வெடித்துப் பொடியாகும் வண்ணம், கடுஞ் சொற்களாகிய மாலைகளாலும்

ால் முதலியவற்றின் பிரயோகங்களாலும் நோயாளியை இம்சித்து வருகின்ற செயல்களை நாம் கண்டு வருகின்றோம். இக்கொடிய துன்பானுவத்தினின்றும் தெய்வம் நமக்கு எதனைக்கற்றுக் கொடுக்கின்றதென்பதை ஆராய்வோம். ஒருவன் மற்றொருவனுடைய அங்கஈனங்களைக் கண்டு இகழுகின்றான். செல்வம் படைத்தவன் தரித்திரனைக் கண்டும் நோயாளியைக் கண்டும் பலமுள்ளவன் பலமில்லாதவனைக் கண்டும் அழகுள்ளவன் அழகில்லாதவனைக் கண்டும் படித்த பண்டிதன் படியாத மூடனைக் கண்டும் பரிகாசஞ் செய்கின்றான். அவனுக்கு அவ்விதமான ஆபத்தும் துன்பமும் கவலையும் வருவதற்குக் காரணம் அவன் அத்தனை மதியீனனாயிருந்ததனால்தான். நான் எவ்விதத்திலும் சாமர்த்தியசாலியாதலால் எனக்கு அவ்விதமான தவறாகவொன்றும் வருவதற்குக் காரணமில்லை. நான் எவ்வளவு யோக்கியன், எவ்வளவு சுகமாயிருப்பவன்! எவ்வளவு பாக்கியவான்! எனக்கு நிகராக இவ்வுலகத்தில் எவரிருக்கின்றார்! என்று இவ்வாறல்லவோ அம்மனிதன் எண்ணியிருக்கின்றான். இஃதெத்தனை பயனற்ற எண்ணம்! எவ்வளவு மதியீனம்! ஆலோசித்துப் பாருங்கள்!

மேற் கூறப்பட்ட குஷ்டரோகியை எவரெவர் நிந்தித்தனரோ (அவமானஞ் செய்தனரோ) அவரவர் உண்மையில் தன்னைத் தானே நிந்தித்துக் கொள்பவராவர். எங்ஙனமெனில் அக் குஷ்டரோகியானவன் இப்பொழுது அநுபவித்து வருவது அவனுடைய ஜென்மாந்தர வினைப்பயனலாம். இவ்விதம் நிந்தனை புரிந்த மனிதன், 'முன் ஜென்மத்தில் அத்தகைய கொடும் செயல்களைச் செய்தவனும் அதனால் மேற் குறித்த குஷ்ட ரோகியினுடைய நிலைமை அநுபவித்தவனும் அல்லனென்னத் தீர்மானிப்பதற்கு ஏதேனும் நியாயமுண்டா? ஒரு காலத்தும் இல்லை. அத்தகைய நோயை அநுபவித்தவன் என்று வந்தால், இந்நிந்தையெல்லாம் யாரைக் குறித்தது? தன்னைக் குறித்ததே அல்லவா? அஃது அங்ஙனம் நிற்க. இனி வரப்போகின்ற ஜென்மத்தில் இவ்விதமாய்க் குஷ்ட நோய்களைக் கொடுக்கின்ற கொடிய கர்மங்கள் இவனிடத்திலில்லையென நினைப்பதற்கு இயலுமா? இயலாது. அவ்விதம் அநுபவிக்கும்படி நேருமானால் இவன் பரிகசித்தது எவரையெனப் பாருங்கள். இவ்வாறான காரணங்களும் ஒழிக. இம்மாதிரி நிந்திப்பவன் இச்சென்மத்திலேயே, தன்னுடைய எல்லா உன்னத பதவிகளையும் விடுத்து மேற்புகன்ற குஷ்டரோகியின் நிலைமையில் வரமாட்டானென்று நிச்சயிப்பதற்குப் போதுமான நியாயமும், அத்தாக்ஷியுமுண்டோ? உண்டென்று பகருதற்கு ஒருவராலும் முடியவே முடியாது. அவ்விதமான நிலைமைக்கு வருவானேல் அவன் இப்பொழுது யாரை நிந்தித்தவனாகின்றான்? தன்னைத்தானேயல்லவா?' இவ்விதமாய், நடந்த, நடக்கின்ற, நடக்கப்போகின்றதாகிய காலத்திரய நிலைமைகளையும் பார்க்கும்பொழுது 'நிந்திப்பவன், தன்னைத் தானே நிந்திப்பவனாய் காணப்படுகின்றான். தன்னைப் பார்த்து வேறொருவன் இகழுவது தனக்கு இன்பமாயிருத்தற்கிடமில்லையல்லவா? தனக்குத் தானாகவே நிந்

ஓ! இந்தியனே!

"கண்ணன்"

(சென்ற மாதத் தொடர்ச்சி)

II

ஓ! பாரதப் புதல்வனே! உன் கண் கலங்குவதையும், அதினின்று கங்கை, யமுனை, சிந்து, பிரம புத்திரா, கோதாவரி நதிகள் போன்று கண்ணீர் பல கிளைகளுடன் உன் கன்னத்தின் வழியாகக் கசிந்தோடுவதையும் காண்கிறேன். உன் நாடு எழில் நலம் யாவும் குன்றி வறுமைக்கு இலக்காகி அயல் நாட்டு மக்களின் ஆதிக்கத்தால் வருந்தி வாடியோடும் கண்ணீரென்று கண்டுகொண்டேன். உன்னில் குடி கொண்டிருக்கும் நிசப்தம், உனது இருதயத்திலுள்ள ஆழ்ந்த யோசனையையும், துக்கத்தையும் வெளிப்படுத்துகிறதன்றோ? ஆனால் தைரியத்தைத் தளர விடாதே. அரசியல் விடுதலையைப் பெறுவதற்கான முதலணி வேலை உனக்கு உன்னாட்டில் இருக்கிறதென்பதை உணர்ந்து கொள். முதலில் நீ செய்ய வேண்டிய அறிவு வேலைகள், ஆக்க வேலைகளும் பலவுள. இன்னும் உனக்குச் சொல்ல வேண்டியவை பல உண்டு. உன் சிந்தையி

விளைவித்துக் கொள்ளுகின்றவன் இவ்வுலகத்தில் எங்கும் காணப்படான். ஆகையினால், மாமேரு பருவத்தைப் போலுள்ள பெரிய பெரிய குற்றங்களெல்லாம் தம்மிடமிருக்க அவைகளைக் கண்டறிந்து நீக்குதற்குச் சாமர்த்தியமற்றவர்களாய் மற்றவர்களிடமுள்ள கடுகு போன்ற சிறு குற்றங்களைக் கண்டு பிடித்து நிந்திக்கப் புறப்படுவது ஆகா! என்ன கஷ்டம்! இவர்களின் நிலைமை எவ்வளவு பரிதபிக்கத் தக்கதாயிருக்கின்றது? அந்நியரிடமுள்ள குற்றங்களைக் கண்டு பிடித்து நிந்திக்கப் புறப்படுவதற்கு முன் தங்களுடைய குற்றங்களையறிந்து கொண்டு அவற்றை நீக்குதற்கு முயற்சித்தால் அது எவ்வளவோ நலமாயும் உத்தம தர்மமாயுமிருக்குமே! இஃதன்றியும், பிறருடைய துன்பத்தில் தான் பங்கு கொள்வதும் அவர்களை அந்நிலைமையினின்றும் கைதூக்கி விடுதற்காகப் பாடு படுவதுமே செய்யத் தக்கதாம். அவ்விதமாக நாம் செய்வோமானால் நமக்கு நேரிடுகின்ற கஷ்ட அவஸ்தைகளைக் கண்டு அவர்கள் யாவரும் நமக்குப் பேருதவி புரிதற்காக முன் வருவார்கள். ஆகலால், எளியவர்களை இகழும் சுபாவமின்றி அவர்களிடம் மிக்க காருணிய சீலர்களாயிருத்தல் வேண்டும். உலகத்தில் தோன்றிவரா நின்ற, உயர்வு தாழ்வுகளைத் தன்னிடமே கண்டு, அத்தாழ்ச்சிகளில் தனக்குள்ள வெறுப்பைப் போல, உலகினர்க்கு மிருக்குமெனத் துணிந்து தன்னுடைய குறைகளை நீக்குகின்றவர்கள் 'பெரியோர் யாவரினும் மேலான பெரியோராவர்.'

லிருந்து பொங்கி வரும் உணர்ச்சிகளை ஒருவாறு அடக்கி உன் ஒப்பற்ற புராதன நாட்டின் உயர்வை—கப்பல் செய்து திரைகடலோடி திரவியஞ் சம்பாதித்த மேம்பாட்டையுங் கூறுகிறேன் கேள்.

டிக்பி என்பவர் தனது நூலில் ('Prosperous British India') கூறுவதாவது:—

'நூறு வருஷங்களுக்கு முன் கப்பல் செய்யுந் தொழில் இந்தியாவில் வெகு நேர்த்தியாயிருந்ததால் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் கப்பல்களோடு இங்கிலாந்து சென்று தேம்ஸ் நதியில் பிரிட்டிஷ் கப்பலோட்டிகளால் ஓட்டப்பட்டிருக்கின்றன.'

டெய்லர் என்ற நூலாசிரியர் கூறுவதையும் கேள். (Taylor-History of India p. 216)

“இந்தியச் சாமான்கள் இந்தியாவில் செய்த கப்பல்களில் ஏற்றப்பட்டு லண்டன் நகரை யடைந்த போது தங்கள் விரோதிகளின் படைக் கப்பல்களைக் கண்டு எவ்வளவு நடுக்கம் ஏற்படுமோ அவ்வளவுக் கதிகமாக ஆங்கிலேயர்களுக்கு உண்டாயிற்று. லண்டனில் கப்பல் செய்வோர் முதலாவது தங்களுக்குக் கெடுதிகள் வந்ததென்று கூக்குரலிட்டனர்.'

இது தவிர ஈஸ்ட் இந்தியா கம்பெனி 4-வது ரிப்போர்ட் பக்கம், 23–24ல் குறிப்பிட்டிருப்பதாவது:— 'உயர்ந்த நிலைக்கு வந்திருக்கும் இந்தியக் கப்பலோட்டிகள் நமது தேசத்திற்கு வந்து நமது தன்மைகளைக் கண்டு சென்றால் நாம் அடக்கி நம்மைக் கண்டு பயப்படும்படி செய்திருக்கும் ஆசியா தேசத்தினர் மனதில் நம்மை மதியாத எண்ணத்தை உண்டாக்கி விடுவார்கள். ஆகலால் நமக்கு அனேக இடையூறுகளுண்டு' என்று இந்தியக் கப்பலும், கப்பலோட்டிகளும் இங்கிலாந்துக்கு வரக்கூடாதென்று தடுத்தனர்.

நமது பண்டித மாளவியா கூறுவதையுங் கேள். (M. M. Malaviya-'Indian Industrial Commission' 1916-18, p. 300)

'இந்தியாவில் கப்பல் விருத்தியை அடக்காமலிருந்தால் இந்தியாவின் நிலைமை எவ்வளவு உயர்ந்திருக்கும்! இங்கிலாந்திற்கும் பலம் அதிகரித்திருக்கும்! கடந்த 40 வருஷங்களில் இதர நாடுகளைப்போல் கப்பல் போக்குவரத்துச் செய்வதில் முன்னடைந்திருந்தால் இந்தியாவிற்கும், பிரிட்டிஷ் இராஜ்ஜியத்திற்கும் எவ்வளவு க்ஷேமமாயிருந்திருக்கும்!'

இந்தியாவில் புகை வண்டி ஏற்பட்டதின் காரணம் உனக்குத் தெரியுமா? லார்டு டல்ஹௌஸி சரித்திரத்தை எழுதிய சர் ஹண்டர் என்பவர் கூறியிருப்பதை அப்படியே தருகிறேன். (Sir W. W. Hunter 'Dalhousie' pp. 191,193-96)

'இது (புகை வண்டி ஏற்படுத்தியது) லார்டு டல்ஹௌஸியின் போற்றத்தக்க கருத்து. அவர் தன் புதிய புகை வண்டிப்பாதைகளால் புதிதாகச் சேர்த்த தேசங்களின் தூரங்களைக் குறைத்து, தன் இராணுவ அதிகாரத்தை ஆங்காங்கு ஸ்தாபித்துக் கொள்ள முடிந்ததோடு பிரிட்டிஷாரின் முதலாளிகளையும், அவர்கள் வியாபாரங்களையும் இந்தியாவுக்குள்

இலகுவாகப் பல இடங்களில் வந்து சேரவும் புகை வண்டிகளை உபயோகமாகச் செய்தது மற்ற எந்த கவர்னர் ஜெனரலுக்கும் மனதில் உதிக்கவில்லை. ....அவருடைய 8 வருட ஆளுகையில் இயற்கைப்பருத்தி ஏற்றுமதி இரண்டு பங்காயிற்று. 1,500,000 பவுனிலிருந்து 3,300,000 பவுனுக்கு வந்தது. தானியங்களின் ஏற்றுமதி மூன்று பங்காயிற்று. 890,000 பவுனிலிருந்து 2,900,000 பவுனுக்கு உயர்ந்தது. மொத்த ஏற்றுமதி 13,300,000 பவுனிலிருந்து 23,000,000 பவுன் வரை ஏறியது...............இப்படியாக விளைவு அதிகரிக்கவே இந்தியர் எப்பொழுதுமில்லாத விதமாக இங்கிலாந்து தேசத்தின் சாமான்களை வாங்க ஏற்பட்டது. இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு துணிச் சாமான்கள் இறக்குமதி 1848ல் 300,000 பவுனிலிருந்து 1856ல் 630,000 பவுனுக்கு உயர்ந்தது.'

ஏ! வீரப்புதல்வனே! இவைகளின் முடிவு என்ன தெரியுமா? அடிக்கடி பஞ்சமே!

இந்தியாவின் கைத்தொழில் நாசத்தாலும், பிரிட்டிஷாரின் சாமான்கள் இறக்குமதியின் உயர்வாலும், இந்தியாவிலிருந்து விளைவுச்சாமான்கள் ஏற்றுமதியாலும்; கைத்தொழில்களில் ஈடுபட்ட எல்லா வகுப்பினர்களையும் தேசத்தில் எல்லாப் பாகங்களிலும் தரித்திரர்களாக்கி அவர்கள் தங்கள் ஆகாரத்திற்கு விவசாயத்தைக் கைக்கொள்ள நேரிட்டது. 1878-79 வருஷங்களில் மொத்த ஏற்றுமதி 58,750,000 பவுன் மதிப்புள்ள சாமான்களில், கேவலம் 100-க்கு 6½ விதமுள்ள பாகமே இந்தியக் கைத்தொழில் சாமான்களாயிருந்தது. 1880ம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி மாத்திரம் 51,397561 பவுன் மதிப்பாயிற்று. இக்காரணங்களால் இந்தியாவின் பொருளாதாரம் குறைவுபட்டு அடிக்கடி கொடிய பஞ்சங்கள் உண்டாகத் தொடங்கின. 1800 முதல் 1825 வரை 5 பஞ்சங்களும் 1825 முதல் 1850 வரை 2 பஞ்சங்களும், 1851 முதல் 1875 வரை 6 பஞ்சங்களும், 1876லிருந்து 1900 வரை 18 பஞ்சங்களும் உண்டாயின. சரித்திர ஆசிரியர் டிக்பி கூறுவதுபோல் அரசாங்க அதிகாரிகளின் கணக்குப்படி 1854 முதல் 1901 வரை பஞ்சத்தால் 28,825,000 பேர்கள் மாண்டு மடிந்தனராம்! அதே ஆசிரியர் டிக்பி 1901ல் எழுதும்போது கூறுகிறார்:—' ஏறக்குறைய 19—ம் நூற்றாண்டில் கடந்த 30 வருஷங்களுக் கப்பால் ஏற்பட்ட பஞ்சங்களைவிட நான்கு பங்கு அடிக்கடியும், நான்கு பங்கு விரிவாகவும் பஞ்சங்கள் உண்டாயின.'

பார்த்தாயா பாரதப் புதல்வனே உன்னுடு காடான காரணத்தை! இனி நீ வாளா யிருப்பதில் பிரயோஜனமில்லை. உன் கடமையை நீயே செய்ய வேண்டும். உன்நாடு முந்திய நிலையடைய வேண்டுமானால் உன்போன்றவர்கள் தங்கள் நாட்டுக்கான கடமைகளைச் செய்ய பின்னடையக் கூடாது. உனது உழைப்பு இன்று மிகச் சிறிதாகத் தோன்றலாம். அதுவே நாளடைவில் பெரிய விருக்ஷமாகி நாட்டுக்கு நிழல் தரக்கூடும். மேலும் உன்னைப்போல் எத்தனை பேரறிஞர்கள், எத்தனை காங்கிரஸ் நிபுணர்கள்; எத்தனை வாலிபச் சிங்கங்கள்; எத்தனை வீர

தீரப் பெண்மணிகள் சந்தர்ப்பம் வாய்க்கப்பெறாமல் வனத்தில் மலர்ந்த அரும்பு போல மணமடையாது, புகழுடையாது மறைகின்றனர்! பத்திரிகை விற்கும் சிறுவனாகவும், செருப்பு தைத்துச் சிறுமைப்பட்ட சிறுவனாகவுமிருந்து தாங்கள் பிறந்த நாட்டையே ஆளும் திறனுடையவர்களாய் இதர நாடுகளில் மாத்திரம் விளங்க உன்னாட்டில் மாத்திரம் இயற்கையாகவே அபார சக்திகள் அமையப் பெற்றும் அவைகள் மழுங்கப் பெற்று ஒன்றுக்குமே உதவாதவர்களாயிருப்பதின் காரணத்தைக் கண்டாயா?

இத்தாழ்வுற்ற நிலையிலும் உங்களுக்கிடையே ஜாதி சமயப் பிணக்குகளா? உயர்வு தாழ்வுக் கூற்றுகளா? தீண்டாமை போன்ற வேற்றுமைகளா? அந்தோ பாவம்! அடிமைகளுக்குள் இத்தனை பூசல்களா? ஹிந்து என்றால் யார்? மகம்மதிய ரென்றால் யார்? சைவர் என்றால் யார்? வைணவர் என்றால் யார்? கிறிஸ்துவ ரென்றால் யார்? பௌத்தர் என்றால் யார்? அனைவர்களும் மனிதர்களேயன்றோ? மகம்மதியரிடத்திலும், ஹிந்துக்களிடத்திலும் வெவ்வேறு இரத்தமா ஓடுகிறது? ஒரே வயிற்றில் உதித்தவர்கள் யாவரும் சகோதரர்களன்றோ? உங்கள் பாலுள்ள புறச்சமய வேற்றுமைகளை மறந்து விடு. சாதிச் செருக்கை விட்டொழி. மக்களை மக்கள் அடிமை கொள்ளும் வழக்கத்தை அறவே அகற்று. நாட்டின் முன்னேற்றத்தில் நாட்டங்கொள். உன் கடமையை நீ செய். அதன் பலா பலன்களை எண்ணாதே. உழைப்பின்றி ஊதியம் பெற முடியுமா?

உங்களிடையே அன்று ஒற்றுமையும், தேசாபிமானமும் இருந்திருப்பின் அயலார்களாகிய மொகலாயர்கள் இந்த நாட்டில் அடி வைத்திருப்பார்களா? ஐரோப்பியர்கள் தான் நாட்டை ஆக்ரமித்திருப்பார்களா? இராஜ புத்திரர்களின் வீரம் உலகில் இரட்சிக்கப் படாமலிருந்திருக்குமா? அலெக்ஸாண்டர்தானிங்கு அடி வைக்க எண்ணியிருப்பானா? எல்லாம் யோசித்துப்பார்.

நீ உன்னைச் சுற்றியுள்ள நாடுகளைப் பார். ஒவ்வொரு வலிய நாடும் எளிய நாடுகளை சாக்குப் போக்குகள் சொல்லி சாப்பிட்டு ஏப்பமிட்டுக் கொண்டிருக்கிற இந்நாளில் நீ இன்னும் உறங்கலாமா? 'நாடு எக்கேடு கெட்டாலென்ன? 'நாட்டை இராமனாண்டாலென்ன? இராவணனாண்டாலென்ன?' வென்று வாளாயிருக்க முடியுமா? உலகில் கஷ்ட நஷ்டங்களை ஏற்காமல் உயர்வடைந்தோர் ஒருவருமில்லை. ஆகவே ஊக்கத்துடன் எழுந்திரு. தேசாபிமானத்தால் ஒற்றுமையுடன் அரிய தொண்டாற்றி உன் அன்னை பாரதிக்குப்புத்துயிர் அளித்து அரியாசனத்தில் அமர்ந்து அரசு புரியச் செய் ஓ! இந்தியனே!

பால கங்காதர திலகர்

ஜனனம்—1856

மரணம்—1920

—"காங்கிரஸ்வாதி"

இந்திய அரசியல் விஷயங்களில் சொற்ப ஞானம் படைத்தவர்கள் கூட லோகமான்ய பால கங்காதர திலகருடைய பெயரையும் அவருடைய தியாகத்தையும், சேவைகளையும் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. திலகர், காங்கிரஸ் தலைவர் பீடத்தில் ஒரு முறை கூட அமரவேயில்லை. 1918ம் வருஷத்தில் டில்லியில் கூடிய காங்கிரஸுக்கு இவர் ஏகமனதாகத் தலைவராகத் தெரிந் தெடுக்கப் பட்டார். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு வழக்குக் காரணமாக இவர் இங்கிலாந்து செல்ல வேண்டி யிருந்ததால் இவருக்கு, காங்கிரஸ் தலைவர் பீடத்தில் அமரக்கூடிய பாக்கியம் கிடைக்கவில்லை. ஆனால் அதற்காக, இவரைத் தேசமக்கள் நிராகரிக்கவுமில்லை. இவ்ருடைய ஆயுட்கால முழுவதும் இவர் இந்தியாவின் ஒப்பறற தலைவராகவே விளங்கினர்.

திலகா பெருமான், 1896ம் வருஷம் ஜுலை மாதம் 23ந் தேதி மஹாராஷ்டிரத்திலுள்ள ரத்தினகிரி எனற ஊரில், கங்காதர ராவ் ராமச்சந்திர ராவ் திலகருடைய திருமகனாக ஜனனமானர். தகப்பனரான ராமசந்திர திலகர், பள்ளிக் கூடங்களின் அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராக வேலை பார்த்தார். இவர் கணித சாஸ்திரத்திலும் வியாகரணத்திலும் நல்ல நிபுணர். இவருக்கு மகனாகப் பிறந்த நமது திலகர், கணித சாஸ்திரத்தில் சிறந்த நிபுணராயிருந்ததில் என்ன ஆச்சரியம்?

திலகருடைய சரியான பெயர் பலவந்த ராவ் கங்காதர ராவ் திலகர். ஆனால் வீட்டில் எல்லாரும் இவரை 'பாலா' 'பாலா' என்று அழைத்து வந்ததனால், இவருடைய பெயரும் பிற்காலத்தில் பாலகங்காதர திலகர் என்றே வழங்கலாயிற்று.

திலகருடைய தகப்பனார் உத்தியோக நிமித்தம் புனாவுக்குமாற்றப்பட்டார். அங்கிருந்தே திலகருடைய கல்வி ஆரம்பமாயிற்று. மெட்ரிகுலேஷன் பரீட்சையிலும் பி. ஏ. பரீட்சையிலும் வெற்றிகரமாகத் தேறினார். மாணாக்கராயிருந்த காலத்தில், தமது ஆசிரியன்மார்களோடு அடிக்கடி தர்க்க வாதஞ் செய்வார். தமது அபிப்பிராயத்தைக் கொஞ்சங் கூட ஒளி மறைவின்றிச் சொல்வார். இதற்காக இவரிடம் சிலர் அச்சப்பட்டதுமுண்டு. 1879ம் வருஷம் இவர் வக்கீல் பரீட்சையில் தேறினார். ஆனால் வக்காலத்து பெறவில்லை. இந்தச் சமயத்தில் இவருக்கு, அகர்க்கார் என்பவருடைய சிநேகம் உண்டாயிற்று. அகர்க்கார் என்பவர், சமுதாயச் சீர்திருத்த விஷயங்களில் மஹா ராஷ்டிரத்தில் ஒப்பற்ற தலைவராக விளங்கினார். அகர்க்காரும் திலகரும் ஒன்று சேர்ந்து, தாங்கள் அரசாங்க சேவை எதிலும் ஈடு படுவதில்லையென்றும், தேச சேவையிலேயே தங்கள் வாழ்நாளை அர்ப்பணஞ் செய்வதென்றும் தீர்மானித்தார்கள். இந்தத் தேச சேவைக்கு அடிப்படையாயிருப்பது, ஜனங்களுக்குக் கல்வி ஞானத்தைப் புகட்டுவதே யென்பதை இவர்கள் தெரிந்து அப்படியே, இந்த இருவரும், சிப்ளங்கர் என்ற மற்றொருவரும் ஆகிய மூவரும் சேர்ந்து கொண்டு 1880ம் வருஷம் ஜனவரி மாதம் முதல்தேதி 'நியு இங்கிலீஷ் ஸ்கூல்' என்ற ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தார்கள். மூன்று மாதத்திற்குள், பிள்ளைகளின் எண்ணிக்கை ஐந்நூறுக்கு அதிகமாயிற்று. இந்தப் பள்ளிக்கூடந்தான் பிற்காலத்தில் பிரசித்த பெற்ற 'பெர்குஸன் காலேஜ்' ஆயிற்று. இந்த காலேஜிலும் இவர் போதகாசிரியராயிருந்தார். ஆனால் பின்னர், காலேஜ் நிருவாகிகளுக்குள் சில அபிப்பிராய வேற்றுமைகள் ஏற்பட்டன. அதாவது, ஓர் ஆசிரியருடைய வாழ்க்கைக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவுதான் அந்த ஆசிரியர் சம்பளமாக எடுத்துக் கொள்ளலாம் என்பது திலகருடைய கட்சி. இதனை வேறொரு சாரினர் எதிர்த்தனர். இதனால் திலகர், மேற்படி கல்வி ஸ்தாபனத்திலிருந்து பிரிந்து செல்ல வேண்டியதாயிற்று.

1881ம் வருஷம் திலகரும் அகர்க்காரும் சேர்ந்து 'கேசரி' என்ற மஹா ராஷ்டிர வாரப்பத்திரிகையையும், 'மஹாராட்டா' என்ற ஆங்கில வாரப் பத்திரிகையையும் புனாவிலிருந்து ஆரம்பித்தார்கள். சிறிது காலத்திற்குள் இரண்டு பத்திரிகைகளும், இந்திய தேசிய வாழ்வில் முக்கியமானதொரு ஸ்தானத்தைப் பெற்று விட்டன. அரசியல் கிளர்ச்சி என்பது என்ன, அதை எப்படிச் செய்வது என்பதற்கு இவை வழி காட்டின.

ஜனங்களுக்குத் தேசிய விழிப்பை உண்டு பண்ண வேண்டி, திலகர், கணேசர் திருவிழா வென்றும், சிவாஜி திருவிழா வென்றும் இரண்டு திருவிழாக்களை ஏற்படுத்தினார். 1896ம்

வருஷத்தில், பம்பாய், மஹாராஷ்டிரம் முதலிய பிரதேசங்களில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது இவர் கஷ்ட நிவாரணத் தொண்டில் ஈடுபட்டுச் செய்த சேவை கொஞ்சமல்ல. பின்னர் பிளேக் நோய் வந்தது. அப்பொழுதும் இவர் துணிச்சலாக எல்லா இடங்களுக்கும் சென்று ஜனங்களுக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்து வந்தார். பம்பாய் சட்ட சபைக்கு இவர் ஓர் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பட்டு அங்கும் இவர் அநேக நற்காரியங்களைச் செய்து வந்தார். பிளேக் நிவாரண வேலையில் இவர் ஈடுபட்டிருந்த காலத்தில், ராண்ட் என்ற ஓர் உத்தியோகஸ்தர் கொலை செய்யப்பட்டார். அதற்காக திலகர் மீது ராஜத் துரோகக்குற்றஞ் சாட்டப்பட்டு ஒன்றரை வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். அப்பீல் செய்தும் பிரயோஜனமில்லை.

காங்கிரஸில், ஆதியிலிருந்து இவர் நேரடியாகச் சம்பந்தப்பட்டுக் கொள்ளாமலிருந்த போதிலும், இவருடைய தீவிர எண்ணங்கள் காங்கிரஸில் அடிக்கடி பிரதிபலித்துக் கொண்டு வந்தன வென்றே சொல்ல வேண்டும். வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சி சமயத்தில் இவர் காங்கிரஸில் நேர்முகமாக ஈடுபட்டார். பின்னர் 1907ம் வருஷம் சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸில், திலகரைத் தலைவராகக் கொண்ட தீவிர வாதிகளுக்கும் கோகலேயைத் தலைவராகக் கொண்ட மிதவாதிகளுக்கும் பிளவு ஏற்பட்டு, இது காரணமாக, திலகர் காங்கிரஸினின்று விலகிக்கொண்டார்.

1908ம் வருஷம் சர்க்கார் இவர் மீது ராஜத்துரோகக் குற்றஞ் சாட்டி ஆறு வருஷக் கடுங்காவல் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தனர். இவர் இந்தத் தண்டனை காலத்தை பர்மாவிலுள்ள மாண்டலே சிறையில் கழித்தார். இந்தச் சிறை வாசத்தின்போது, ஸ்ரீ பகவத் கீதைக்கு விரிவுரை யொன்று எழுதினார். இதுவே பின்னர் 'கீதாரகஸ்யம்' என்ற பெயரால் புத்தகமாக வெளியாயிற்று. இவர் சிறையிலிருந்தபோது 1921ம் வருஷம், இவருடைய தரும பத்தினியார் காலமானார்.

சிறையிலிருந்து இவர் வெளி வந்த சமயம், இந்தியாவில் ஹோம் ரூல் கிளர்ச்சி வலுத்திருந்தது. இவரும் அக்கிளர்ச்சியில் சேர்ந்து தீவிரமாக உழைத்தார்.

1916ம் வருஷம் இவர் மீண்டும் காங்கிரஸில் சேர்ந்துழைக்கத் தொடங்கினார். மாண்டேகு செம்ஸ் போர்ட் சீர்திருத்தம் அமுலுக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னர், இவர் இங்கிலாந்துக்குச் சென்று பார்லிமெண்டரி சப் கமிட்டி முன்னர் சாட்சியங் கொடுத்தார். அப்பொழுது இவரை யாரும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

ஸர் வாலெண்டைன் சிரால் என்ற ஓர் ஆங்கிலேயர், 'இந்திய அராஜகம்' என்ற ஒரு நூலில் திலகரைப் பற்றிச் சிறிது கேவலமாகக் குறிப்பிட்டிருந்தார். இதற்காக அவர் மீது திலகர் மான நஷ்ட வழக்குத் தொடுத்தார். இதற்காக இவர் இங்கிலாந்துக்கு இரு முறை செல்ல வேண்டியதாயிற்று. கடைசியில் இந்த வழக்கு திலகருக்குச் சாதகமாக முடியவில்லை.

திலகர் பிரான் 1920ம் வருஷம் ஜூலை மாதம் 31ந் தேதி இரவு பம்பாயில் தேக வியோகமானார்.

தந்தையைக் காத்த தனயன்

—"சங்கர குமாரன்"

ஆயிரம் போர் வீரர் ஒருவர்க்கொருவர் பேசாதவாறு மௌனமாய்ப் புறப்பட்டு ஓர் நாட் காலையில் ராஜ புதனத்திலுள்ள 'தீர்' நகரத்தின் தெற்கு வாயிலைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் முகத்தில் விசாரக் குறிகள் விளங்கின. சேனாதிபதியும் துக்க மேலிட்டதால் தலை குனிந்து போய்க் கொண்டிருந்தான். அவன் ஊரை விட்டு உயிருள்ள நாளும் விலகி யிருக்க வேண்டுமென்பது அவன் தந்தை செய்த தீர்மானம்.

'தீர்' மகாராஜனுக்கு மனைவி யிருவர். ஹிம்மத் சிங்கு மூத்த மனைவியின் குமாரன். இளைய மனைவி குஜா பாய்க்கு ஓர் பிள்ளை யுண்டு. மகாராஜன் இளையவளிடம் அன்புடையவனாதலின், அவள் இப்போது இளவரசு பட்டம் தன் மைந்தனுக்கே கர வேண்டுமென்று சொல்ல, இராஜனும் உடன் பட்டான். ஆகவே, பதினைந்து வயதுள்ள இளையாளின் மகன் தன் தந்தைக்குப் பின் தனக்கே பட்டம் கிடைக்குமென்று சந்தோஷித்து வரவும், மூத்த மனைவியின் புதல்வனை ஹிம்மத் சிங்கு தேசாந்தரம் போய்ப் புது ஜீவனோபாயம் தேடவுமாயிற்று.

ஹிம்மத் சிங்கோ சண்டையில் பின் வாங்காச் சூரன். மற் போரிலும், குத்துச் சண்டையிலும் தீரன். வேற்றரசர் மீது பன்முறை படையெடுத்து வெற்றியும் புகழும் பெற்ற வீரன். உறவினராலும், ஊராராலும் கொண்டாடப் பட்ட உத்தமன். அவன் அன்பின் வடிவம். அருளுக் கிருப்பிடம். தந்தை அவனிடம் அன்புடையானேனும், இளையாள் மோகத்தால் அவனை வெறுத்து ஊரைவிட்டு ஓட்ட நேர்ந்தது. அவன் தந்தையின் கட்டளையைத் தாங்கி ஊரைவிட்டுப் போன போது, அவனை என்றும் இணை பிரிந்தறியாத அவனுடைய ஆயிரம் 'காலாட்களும் அவன் பின் தொடர்ந்தார்கள்.

அவர்கள் துக்க மிகுதியால் ஒருவருக் கொருவர் பேசாது சென்றார்களென்று மேலே சொன்னோம். அவர்களிற் பலர் வாலிப ராதலால், அவர்களுடைய துக்கம் நெடு நேரம் நிற்கவில்லை. அவர்கள் போகப் போக, வெளி நாட்டில் பகைவரை யெதிர்த்து அவர்களா லடையும் வெற்றியையும்,

புகழையும் எண்ணி இன்புறலாயினர். வயது சென்றவர்கள் மட்டும் தாங்கள் பிறந்து வளர்ந்து பெரியவர்களான ஊரை இனிப் பார்க்கப் போவதில்லையே என்று ஏங்கினார்கள். ஹிம்மத் சிங்குக்கோ அன்புள்ள அன்னையையும், அழகின் மிக்க மனைவியையும் பிரிய மனம் வரவில்லை. ஆயினும் என் செய்வது?

அவர்கள் அன்று நெடுந்தூரம் நடந்து, ஒரு காட்டில் ஒரு அருவியின் அருகிலிறங்கித் தங்களுக்கு வேண்டிய ஆகாரங்களைச் சமைத்துச் சாப்பிட்டார்கள். அப்பால் அவர்கள் என்ன செய்வதென்பதை எண்ணுகையில், சிலர் திரும்பிச் சென்று 'தீர்' நகரத்தைத் தாக்குவோம்; நம்மைத் தேசாந்தரம் துரத்தியவரின் சூரத்தைக் காண்போம் என்றுரைத்தனர். ஹிம்மத் சிங்கு, 'என் நண்பர்களே! நாம் பிறந்து வளர்ந்த நகரை—நம் பெற்றோரும் உற்றோரும் இருக்கும் இடத்தை—'தீர்' என்னும் நமது அருமைத் தாயை—நாமே எதிர்த்து நாசஞ் செய்வது நன்றோ? நமது நெருங்கிய உறவினரையும், வேண்டிய நண்பர்களையும் அமர் செய்து கொன்று அழியாப் பழி தேடுவது அழகோ? சண்டை செய்ய வேண்டுமாயின் நமக்குப் பெரும் சத்துருக்களாயுள்ளவர்கள மீது செல்லலாமே' என்றான்.

இச் சொற்கள் அவர்களுடைய செவியிற் படவே, அவர்களின் உள்ளத்தில் ஓர்வித ஊக்கமும், உற்சாகமும் உண்டாயிற்று. அவர்கள் மீசையை முறுக்கித் தோள்களைத் தட்டித் தம் தலைவன் தம்மை எங்கு போகக் கூறினும் சம்மதமே என்றனர். பிறகு மூன்று நாள் பயணத்திலுள்ள 'பார்' என்னும் கோட்டை மீது செல்வதாகத் தீர்மான மாயிற்று. அத் தேசத்தரசன் கூர்ஜரத்தில் சண்டை செய்து கொண்டிருந்ததால் அவர்களுக்குப் பார் என்னும் கோட்டை எளிதில் வசமாகு மென்னும் எண்ணம் பிறந்தது. உடனே இராப் பகலாய் நடந்து மூன்றாம் நாட் காலையில் வானத்தையளாவிய ஓர் மலையையும், அம்மலையின் மீது அழகாய்க் கட்டியுள்ள கோட்டையையும் கண்டு அதிசயித்து அருகிற் சென்றார்கள். வழியில் எதிரிகள் எவரும் அவர்கள் கண்களுக்கு எதிர் படாதது அவர்களுடைய அதிர்ஷ்டந்தான். கோட்டையைச் சமீபித்த போதும் அவர்களுக்கு நற்காலமே. கோட்டைக் காவலாளிகளிற் பலர் அன்று வேட்டையாட வெளியிற் சென்றிருந்தார்கள். ஹிம்மத் சிங்கு தன் வீரரை ஓர் புறம் ஒளித்து, வெளியிற் போயிருந்த காவலாளரின் வரவுக்குக் காத்திருந்தான்.

பொழுது போயிற்று. காவலாளர் வந்தனர். கோட்டைக் கதவு திறக்கப்பட்டது. ஹிம்மத் சிங்கு அதுதான் ஏற்ற சமய மென்று ஒளித்திருந்த தன் சேனைக்கு உத்தரவு தரவே, அவர்கள் காவலாளர் மீது கடும்புலி போற் பாய்ந்து சின்ன பின்னஞ் செய்தனர். சிலர் மடிந்தனர், சிலர் காயம் பட்டனர். சிலர் குற்றுயிராயினர். சிலர் தப்பியோடினர். கோட்டைக்குள்ளிருந்தோர் தங்களுக்கு நேர்ந்த விபத்தை யெண்ணிக் கோட்டைக் கதவைச் சாற்றினர். ஹிம்மத் சிங்குக்கு இவ்வாறு நடக்கு மென்பது முன்பே தெரியும். அவன் உடனே

தன் ஆட்களிலிருவரைக் கோட்டைக்குப் பின்புறம் போய் மதிலேறி உட்புக உத்திரவு செய்தான். உள்ளே யிருந்தோர் யாவரும் பின்பக்கம் நடப்பது யாதென்று அறியார்கள். பின்சென்றோர் சந்தடி செய்யாது சுவர் ஏறிக் குதித்துக் கோட்டைக் கதவைத் திறந்து விடவே, ஹிம்மத் சிங்கும் அவன் சேனையும் எளிதில் உட்புகுந்து கோட்டையைத் தங்களுக் குரிய தாக்கினர்.

பார் என்னும் கோட்டை பரந்துயர்ந்து பனிமலையின் மீது பால் போலும் விளங்கியது. எத்திசையிலிருந்தும் எதிரிகள் நெருங்கா வண்ணம் மலையைச் சுற்றி மதிலரண் உண்டு. அங்கங்கே கொத்தளங்களும், கோபுரங்களு முண்டு. களஞ்சியங்களில் ஏராளமாக தானியங்களும், ஆயுத சாலையில் அளவற்ற ஆயுதங்களு மிருந்தன. ராஜ புத்திரர்க்கு எவ்வித குறையும் இல்லை. அவர்கள் வெளியிற் சென்று வேட்டையாடியும், அண்டை அயலூர்களி லிருந்து வேண்டியன கொணர்ந்தும் சுகமாகத் தங்கள் காலத்தைக் கழித்தார்கள். ஆனால், பனிதர்க்கு சுகம் என்பது நீடித்ததன்றே. கொஞ்ச நாளையில் வெளியிலிருந்து ஒரு பெரிய சேனை வந்து இவர்களை எதிர்த்தது. பல தினங்கள் வரை அதனோடு போர் புரிந்து முடிவில் வெற்றியுடன் கோட்டையைத் தம் வசமாக்கினர். எனினும், கோட்டைக்குள் நெடுநாள் இருப்பதற்கில்லை. யுத்தத்தால் அடைந்த கஷ்டங்கள் ஒருபுறமாக, இதனோடு ஹிம்மத் சிங்கின் தந்தை ஆபத்திலிருக்கிறா ரென்றும், உடனே வந்தாலொழிய அவரைக் காண்பது கூடா தென்றும் அவன் மனைவியிட மிருந்து ஒரு கடிதம் வந்தது. இக் காரணங்களால் அவன் கோட்டையை விட்டு விலக வேண்டியதாயிற்று.

ஹிம்மத்சிங்கு கோட்டையைக் கடந்து வெளியே போக எத்தனித்த நேரமோ, இடியும் மின்னலும் கூடிய இராவேளை. அச்சமயம் எதிர்த்தவரைத் துரத்தியோட்டி அந்நகரைக் கடந்து வடபால் நோக்கி விரைந்து சென்றார்கள். இவ்விதம் பிரயாணம் செய்து தங்களின் சுதேசத்தைக் கண்ட போது அவர்கள் அடைந்த ஆனந்தத்தை யாரே சொல்லவல்லார்! சிலர் கீழே விழுந்து தங்களின் ஜென்ம பூமியைச் சேவித்தார்கள். சிலர் மண்டியிட்டுக் கடவுளைத் துதி செய்தார்கள். சிலர் குதித்தார்கள். சிலர் கூத்தாடினார்கள். ஆதியில் தங்கள் தேசத்தை விட்டுப் போன போது இனித் திரும்பவும் காணப் போவதில்லை எனச் சிந்தை நொந்த இவர்கள் இவ்வாறு சந்தோஷித்தது இயல்புதானே.

அச்சமயத்தில் தெற்கு முகமாக ஒரு குதிரை வீரன் வந்து கூட்டத்தில் நுழைந்து ஹிம்மத் சிங்கைக்கண்டு களிகூர்ந்து படியிலிருந்த ஏதோ ஒன்றை எடுத்துக் கொடுத்தான். அது ஹிம்மத் சிங்கின் அருமை மனைவியும் ஆருயிர்க் காதலியுமாகிய அகலியாபாய் அனுப்பிய கடிதமாகும். பிரித்துப் பார்க்க அதில்.

'எனதன்புள்ள நாயகரே,

இக்கடிதம் கண்டவுடன் புறப்பட்டு வாரும். என்ன வேலை யிருப்பினும் தவற வேண்டாம். தங்கள் தந்தையார் குஜராபாயுடனும், அந்த அம்மை

யின் குமாரன் பப்பாலாலுடனும் வசந்த மண்டபம் செல்கின்றார். அவர் உயிர் பிழைப்பதருமை'

என்றிருந்தது. ஹிம்மத் சிங்கின் மனம் திடுக்கிட கடிதத்தை இரண்டாமுறை படித்தான். படித்துக் கையைக் கன்னத்திலூன்றி யோசித்தான். கடிதத்தின விபரம் தெரியவில்லை. மற்றும் ஒருமுறை வாசித்து வானத்தை நோக்கினான். பின்னும் ஒருமுறை படித்துப் பெருமூச்சு விட்டான். கடிதத்தில் குஜாபாயின் பேர் இருந்தமையால் அவள் ஏதோ சூது செய்திருக்க வேண்டுமென்று துணிந்தான். தன் தந்தை அவள் மோக வலையிற் சிக்கித் தவிப்பதை அவன் அறிவான். ஐயோ! அவள் அடிநாக்கில் நஞ்சும், வெளிநாக்கில் அமுதமுமுடைய படு நீலியாயிற்றே! இது வரையில் தன் அருமைத் தந்தையாரின் கதி யாதாயிற்றோ என்று கண்ணீர் சொரிந்தான்.

இன்று பங்குனிமாத ஆரம்பம். பொழுது போகும் வேளை. செடிகொடிகள் தளிர் நிறைந்து தையலார் போலும் இருந்தது. ஏரியின் நடுவில் வசந்த மண்டபமோ ஏழு நிலைகளுடன் அழகாய் விளங்கிற்று. சுற்றி மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய பல் வகைச் செடிகளும், ஏரியில் தாமரை, அல்லி முதலிய அளவற்ற கொடிகளும் நிரம்பப் பெற்றிருந்தன. நீர்ப் பறவைகள் சிறகை யுலர்த்தித் தத்தம் கூடுதேடி விரைந்து சென்றன. பல சாதி மீன்கள் நீரில் பொன்னைப் போலும் வெள்ளியைப் போலும் துலங்கித் துள்ளி விளையாடின. இளங்காற்று இனிது வீச, எங்கும் நறுமணம் கமழ்ந்தது.

தந்தையார் தன்னை ஊரினின்றும் துரத்தியதால் தன்னைக் கண்டு கோபிப்பாரென்றஞ்சி, ஹிம்மத் சிங்கு மறைந்து சென்றான். இருள் சூழ்ந்ததால் அவனை ஒருவரும் காணவில்லை. அவன் மாளிகையின் பின்புறம் போய் ஓர் பலகணி வழியாக உள்ளே பார்த்தான். உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவ்விளக்கின் வெளிச்சத்தாலும், சலவைக் கற்களின் ஒளியாலும் எங்கும் பால் போலத் திகழ்ந்தது. கூடத்தின் நடுவில் தங்கக் கிண்ணங்களில் நானாவித கறிகளிருந்தன. பொன் இலையில் முல்லை மலரைப் போலும் வெண்மையான அன்னம் பரிமாறியிருந்தது. அதன் எதிரில் வெள்ளிப் பீடத்தில் வீற்றிருந்த வேந்தனோ, முகத்தில் சிறு நகை விளங்க, அருகிலிருந்த தன் ஆசை நாயகியை உற்றுப் பார்ப்பதும், பரிகசிப்பதும், சிரிப்பதுமாயிருந்தான். இளைய குமாரன் பப்பாலால் பக்கத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். குஜாபாய் மயில் விசிறியால் தன் நாயகனுக்கு விசிறிக் கொண்டிருந்தாள். அவள் உயர்ந்த ஆடையணியால் தன்னை அலங்கரித்துக் கொண்டு, தன் அருகிலிருந்த விளக்கிலும் பிரகாசமாக விளங்கினாள். முழு மதி போன்ற அவள் முகத்தையும், உருண்டு திரண்ட அவயவங்களையும், பசுந்தளிர் போன்ற மேனியையும், சுருண்டு படிந்த நெற்றி மயிரையும் பார்த்த யாவர்தாம் மோகியார்? அன்று அவள் வானவில் வண்ணச் சேலையுடுத்து, செம்பட்டுக் கச்சணிந்து, அமாவாசை நாள் தோலுரித்துத் தோன்றும் அரவு போல அழகாயிருக்கிற அவள் மீது தன் அருமைத் தந்தையார் ஆசை கொண்டு அறிவை

இழந்தது ஆச்சரியமல்ல வென்றெண்ணினான்.

அப்பால் அவள் எழுந்து, தன் நாயகனுக்கு ஓர் முத்தம் தந்து, தன்னையால் ஷர்பத் செய்து வருவதாய்ச் சொல்லி அடுத்த அறைக்குள் நுழைந்தாள். அவள் பேச்சிலும் நடையிலும் ஏதோ சூதிருக்கலா மென்று எவரும் அறியலாகு மெனினும், இளையாள் மோகங்கொண்ட இராஜனோ கவனித்திலன். பப்பாலால் தன் அன்னை சென்ற வழியே அடிக்கடி திரும்பிப் பார்த்ததால், ஹிம்மத் சிங்குக்கு ஐயப்பாடதிகரித்தது. அவள் ஓர் பொற் கிண்ணத்தில் உடையில் ஒளித்து வைத்திருந்த ஏதோ ஒன்றை யெடுத்துப் போட்டு புருஷனிடம் கொண்டு வந்தாள். ஹிம்மத் சிங்குக்கு ஒரு நொடியில் உண்மை புலப்பட்டது. உடனே அவன், மாளிகையில் நுழைந்து எதிரில் நின்றான்.

தந்தைக்கோ அவனைக் கண்டதும் அடக்க முடியாத கோபம் எழுந்து வெளியிலிருந்த காவலாளரை யழைத்து அவர்கள் ஓடி வரவும், உள்ளே துணிந்து வந்தவனைப் பிடித்துக் கட்டுமபடி கட்டளை யிட்டார். திரும்ப அவர், 'அடா, முழுமூடா! துன்மார்க்கா! தந்தை சொற்கடந்த சண்டாளா! உன்னை நான் ஊரை விட்டுத் துரத்தி யிருந்தும், என் உத்திரவின்றித் திரும்பி வந்த தன்றி, யானும் என் காதலியும் தனித்திருக்கும் சமயத்தில் அச்சமின்றி அறைக்குள் புகுந்தாய். உன்னைப் போன்ற நன்றி கெட்டவனும், பழிக்கஞ்சாதவனும், பரம சண்டாளனும் ஒருவருமில்லை.' என்றார்.

ஹிம்மத் சிங்கோ முகம் சோர, கண்களில் நீர் வடிய, இரக்கக் குரலுடன் 'அன்புள்ள தந்தாய்! என் மீது கோபிக்காது நான் சொல்வதை ஆர அமரக் கேளுங்கள். நான் தங்களுடைய மூத்த குமாரனாதால் பட்டம பெற உரிமை யிருந்தும், தங்களின் கட்டளைப்படி ஊரை விட்டுப் போனேன். இன்று தங்கள் உத்திரவின்றி இங்கு வந்தது தங்களுக்கு அரிய வோர் ஆபத்து நேர்ந்ததென்றறிந்து அதனை நீக்கும் பொருட்டாகும். நான் செய்ந் நன்றி கெட்ட தீயன் அல்லேன். துரோகம் என்பதைச் சொற்பனத்திலும் அறியேன்' என்றான்.

தந்தை:—பயலே, உன்னைப்பெற்ற தந்தைக்கோ பஞ்சாங்கம் படிக்கின்றாய்? உன் கள்ளச் செய்கையை இங்குக் காட்டாதே.

ஹிம்மத்சிங்கு:—இளையாள் மோகத்தால் நன்றென்றும் தீதென்றும் அறியாத தங்களுக்கு என் செய்கை கள்ளமாகவே காட்டும். குமாரனிடம் மனம் மாறியபோது குணமும் மாறுந்தானே.

தந்தை:—உன்னைப் பெற்று வளர்த்த என்னைத் தூஷிப்பதுமன்றி, என் கண்ணினுண்மணியும் காதற் களஞ்சியமுமாகிய குஜாபாயின் மேலும் தோஷம் நினைக்கின்றாய், துரோகி.,

குஜாபாயின் சிவந்த முகம் வெளுத்தது. உள்ளம் பதறி உடல் நடுங்கிற்று. அவள் நிலைதவறிக் கீழே விழுந்தாள். 'தீர்' மகாராஜன் அவளைத் தாவி யணைத்துத் தூக்கி யுட்காருவித்து, மகனைப் பார்த்துப்

பல்லைக் கடித்து, புருவத்தை நெறித்து 'சண்டாளா, என் அரிய மனைவியைக் குறை கூறியதுமன்றிக் கொல்லவுமா வந்தாய்' என்றுரைத்து, ஓடி அவனைத் தாக்கினான். ஹிம்மத் சிங்கு இன்னும் தன் தந்தை உண்மையை யறியவில்லை யென்றோர்ந்து, தானே அங்கிருந்த கிண்ணத்தைக் கவிழ்க்க, அதனடியில் விஷமிருந்தது வெளியாயிற்று. உண்மையறியாது மனங் கொதித்து மகனைப் பலவாறு திட்டிய தந்தையின் நிலைமையை நாம் ஒருவாறு உணரலாம். இவ்வாபத்தினின்றும் தப்பித்துக் கொண்டதைக் கண்டு அவருக்கு ஆச்சரியமும், ஆனந்தமும் உண்டாயிற்று. உடனே தம்மனையாளிடமிருந்த ஆசை தொலைந்தது. அருவருப்பு குடி கொண்டது. தம் அடாத மகன் அருமை மகன் எனக் கண்டதும், அவனுக்குச் சூழ்ந்த கொடுமையையும், கூறிய நிந்தையையும் எண்ணி வருந்தினார். உள்ளம் பதைத்தார். தழுவி முத்தந்தந்தார்.

அப்பால் தம் மனைவியை நோக்கி, 'அடி கள்ளி! காதகி! என்னுடன் நயவார்த்தை களாடி மயக்கிய நாரீ! என்னை நஞ்சிட்டுக் கொல்லவந்த நாசகாலி! உதட்டில் அமிர்தமும், உள் நாக்கில் விஷமுங் கொண்ட துரோகி! உன் மோகக்கடலில் என்னை மூழ்க வைத்து, என் அறிவை மயக்கி, உணர்ச்சியைப் போக்கி, என் அருமைச் செல்வனை ஊரை விட்டோட்டிய பாவி' என்று வாய்க்கு வந்தவாறு வழங்கி, அவளையும் அவள் மகன் பப்பாலாலையும சிறை வைத்தார். பின்னர் தம மைந்தனை மற்றுமொரு முறை கட்டிக் கொண்டு, 'என் அருமை மகனே! ஆருயிர்ப் புதல்வனே! வேற்றரசர் படை யெடுத்த போதெல்லாம் அவர்களை எதிர்த்து வெற்றியும் புகழும் தந்த வீரனே! ஆட்டுத் தோலைப் போர்த்த புலிபோன்ற இவ்வரக்கியின் மையலால் ஊரை விட்டுத் துரத்திய இவ்விரும்பினேர் மனத்தினனுக்கும், கன்மனக் காதகனுக்கும் உற்ற சமயத்தில் ஓடிவந்து உயிரளித்த உத்தமனே! உன்னை நான் எவ்வாறு புகழ்வேன்? எங்ஙனம் துதிப்பேன்?' என்று சொல்லிப் பலகால் முத்தமிட்டுப் பூரித்தார்.

ஹிம்மத் சிங்கும் அவன் தந்தையாரும் மாளிகையை விட்டு ஊருக்குப் புறப்பட்டார்கள். மகாராசன் பரிவாரங்களும், ஹிம்மத் சிங்கின் காலாட் படைகளும் பின்தொடர்ந்தன. அன்பு எனும் கடலிற் குளித்து, வெற்றி எனும் ஆடையணிந்து, கீர்த்தி யென்னும் மலரைச்சூடி ஹிம்மத் சிங்கு ஊருக்குள் நுழைந்த போது அவனுக்கு உண்டாகிய ஆனந்தத்தை யார் சொல்லக் கூடும்? அவனைக் கண்டு ஊராரும் உறவினரும் அடைந்த சந்தோஷத்தை எவர் சொல்ல இயலும்?

இவர்கள் மகிழ்ச்சியினும் எண் மடங்கு மகிழ்ந்தவள் ஹிம்மத் சிங்கின் அழகிய மனைவி அகல்யாபாயாகும். தான் அந்தரங்கமாய்க் குஜாபாயிடம் வைத்த ஆட்கள் மூலம் அவள் செய்யப் போகும் சர்வநாசத்தை முன்னறிந்து தன் காதலனுக்குக் கடிதம் விடுத்துத் தன் மாமனாரான அரசரின் உயிரைக் காத்தமை போற்றற்பாலதன்றோ? ஹிம்மத்சிங்கு தன் ஆருயிர்க் காதலியைக் கட்டியணைத்து உளமுவந்தான். திரும்பி வந்த தனயனைத் தாயும் தழுவிக் கொண்டு ஆநந்திதை யானாள். நன் மனத்தினர் என்றும் நன்மையையே பெறுவர்.

அடிமைத் தொழில் எப்படி ஆரம்பமாயிற்று?

—ம. நா. ரா.

மானிட சமுதாயமானது வளர்ச்சியடைந்து கொண்டு வந்த ஆரம்ப சமயத்தில், தங்களுடைய ஜீவனோபாயத்திற்காக ஜனங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போய்க் கொண்டே இராமல், ஓரிடத்திலேயே தங்கலானார்கள். இதுதான் விவசாய காலத்தின் ஆரம்பம். ஆரம்பத்தில், ஒரு கூட்டத்தையோ, ஒரு சமுதாயத்தையோ சேர்ந்த அத்தனை பேரும் நிலத்தைப் பண்படுத்திச் சாகுபடி செய்து அது மூலமாக எல்லோரும் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். அப்பொழுது எல்லாருக்கும் ஒரேவிதமான ஆகாரங்களும் மற்ற வாழ்க்கை வசதிகளும் கிடைத்து வந்தன. பொதுவுடைமைச் சமுதாயமாகவே, அந்தக் காலத்துச் சமுதாயம் நடந்து கொண்டு வந்ததென்று சொல்லலாம். பின்னர், விவசாயக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன, இதிலிருந்து, நிலத்திலும் தனிச் சொத்துரிமை ஏற்பட்டது. எவனொருவன் விவசாயக் கருவிகளைச் செய்து கொள்கிறானோ, அவன் அந்தக் கருவிகளுக்குச் சொந்தக்காரனாகி, அந்தக் கருவிகளின் துணை கொண்டு சாகுபடி செய்யப்பட்ட நிலத்திற்கும் சொந்தக்காரனாகி விட்டான். இதன் பிறகு, சமுதாயமானது, புதியதொரு அஸ்திவாரத்தின்மீது அமையத் தொடங்கியது. அதாவது முதலாளித்துவ சமுதாய அமைப்பின் ஆரம்பம் இங்கிருந்துதான்.

தனிச் சொத்துரிமையை ஆதாரமாகக் கொண்டு, பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கின காலத்திலிருந்து, தனக்கோ, தன்னுடைய சமுதாயத்திற்கோ தேவையான பொருள்கள் போக, அதிகமான பொருள்களை மனிதன் உற்பத்தி செய்து விநியோகிக்கத் தொடங்கினான். இப்படி அதிகமான பொருள்களை உற்பத்தி செய்கிறபோது, ஒருவனால் முடிகிறதில்லை. எனவே, இவன், மற்றவர்களை வேலைக்கமர்த்திக் கொள்கிறான். இங்ஙனம் அமர்த்திக் கொள்ளப்படுகிறவர்களுக்கு, அவர்கள் உயிர் வாழ்வதற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு ஆகாரவகைகள் முதலியவைகளைக் கொடுத்து அவர்களிடமிருந்து வேலை வாங்குகிறான். இவர்கள்தான் அடிமைகள். இவர்களை வேலைக்கமர்த்திக் கொள்கிறானே அவனுடைய தனிப்பட்ட சொத்தாகவே இவர்கள் ஆகிவிடுகிறார்கள். இவர்களை விற்கவும் வாங்கவும் இவனுக்கு உரிமையுண்டு. இந்த எஜமானன், தன் தொழில் அபிவிருத்தியாக

வேண்டுமென்ற நோக்கங் கொண்டு தன்னுடைய அடிமைகள் எண்ணிக்யில் அதிகமாக வேண்டு மென்று எதிர்பார்க்கிறான். ஏனென்றால், இந்த அடிமைகளின் வயிற்றிலே பிறக்கிற அடிமைகளும், இந்த எஜமானனுக்குரிய சொந்தப் பொருள்களாகி விடுகின்றன. எப்படி ஆடு மாடுகள் குட்டி போட்டால் அவை, எஜமானனுக்குச் சொந்தமாவது போல.

உலகத்தின் எந்தப் பாகத்தில் இந்த அடிமைத் தொழில் இருந்ததோ இல்லையோ, இந்தியாவில் இது சிறிது கூட இல்லையென்று சிலர் சாதிக்கிறார்கள். அப்படியில்லை. ஜன சமுதாய வளர்ச்சியில், அடிமைத் தொழில் ஒரு முக்கியமான அம்சமாயிருந்திருக்கிறது. தேவையை முன்னிட்டே இது தோன்றியிருக்கிறது. அப்படியிருக்க, இந்தியாவிலே மட்டும் இந்த அடிமைத் தொழில் இல்லையென்று சொல்வது, ஜன சமுதாய வளர்ச்சியில் இந்தியா சம்பந்தப்படவில்லையென்று சொல்வது போலாகும். உண்மையென்னவென்றால், ஐரோப்பாவிலும் மேற்கு ஆசிய நாடுகளிலும் எந்த உருவத்தில் அடிமைத் தொழில் இருந்ததோ அந்த உருவத்தில் இந்தியாவில் இல்லை யென்று வேண்டுமானால் சொல்லலாம். இந்தியர்களின் புராதன புராண இதிகாசங்களை ஆராய்ந்து பார்த்தாலே, இந்தியாவில் அடிமைத் தொழில் இருந்து வந்த தென்பது நன்கு தெரியவரும். இந்தியாவில் தோன்றியுள்ள ஜாதி வகைகளே இதற்குச் சாட்சியாகும். யுத்தத்திலே கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் அடிமைகளாக்கப்பட்டார்கள். அது மட்டுமல்ல; எந்த ஒரு நாடு ஜெயிக்கப்பட்டதோ அந்த நாட்டிலுள்ள மக்கள் அனைவருமே அடிமைகளாக்கப்பட்டார்கள். இந்தியாவில் ஆரியர்கள், இப்படித்தான் செய்தார்களென்று தெரிகிறது. தாசர்கள்–அதாவது மற்றவர்களுக்குத் தொண்டு செய்கிறவர்கள் என்றாலே அடிமைகள் என்றுதானே அர்த்தம். தீண்டாதார் என்ற ஒரு ஜாதியார் இருப்பதும், தீண்டாமை என்ற பழக்கமும் அடிமைச் சின்னங்கள் தானே.

ஆடம்பரப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு, இந்த அடிமைகள் பெரும்பாலும் முற்காலங்களில் உபயோகிக்கப்பட்டிருக்கிறார்கள். கோயில்கள், பெரிய கட்டிடங்கள் முதலியன கட்டிய தெல்லாம் இந்த அடிமைகளைக் கொண்டுதான். அடிமைகளின் உழைப்புக்கு மதிப்பே இல்லையாதலினால், அதாவது அவர்களுக்குக் கூலி கொடுக்க வேண்டிய அவசியமில்லையாதலினால், இந்த அடிமைகளின் சொந்தக்காரன், இவர்களைத் தன்னிஷ்டப்படி உபயோகப்படுத்தினான். எனவே, இந்த அடிமைகளின் உழைப்பினால், தனியாக ஒரு சோம்பேறி வர்க்கம் ஏற்பட்டது. எப்படியென்றால், உதாரணமாக, அடிமைகளை வைத்துக் கொண்டிருக்கிறவன், தான் செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம், அந்த அடிமைகளைக் கொண்டு செய்து கொள்கிறான். இவனுடைய தேவைகளையெல்லாம் அந்த அடிமைகள் பூர்த்தி செய்து வைக்கிறார்கள். எனவே, காலக்கிரமத்தில் இவன் எவ்வித வேலையும் செய்யத் தேவையில்லாமல் போகிறது. சும்மாயிருந்தபடியே, இவனுடைய வாழ்க்கை சர்வானுகூலமாக நடக்கிறது. இப்படிப் பட்டவர்களெல்

லாரும் ஒன்று சேர்ந்து ஒரு தனி ஜாதியாக அமைகிறார்கள். இவர்கள் ஆடம்பரமாக வாழ்ந்து அது மூலமாக, சமுதாயத்தில் தங்களுடைய உயர்ந்த அந்தஸ்தை ஸ்திரப்படுத்திக் கொள்கிறார்கள். இவர்களுடைய தேவைக்காக ஆடம்பரப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால், எல்லா ஜனங்களுடைய வாழ்க்கைக்கும் எவை எவை தேவையாயிருக்கின்றனவோ, அவை உற்பத்தி செய்யப்படுவது குறைபலாயிற்று. சிறப்பாக விவசாயத்திற்கு அதே கதி ஏற்பட்டது. ஜன சமுதாயத்தின் பொருளாதாரத் திட்டத்தில் விவசாயம் முக்கியமான அம்சமாயிருந்த அந்தக் காலத்தில், விவசாய உற்பத்திக்குக் குறைவு ஏற்பட்டதால் அந்தச் சமுதாயத்தின் அஸ்திவாரமே அசையத் தொடங்கியது. அடிமைகளைக் கொண்டு பொருள்களை உற்பத்தி செய்கிற வழக்கம் சிதறுண்டு போய் விட்டது. இந்தச் சமுதாயச் சீர்குலைவு, பாபிலோன், அஸ்ஸிரியா, எகிப்து, கிரீஸ், ரோம் முதலிய நாடுகளில் பட்டவர்த்தனமாகத் தெரிந்தது.

உலகத்தின் விஸ்தீரணம்

நீர்ப் பரப்பு	-	139,440,000 சதுர மைல்
நிலப் பரப்பு	-	57,510,000 ,,
மொத்தம்		196,950,000

மன நிலையும்—உறுதிப்பாடும்

—சேவு. பழனியப்பன்

மனமே! பெருமையும், வாழ்வும் கிட்டிற்றென்று, இறுமாப் புறாதே. கல்வி, கேள்வி, நற்கீர்த்தி, நல்லறிவு, மேம்பாடுடைமை, இவைகளே வாழ்விலும், தாழ்விலும், புறத்திலும், அகத்திலும், அழியாப் புகழுடையன. தன்னம்பிக்கையுடன் அடக்கமாய் அறிந்து நட.

பிறர் செய்த குற்றம் எவ்வளவு பெரிதாயினும் மன்னித்திடு.

மன்னிக்க முடியாப் பெரும் பிழையாயின், பரம் பொருளிடத்து முறையிடு.

துன்பத்தை நினைந்து, நினைந்து துயருற்று மாளாதே. இன்பத்தை எண்ணி, எண்ணி இறுமாந்து பின் இடருற்று ஏங்காதே.

இன்பமும், துன்பமும் வாழ்க்கையின் இரு கூறுகள். ஒன்றை ஒன்று தாங்கி நிற்பன. துன்பம் கொல்லும்; இன்பம் வாழ்விக்கும்.

துன்பம் வேண்டாம், வேண்டாம் என்று வருந்தி, அது காரணமாக அதிகத் துன்பத்தை வருவித்துக் கொள்ளாதே.

துன்பமே இன்பத்தின் பிறப்பிடம்.

மழை வருவதை, இடி மின்னல் காட்டுவது போல், இன்பம் வருவதைத் துன்பம் காட்டுகிறது.

துன்பத்தையே ஏணியாகக் கொண்டு, இன்பமெனும் சிகரத்தை அடைதலே அறிவுடைமை.

துன்பத்தை மனவுறுதி கொண்டு மாய்த்து இன்பத்தை நாடி இனிது வாழு.

சுதந்திரத்தின் தேவைகள் யாவை?

ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்

——வெ. சா.

பிரசங்கம்—4

1914ம் வருஷத்து ஐரோப்பிய யுத்தத்தின் காரணங்களென்ன?

இன்றைய உலகத்தின் ஜனத் தொகை ஏறக்குறைய 150 கோடி. இந்தத் தொகையினரில் நான்கில் ஒரு பங்கினர் சீனவில் வசிக்கின்றனர். அதாவது நாலில் ஒருவர் சீனக்காரர் என்பது அர்த்தமாகிறது. ஐரோப்பாவிலுள்ள வெள்ளை ஜாதியினரின் மொத்த ஜனத்தொகை ஏறக்குறைய 40 கோடி. இந்த வெள்ளை நிறத்தவர்தான் இப்பொழுது உலகத்தில் சுபிட்சமாயிருக்கின்றனர் என்று சொல்லலாம். இந்த வெள்ளை நிறத்தவரில் நான்கு ஜாதியினர் அடங்கி யிருக்கின்றனர். அதாவது, ஐரோப்பாவின் மத்திய பாகத்திலும் வட பாகத்திலும் வசிக்கும் ட்யூடானிய ஜாதியினர்; ஐரோப்பாவின் கிழக்குப் பாகத்தில் வசிக்கும் ஸ்லாவிய ஜாதியினர்; ஐரோப்பாவின் மேற்குப் பாகத்தில் வசிக்கும் சாக்ஸன் ஜாதியார்; ஐரோப்பாவின் தெற்குப் பாகத்தில் வசிக்கும் லத்தீன் ஜாதியினர்; ஆக நான்கு ஜாதியினர். இவர்களில் ட்யூடானியர்கள், ஜெர்மனி, ஆஸ்திரியா, ஸ்வீடன், நார்வே, ஹாலந்து, டென்மார்க் ஆகிய நாடுகளில் வசிக்கின்றனர். ஸ்லாவியர்கள், ருஷ்யா, ஜெக்கோ—ஸ்லோவேகியா, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளில் வசிக்கின்றனர். சாக்ஸன் ஜாதியார், இங்கிலாந்து அமெரிக்கா ஆகிய நாடுகளில் வசிக்கிறார்கள். லத்தீனியர்கள், பிரான்ஸ், இத்தலி, ஸ்பெயின், போர்த்துகல் முதலிய ஐரோப்பிய நாடுகளிலும், தென்னமெரிக்காவிலும் வசிக்கின்றனர் இந்த வெள்ளை ஜாதியினர் அத்தனை பேருக்கும் தேசிய உணர்ச்சி மிகுந்ததனுல் தான், இவர்கள் பல நாடுகளையும் கைப்பற்றி அவற்றை ஆளத் தொடங்கினர். இந்த நான்கு வகை ஜாதியினருள்ளும், சாக்ஸன் ஜாதியினர்தான், பூலோகத்தில் அதிகமான பிரதேசத்தைக் கைப்பற்றி ஆண்டு வருகின்றனர். இந்த சாக்ஸன் ஜாதி, ஐரோப்பாவில் தோன்றிய போதிலும், அந்த ஐரோப்பா கண்டத்தில் இதன் ஆதிக்கத்துக்குட்பட்டிருக்கும் இடம் மிகச் சொற்பந்தான். அதாவது, இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, ஐர்லாந்து என்ற பிரிட்டிஷ் தீவுப் பிரதேசந்தான். எப்படி பசிபிக் மகா சமுத்திரத்தில் ஜப்பான் ஒரு சிறிய தீவாயிருந்து கொண்டு

அதிக ஆதிக்கம் செலுத்துகிறதோ அதைப் போலவே, அத்லாந்திக் மகா சமுத்திரத்திலும், இந்தப் பிரிட்டிஷ் தீவு அதிகமான ஆதிக்கஞ் செலுத்துகிறது. சாக்ஸன் ஜாதியினர், தங்களுடைய ஆதிக்கத்தை, வட அமெரிக்காவிலும், கிழக்கில் நியூஜீலந்து, ஆஸ்திரேலியா முதலிய பிரதேசங்களிலும், தெற்கில் ஆப்ரிக்கா முதலிய பிரதேசங்களிலும் பரப்பிக் கொண்டு, அதிகமான செல்வத்தையும் செல்வாக்கையும் அடைந்து விட்டனர். 1914ம் வருஷத்து ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னர், ட்யூடானியர்களும், ஸ்லாவியர்களுமே வலுவுள்ள ஜாதியினரா யிருந்தனர். ட்யூடானியர்கள், தங்களுடைய அறிவினாலும், திறமையினாலும் சிதறிப்போயிருந்த சுமார் இருபது நாடுகளை ஒன்றாக்கி, ஜெர்மானிய ஏகாதிபத்திய மொன்றைச் சிருஷ்டி செய்தனர். ஆரம்பத்தில் விவசாய நாடாக இருந்த ஜெர்மனியை, ஒரு கைத்தொழில் நாடாக ஆக்க அதன் மூலமாகத் தங்கள் ராணுவத்தையும் கடற்படையையும் அபிவிருத்தி செய்து கொண்டனர்.

ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னர், ஐரோப்பாவிலுள்ள எல்லா நாடுகளுக்கும ஏகாதிபத்திய விஷம் ஏறியிருந்தது. ஏகாதிபத்தியம் என்றால் என்ன? ஒரு நாடு, தனது அரசியல் அதிகார பலத்தைக் கொண்டு மற்ற நாடுகளை ஆக்ரமிக்கும் கொள்கையே ஏகாதிபத்தியம் என்ற பெயரால் அழைக்கப் படுகிறது. இதனையே, சீன பாஷையில் 'நீண்டதூர ஆக்ரமிப்பு' என்று சொல்வார்கள். ஐரோப்பிய ஜாதியினர் அத்தனை பெருக்கும் இந்த எண்ணம் குடி கொண்டிருந்ததனாலேயே, அடிக்கடி சண்டைகள் உண்டாகிக் கொண்டிருந்தன. பத்து வருஷங்களுக்கொரு முறை ஒரு சிறிய சண்டையும், ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறை பெரிய சண்டை யொன்றும் முறையே ஏற்பட்டுக் கொண்டு வந்தன. இவற்றில் மிகப்பெரிய சண்டையானது, 1914ம் வருஷத்து ஐரோப்பிய யுத்தம். உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் யுத்தத்திலே கொண்டு வந்து மூட்டி வைத்ததால், இதற்கு உலக யுத்தம் என்று பெயர் வந்தது. இந்த யுத்தத்திற்கு முக்கியமான சில காரணங்களைச் சொல்லலாம்.

1. சமுத்திரத்தில் தங்களுக்கே ஆதிக்கம் இருக்க வேண்டுமென்று சாக்ஸன் ஜாதியினருக்கும் ட்யூடானிய ஜாதியினருக்கும் ஏற்பட்ட போட்டி. ஜெர்மனி தன் கடற்படையையை விருத்தி செய்து கொண்டு போனது, கிரேட் பிரிட்டனுக்குப் பிடிக்கவில்லை. இதனால் ஜெர்மனியை நசுக்க இது முயன்றது. இந்தக் கடல் ஆதிக்கத்தை யார் வகிப்பது என்பதன் காரணமாகவே, ஐரோப்பிய யுத்தம் மூண்டது.

2. ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றும் தனக்கு அதிகமான நாடுகள் வேண்டுமென ஆசை கொண்டது இரண்டாவது காரணம். ஐரோப்பாவின் கிழக்குப் பாகத்தில் துருக்கி என்ற பலஹீனமான நாடு ஒன்று இருந்தது. சென்ற நூறு வருஷமாக, இதற்கு 'ஐரோப்பாவின் நோயாளி' என்று பெயர். ஐரோப்பிய வல்லரசுகள் இதனைப் பங்கு போட்டுக்

கொள்ள விரும்பின. இதனால் ஐரோப்பிய யுத்தம் மூண்டது.

சென்ற ஐரோப்பிய யுத்தம், உலக சரித்திரத்திலேயே மிகவும் பயங்கரமான யுத்தம் என்று சொல்லலாம். நான்கு அல்லது ஐந்து கோடி ஜனங்கள், சுமார் நான்கு வருஷ காலம் சதா ஆயுதபாணிகளாகவே இருந்தார்கள். நான்கு வருஷ காலம் யுத்தம் நடந்த பிறகு கூட, வெற்றியடைந்தவர் யார், தோல்வி யடைந்தவர் யார் என்று நிர்ணயித்துச் சொல்ல முடியவில்லை. யுத்தத்தின் முதல் இரண்டு வருஷ காலம் ஜெர்மனிக்கும் ஆஸ்திரியாவுக்கும் வெற்றி ஏற்படும் போலிருந்தது. பிரிட்டிஷாருக்கு ஒருவித அச்சம் ஏற்பட்டது. எனவே, கிரேட் பிரிட்டன், சுய ஜாதி அபிமானத்தை முன்னிட்டு, அமெரிக்காவை யுத்தத்தில் இறங்குமாறு தூண்டியது. அமெரிக்காவும், தன் சுய ஜாதியைச் சேர்ந்த இங்கிலாந்துக்கு எவ்வித சேதமும் ஏற்படக் கூடாதென்று கருதி, யுத்தத்தில் இறங்கியது. அது மட்டுமல்லாமல், நடு நிலைமை வகித்த எல்லா நாடுகளையும், தன்னோடு சேர்ந்து கொண்டு நேசக்கட்சியாருக்கு விரோதமாகப் போர் புரியும்படி அமெரிக்கா தூண்டியது.

யுத்தத்தின் போது, பிரஸிடெண்ட் வில்ஸன், மகத்தானதொரு வாக்கியத்தை அடிக்கடி சொல்லிக் கொண்டு வந்தார். அதுதான், 'அந்தந்த ஜாதியினருக்கும் சுய நிர்ணய உரிமை உண்டு' என்பது. ஜெர்மனியானது, தனது ஆயுத பலத்தின் துணை கொண்டு, சிறிய நாடுகளை நசுக்க முற்பட்டிருப்பதைக் கண்ட வில்ஸன், எல்லாச் சிறிய நாடுகளும் சுய நிர்ணய உரிமை பெற வேண்டுமென்று கூறினார். உலகத்திலுள்ள அனைவரும் இதனை ஆதரித்தனர். இதனால் சிறிய தேசத்தினர் பலரும், நேசக் கட்சியினருக்கு உதவி செய்தனர். சீனாவும் அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில், யுத்தத்தில் இறங்கியது. சீனா பெரிய ராணுவத்தை அனுப்பி உதவி செய்யாவிட்டாலும், லட்சக் கணக்கான தொழிலாளர்களை அனுப்பி சேனைக்கு உதவி புரியச் செய்தது. உயர்ந்த லட்சியத்துடனேயே நேசக் கட்சியினர், யுத்தத்தில் இறங்கியிருக்கின்றனர் என்ற எண்ணத்துடனேயே, உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் நேசக் கட்சியினருக்கு உதவி புரிந்தன. தவிர, உலகத்தில் நிரந்தரமான சமாதானத்தை நிலை நிறுத்த வேண்டுமென்று பதினான்கு பாயிண்டுகளைக் கிளத்தினார். இவற்றில் ஒன்று, ஒவ்வொரு நாடும் சுய நிர்ணய உரிமை பெற வேண்டுமென்பது. வெற்றியா, தோல்வியா என்று நிர்ணயிக்கப் படாத நிலையில், இங்கிலாந்தும், பிரான்ஸும் அப்படியே இந்த பதினான்கு பாயிண்டுகளையும் ஏற்றுக் கொண்டன. ஆனால், நேசக் கட்சியினருக்கு வெற்றியேற்பட்டு, சமாதான மகாநாடு கூடினவுடனே, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தலி முதலிய நாடுகள், தங்களுடைய ஏகாதிபத்தியக் கொள்கைக்கு இந்தச் சுய நிர்ணய உரிமைக் கொள்கை முரணாயிருக்குமே யென்று யோசிக்கலாயின. இதனால், சமாதான மகாநாட்டின் போது, வில்ஸனுடைய பதினான்கு தத்துவங்களுக்கும் வேறு வேறு வியாக்கியானஞ் செய்யலாயின. விளைவு என்ன? அநீதமான ஒரு சமாதான உடன்படிக்கை. சிறிய

நாடுகள், ஏற்கனவே சொல்லப்பட்டபடி சுய நிர்ணய உரிமையைப் பெறவில்லை. இதனால் என்ன தெரிகிறதென்றால், பலமுள்ள நாடுகள், பூலோகத்தின் பெரும் பாகத்தை ஆக்ரமித்துக் கொண்டிருப்பது மன்றி, மற்ற நாடுகளின் உரிமைகளையும் தங்களுக்குச் சுவாதீனப்படுத்திக் கொண்டிருக்கின்றன. தாங்கள் இந்த நிலைமையிலேயே சாசுவதமாக இருக்க வேண்டு மென்பதற்காகவும், சிறிய நாடுகள் மறுபடியும் தலையெடுக்கக் கூடாதென்பதற்காகவும், இந்த வல்லரசுகள், தேசியம் என்பது குறுகிய மனப்பான்மையைக் காட்டுகிறதென்றும், சர்வ சகோதரத்துவமே சிறந்ததென்றும் சொல்ல முற்பட்டன. உண்மையில், இந்தச் சர்வ தேச சகோதரத்துவமானது, ஏகாதிபத்தியத்தின் மற்றொரு உருவமாகும்.

நான்கு வருஷ காலம் யுத்தம் நடைபெற்ற போதிலும், ஏகாதிபத்தியக் கொள்கை யென்னவோ ஒழியவில்லை. ஏனென்றால், மேற்படி யுத்தமானது ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்குமோ, காட்டு மிராண்டித்தனத்திற்கும் அதருமத்திற்குமோ ஏற்பட்ட யுத்தமாயில்லை. ஓர் ஏகாதிபத்தியத்திற்கும் மற்றோர் ஏகாதிபத்தியத்திற்கும் ஏற்பட்ட யுத்தமாகவே இருந்தது. முடிவு என்ன? ஓர் ஏகாதிபத்தியம் போனால் மற்றோர் ஏகாதிபத்தியம் நிலைபெற்றது. ஆனால் மேற்படி ஐரோப்பிய யுத்தத்தின் விளைவாக, மானிட சமூகத்தின் இருதயத்தில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. அது தான் ருஷ்யப் புரட்சி. ருஷ்யப் புரட்சியானது, 1905ம் வருஷத்திலேயே தொடங்கி விட்டது. ஆனால் அப்பொழுது அது வெற்றி பெறவில்லை. ஐரோப்பிய யுத்தத்தின் போதே, அது வெற்றி பெற்றது. இந்த ருஷ்யப் புரட்சிக்குக் காரணம் என்ன? யுத்தத்தினால் ஏற்பட்ட அநுபவங்களின் பயனாக, ஜனங்களுக்கு ஒரு விழிப்பு ஏற்பட்டதே யாகும். முதலில் நேச தேசங்களோடு ஜெர்மனியை எதிர்த்து நின்ற ருஷ்யா, பிறகு யுத்தத்தினின்று விலகிக் கொண்டு ஜெர்மனியுடன் தனியாகச் சமாதானம் செய்து கொண்டு விட்டது.

பதினேந்து கோடி ருஷ்யர்கள், வெள்ளை ஜாதியைச் சேர்ந்தவராயிருந்த போதிலும், மற்ற வெள்ளை ஜாதியைச் சேர்ந்த வரினின்று விலகிக் கொண்டு விட்டனர். ஏனென்றால் மற்ற வெள்ளை ஜாதியினருடைய ஏகாதிபத்தியக் கொள்கை இவர்களுக்குப் பிடிக்கவில்லை. இதனால் இவர்கள், ஆசியா கண்டத்திலுள்ள பல ஹீனமான, சிறிய ஜாதியினருடன் சேர்ந்து கொண்டு, மற்ற வெள்ளை இனத்தவருடன் போராடுகின்றனர். இதனால், பிறரை அடக்கி யாளும் சுபாவமுடைய வெள்ளை ஜாதியினர் மொத்தம் இருபத்தைந்து கோடி பேரே இருக்கின்றனர். ஆனால், இவர்கள், மற்றவர்களை அடக்கியாளப் பல விதமான முறைகளைக் கையாளுகிறார்கள். இனி மனித சமூகமானது, இரண்டு பிரிவாகப் பிரிந்துவிடும் அதாவது ஒரு பிரிவில் 125 கோடி பேரும், மற்றொரு பிரிவில் 25 கோடி பேரும் இருப்பர். பின்னவர், சிறுபான்மையினராயிருந்த போதிலும், இவர்களுடைய அரசியல் பலமும் பொருளாதார பலமும் மிக அதிகமாயிருக்கின்

றன. இந்த இரண்டு பலங்களையும் கொண்டே, இவர்கள் மற்றவர்களை நசுக்கப் பார்க்கிறார்கள். இவர்கள், தங்கள் அரசியல் பலம் குறைந்து போயிருக்கிற தென்று தெரிந்தால், பொருளாதார பலத்தை உபயோகிக்கிறார்கள். பொருளாதார பலம் குறைகிறபோது, அரசியல் பலத்தை உபயோகிக்கிறார்கள். மனிதனுக்கு, எப்படி இரண்டு கைகளும் மாறி மாறி உபயோகப் படுகின்றனவோ, அதைப் போல், இந்தச் சிறுபான்மையினர், தங்கள் இரண்டு பலங்களையும் மாறி மாறி உபயோகிக்கின்றனர். ஆனால் எல்லாம் மனிதனுடைய விருப்பப்படியே நடை பெறுகிறதில்லை யல்லவா? ருஷ்யாவில் ஸ்லாவிய ஜாதியினர் ஏகாதி பத்தியத்திற்கும் முதலாளித்துவத் திற்கும் விரோதமாகப் புரட்சி செய்தனர். ஒடுக்கப் பட்ட ஜாதியினருக்குச் சுய நிர்ணய உரிமை கொடுக்க வேண்டு மென்று லெனின் தைரியமாகச் சொன்னதனாலேயே அவனை எல்லோரும் தூஷிக்கத் தலைப் பட்டனர்.

இப்பொழுது சீனர்களாகிய நமது கடமை யென்ன? இழந்து போன சீனாவின் தேசியத்தை மறுபடியும் புதுப்பிக்க வேண்டும். நாற்பது கோடி மக்களாகிய நாம் மனித சமூகத்திற்கு இழைக்கப்பட்டு வரும் தீங்கை எதிர்த்துப் போராட வேண்டும். இந்த எண்ணம் நமக்கு இருக்கிற தென்று தெரிந்துதான், மற்ற வல்லரசுகள், உலக சகோதரத்துவ எண்ணத்தைப் பரப்பி வருகின்றன. மானிட சமூகத்தின் எண்ணமானது விரிந்து வருகிற தென்றும், இந்த நிலையில் தேசியமாகிய குறுகிய பாதையில் செல்லக் கூடா தென்றும் இவை உபதேசம் செய்கின்றன. சீன இளைஞர்கள் சிலர் இந்த உபதேசத்தில் மயங்கிப் போய் தேசியத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். ஒடுக்கப்பட்ட ஜாதியினர், சர்வ சகோதரத்துவத்தைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமேயில்லை. நாம், முதலில் தேசிய சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் அடைய முயற்சி செய்ய வேண்டும். பிறகு, இந்தச் சர்வ சகோதரத்துவத்தைப் பற்றிப் பேசலாம். நம்மிடத்திலே தேசிய உணர்ச்சி வலுத்திருந்தால்தான், சர்வ சகோதரத்துவ உணர்ச்சியும் வலுத்து நிற்கும்.

சீன சரித்திரத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால், சீனர்களாகிய நாமும் ஏகாதி பத்திய வழியையே பின்பற்றி வந்திருக்கிறோம் என்பது நன்கு தெரியும். நம்முடைய முன்னோர்கள், பல ஹீனமுள்ள தேசங்களை, தங்களுடைய அரசியல் பலத்தைக் கொண்டு நசுக்கி வந்தார்கள். ஆனால் அந்தக் காலத்தில் பொருளாதார சக்திகள் அவ்வளவு வலுவாயில்லை. அதனால், நாம் அப்பொழுது நமது பொருளாதார பலத்தைக் கொண்டு யாரையும் நசுக்கவில்லை. இன்னும், ஐரோப்பாவின் கலை ஞானத்தையும் சீனாவின் கலை ஞானத்தையும் ஒத்திட்டுப் பாருங்கள். ஐரோப்பியக் கலை ஞானத்தின் உன்னதமான காலம் ரோமா புரியும், கிரீஸும் உயர்ந்த ஸ்திதியிருந்த காலத்தில்தான். ரோமாபுரி உன்னத ஸ்திதியிலிருந்த காலத்தில், சீனாவில் ஹான் ஜாதியினர் மிகச் செல்வாக்குடன் ஆட்சி புரிந்து வந்தனர். அப்பொழுது சீனாவில் பிரபல ஞானிகள் பலர் தோன்றி, ஏகாதி

பத்திய எண்ணங்களை எதிர்த்து வந்திருக்கின்றனர்.

சீனாவில் சூங் வம்சத்தினர் ஆண்டு கொண்டிருந்த போது, மற்றவர்களைத் தாக்குகிற நிலைமை போய் மற்றவர்களால் தாக்கப்படும் நிலைமை ஏற்பட்டது. மிங் வம்சத்தினர், ஆட்சி முறையை ஏற்றுக் கொண்ட பிறகு, சீனா மீண்டும் தலையெடுக்க ஆரம்பித்தது. தெற்குச் சீனக்கடலில் இருந்த சிறிய நாடுகள், சீனாவுக்கு அடங்கி யிருப்பதாக உறுதி கொடுத்து அப்படியே காணிக்கை செலுத்தி வந்தன. சீனாவுடன் சேர்ந்து வாழ்வது பெரிய கௌரவமாக இவை நினைத்தன. ஆனால் இன்றைய வல்லரசுகள் இந்த மாதிரியான புகழை மற்ற நாடுகளிலிருந்து ஏற்றுக் கொண்டிருக்கின்றனவா! பிலிப்பைன் தீவு விஷயத்தில், அமெரிக்கா செலுத்திக் கொண்டு வரும் ஆதிக்கம் ஒன்றே சரியான உதாரணமாகும். இந்தியாவில் நேபாள தேசத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த ராஜ்யத்திற்கு பிரிட்டிஷார் பிரதி வருஷமும் சன்மானம் அனுப்பிக் கொண்டு வருகின்றனர். ஏனென்றால் நேபாள தேச வாசிகளாகிய கூர்க்கர்களைக் கண்டு யாருக்குமே அச்சம் ஏற்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் இருந்தும், இந்த நேபாள ராஜ்யத்தினர், சீனாவில் குடியரசு ஸ்தாபித மாவதற்கு முந்தின வருஷம் வரை, சீனாவுக்குக் காணிக்கை அனுப்பிக் கொண்டு வந்தனர். சையாம் தேசம், சீனாவுடன் சேர்ந்து வாழ விரும்புகிற தென்பதை நான் அறிவேன்.

புரட்சி என்றாலே ரத்தச் சிந்துதல் தான். ஆயினும் சீனர்கள், ரத்தச் சிந்துதலிலே அவ்வளவு பிரியமுள்ளவர்களில்லை. 1911ம் வருஷத்துப் புரட்சியின் போது, சீன அரச பரம்பரையினராகிய மஞ்சு வம்சத்தினரை சிங்காதனத்தினின்று இறக்கி விட்டோம். அந்தக் காலத்தில், அதிகமான ரத்தஞ் சிந்தாமலே புரட்சியை நடத்தினோம். இதற்குக் காரணம் நாம் சமாதானப் பிரியர்களா யிருப்பதுதான். சீனாவின் உதாரணத்தைப் பின்பற்றுமாறு நான் உலகத்தினருக்குப் பல முறை எடுத்துச் சொல்லி யிருக்கிறேன். இப்பொழுது, ருஷ்யர்கள் இதனை உணரத் தலைப் பட்டிருக்கிறார்கள்.

நாற்பது கோடி சீனர்களாகிய நாம் மிகவும் நாகரிக முள்ள ஜாதியார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது பொதுவுடைமைத் தத்துவம் என்று எதைச் சொல்லுகிறார்களோ அதை சீனா, பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே அடைந்திருக்கிறது. சீன நாகரிகத்தைவிட ஐரோப்பிய நாகரிகம் முன்னேற்ற மடைந்திருக்கிற தென்று சொன்னால் அது உலகாயத விஷயத்தில்தான். ஐரோப்பிய நாகரிகம் விருத்தியடைய விருத்தியடைய நமது அன்றாடத் தேவைகளை அனுபவிப்பது சுலபமாகி விட்டது. யுத்தக் கருவிகள் பண் பட்ட நிலைமையில் தயாராக்கப் படுகின்றன. விஞ்ஞான அறிவு வளர வளர, இவைகளும் அபிவிருத்தி யடைந்திருக்கின்றன. ஆனால் இந்த விஞ்ஞான அபிவிருத்தி யென்ப தெல்லாம் இருநூறு வருஷ காலத்திற்கு முற்பட்டதுதான். ஆனால் சீனாவின் விஞ்ஞான அபிவிருத்தி யானது, பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது. இப்பொழுது,

உலகத்தில், கலை ஞானத்தில் தலை சிறந்து நிற்பது ஜெர்மனி ஆயினும் ஜெர்மானியர்கள், சீனாவின் கலை ஞானத்தைப் பற்றி இன்னும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். சர்வ சகோதரத்துவம் என்ற எண்ணமானது இக்கத் தலை முறையிலே தான் ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே இது சீனாவில் ஏற்பட்டிருந்தது. நமது முன்னோர்கள், உலக நாகரிகத்தையே தங்கள் லட்சியமாகக் கொண்டிருந்தார்கள். உலக சமாதானத்திற்காகவே அவர்கள் பாடுபட்டு வந்திருக்கிறார்கள். இடையில் நாம் நமது தேசிய எண்ணத்தை மறந்து விட்டோமாதலினால், நமது நாகரிகத்தின் மேன்மை முதலியன ஒன்றும் தெரியாமல் போய் விட்டன. ஆதலின் முதலில் நமது தேசிய எண்ணத்தை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும். சர்வ சகோதரத்துவத்திற்கு அஃது அஸ்திவாரம் போன்றது. உலகத்தை ஆளவேண்டுமென்று விரும்புகிறவர்கள், முதலில் தாங்கள் முதலில் தங்கள் நாட்டைச் சரியாக ஆளப்பார்க்க வேண்டும் என்ற பழமொழியுன்றுண்டல்லவா? ஆதலின் இழந்து போன நமது தேசிய உணர்ச்சியை மீண்டும் நாம் பெறுவோமாக!

ஒவ்வொரு காங்கிரஸ் வாதியும் தினம் அரைமணி நேரம் நூற்றால் போதுமென்று நான் யோசிக்கிறேன். சாதாரணமாக ஆரம்பப் பழக்கமுள்ளவர்கள் கூட இந்த அரை மணி நேரத்தில் நூறு கஜம் நூற்கலாம். சிலர் சுலபமாக இருநூறு கஜமும் நூற்கின்றனர். இங்ஙனம் நூற்கிறவர்கள், வருஷத்திற்கு இருபது கஜம் துணி தேவையுடையவர்களாயிருக்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் அவர் தினம் ஒரு மணி நேரம் நூற்றால் போதும். இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர், தினம் ஐந்து மணி நேர விகிதம் நூல் நூற்றால், இந்தியாவிலுள்ள அத்தனை பேருக்கும் உடை வழங்கலாம்.

—மகாத்மா காந்தி.



1939

டிசம்பர்

1 பின்லாந்தின் மீது ருஷ்யா படையெடுத்திருப்பதைக் கண்டித்து எல்லாப் பிரிட்டிஷ் பத்திரிகைகளும் எழுதுகின்றன. மற்றும், இந்தப் படையெடுப்பு, ஜெர்மனியிலும் ஒரு திகிலை உண்டு பண்ணியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இங்கிலாந்தில், இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் ராணுவத்தில் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு ஒரு நெருக்கடியை உண்டு பண்ண வேண்டுமென்பதற்காக இப்பொழுது சட்ட மறுப்பியக்கம் ஆரம்பிக்கப்பட மாட்டாதென்றும் போராட்டத்திற்குத் தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டுமானால் அனைவரும் கைராட்டினத்தில் நூல் நூற்றுக் கதர் உடுத்த வேண்டுமென்றும் மகாத்மா காந்தி 'ஹரிஜன்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

2 பின்லாந்தின் வட பாகத்தில் உத்தர மகா சமுத்திரத்தைச் சேர்ந்த பெட்ஸாமோ என்ற துறை முகத்தை பின்னிஷ்காரர்கள் மீண்டும் கைப்பற்றிக் கொண்டார்கள் என்று ஒரு செய்தி கூறுகிறது.

இரண்டு ஜெர்மானிய யுத்தப் படகுகள் பிரிட்டிஷ் கடற் படையினரால் பிடிக்கப்பட்டன.

போலந்தைச் சேர்ந்த கிட்னியா துறைமுகத்தில் வேலை செய்யும் அநேக போலிஷ் உத்தியோகஸ்தர்களை, ஜெர்மன் அரசாங்கத்தார் மரண தண்டனைக்குட் படுத்தி விட்டனர்.

பின்லாந்து அரசாங்கத்தார், தங்களுடைய கட்சியை சர்வ தேச சங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்ளத் தீர்மானித்திருக்கின்றனர்.

3 வார்ஸா நகரத்தில் 53 யூதர்கள் மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

4 ஹங்கேரிய எல்லைப்புறத்தில் ஏராளமான ஜெர்மன் துருப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

எக்ஸ்ரே சிகிச்சை பிரபலமாவதற்கு முக்கிய காரணராயிருந்த அறிஞர் வாலியண்ட் என்பவர் இறந்து விட்டார்.

பின்லாந்தின் தலை நகராகிய ஹெல்சிங்கியின் மீது ருஷ்ய ஆகாய விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன. 67 பேர் மரணம்; 360 பேருக்குக் காயம்.

பிரிட்டிஷ் மன்னர் மேற்குப் போர் முனையைப் பார்வையிட்டார்.

பிரிட்டனுக்கு இன்னும் ஏகாதிபத்தியக் கொள்கை போக வில்லையென்று லண்டன் 'நியூஸ் க்ரானிகல்' பத்திரிகைக்கு மகாத்மா காந்தி ஒரு செய்தி விடுத்திருக்கிறார்.

5 சர்வ தேச சங்கக் கூட்ட நடவடிக்கைகளில் தான் கலந்து கொள்ள முடியாதென்று ருஷ்யா தெரிவித்து விட்டது.

பின்லாந்துக் கருகாமையிலுள்ள கரேலிய பூசந்தியில், பின்னிஷ் படைகள் 64 ருஷ்ய டாங்கிகளைக் கைப்பற்றியதாகவும், அப்பொழுது 2000 பேர் கொல்லப்பட்டதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

6 மேற்குப் போர் முனையில் ஜெர்மானிய ஆகாய விமானங்கள் பறந்து சென்றன.

7 பின்லாந்தில் பனியும் மழையும் நிறைந்திருப்பதனால், இனி ருஷ்யர்கள் அதி வேகமாக முன்னேற முடியாதென்று பின்லாந்து சேனாதிபதிகள் நம்புகிறார்கள்.

8 பின்லாந்து துறை முகங்களைச் சுற்றித் தாங்கள் தடை போட உத்தேசித்திருப்பதால், எல்லா வெளி நாட்டுக் கப்பல்களும் உடனே வெளியே போய்விட வேண்டுமென்று ருஷ்யா ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

ஜெர்மனிக்குச் சாமான்களை ஏற்றிச் செல்லும் எல்லாக் கப்பல்களையும் தாங்கள் வழி மறித்துப் பறி முதல் செய்யப் போவதாக பிரிட்டன் ஓர் அறிக்கை விட்டிருக்கிறது.

9 பின்லாந்தில் தாங்கள் எதிர் பார்த்தபடி வெற்றி கிடைக்கவில்லை யென்று சோவியத் அரசாங்கத்தினர் கவலை கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சீன-ஜப்பானிய யுத்தத்தில், சீனர்களுக்கு இன்று பெரிய வெற்றி கிடைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

10 ஜப்பானிலிருந்து ஜெர்மன் சாமான்களை ஏற்றிக் கொண்டு, ஜெர்மனிக்கு ஒரு கப்பலை அனுப்பப்போவதாக ஜப்பானிய அரசாங்கம், பிரிட்டிஷ் அரசாங்க அறிக்கைக்குப் பதிலாக ஓர் அறிக்கை வெளியிட்டு விட்டு, 'ஸான்யோமாரோ' என்ற ஒரு கப்பலை அனுப்பி யிருக்கிறது.

ஜெர்மனியும் யூகோஸ்லேவியாவும் சந்திக்கிற எல்லைப்புறத்தில் ஒரு ஜெர்மானிய சுங்கவரி உத்தியோகஸ்தர் கொல்லப் பட்டார்.

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவரான ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் அலகாபாத்திற்கு விஜயஞ் செய்து பல பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்.

11 பின்லாந்துக்கு ஜெர்மனியும் இத்தலியும் உதவி செய்கிற தென்று மாஸ்கோ செய்தி யொன்று கூறுகிறது.

டிசம்பர் மாதம் 9ந் தேதியோடு முடிவாகிற ஒரு வாரத்தில் ஏழு பிரிட்டிஷ் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

யுத்தங் காரணமாக உணவுப் பொருள்களின் விலை ஏறியிருப்பதைக் கட்டுப்படுத்த இந்தியா அரசாங்கத்தின் வர்த்தக அங்கத்தினராகிய ஸர் ராமசாமி முதலியார் கூறினார்.

மேற்குப் போர் முனையில் ஜெர்மன் படைகளும் நேசக் கட்சிப் படைகளும் நேருக்கு நேர் சந்தித்துப் போர் புரிந்தன, யுத்தம் ஆரம்பித்த பிறகு, இது தான் முதன் முதலாக ஏற்பட்ட யுத்தம்.

12 ஸ்பெயினில் தளபதி பிராங்கோ மீண்டும் கோனாட்சியை ஸ்தாபிக்க முயன்று கொண்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது.

13 ஸ்வீடன் நாட்டு மந்திரிச் சபை ராஜீநாமா செய்து விட்டது.

வான் ஷீயர் என்ற ஒரு ஜெர்மன் யுத்தக் கப்பலைப் பல பிரிட்டிஷ் கப்பல்கள் தாக்கி பலத்த சேதத்தை உண்டு பண்ணி விட்டன.

14 சர்வ தேச சங்கத்திலிருந்து ருஷ்யா விலக்கப்பட்டு விட்டது. இந்தத் தீர்மானத்திற்குச் சாதகமாக ஓட் போடாத நாடுகள், ஸ்விட்ஜர்லாந்து, நார்வே, ஸ்வீடன், டென்மார்க். லிதுனியா, எஸ்தோனியா, சீனா, பல்கேரியா.

காங்கிரஸும முஸ்லீம் லீகும் ஒரு சமரஸத்திற்கு வர வேண்டுமென்று லார்ட் ஜெட்

லண்டு, பார்லிமெண்டு பிரபுக்கள் சபையில் பேசினார்.

15 சீன—ஜப்பானிய யுத்தத்தில் சீனர்கள், தாங்கள் முன் இழந்து போனபல நகரங்களை மீண்டும் கைப்பற்றிக் கொண்டு விட்டனர்.

அமெரிக்காவுக்கு பின்லாந்து செலுத்த வேண்டிய கடன் தொகையில் ஒரு பகுதியாகிய 234,000 டாலரை, இன்று பின்லாந்து அரசாங்கம் அமெரிக்காவுக்குச் செலுத்தியது.

16 இத்தலியிலுள்ள வெசூவியஸ் எரிமலை, நெருப்பைக் கக்க ஆரம்பித்திருக்கிறது.

பாசிஸ்ட் கட்சிக் கூட்டமொன்றில் இத்தலியின் அந்நிய நாட்டு மந்திரியான தனபதி சியானோ பேசுகையில், ஜெர்மனியை மற்ற வல்லரசுகள் சூழ்ந்து கொண்டு விட்டதனாலேயே, தற்போதைய யுத்தம் ஏற்பட்டதென்று கூறினார்.

17 கிராப் வான் ஸ்பீ என்ற ஜெர்மன் கப்பல், தானே முழுகி விட்டது.

பிரிட்டிஷாருடைய தடைக்கு மீறிச் சென்ற 'ஸான்யோ மாரு' என்ற ஜப்பானியக் கப்பல், மேற்படி தடையினின்று விலக்கப் பட்டதாக அறிவிக்கப் படுகிறது.

18 பின்லாந்தின் வட புறத்தில் பலத்த யுத்தம் நடை பெறுகிறதாகச் சொல்லப் படுகிறது.

ஹெலிகோலாண்ட் பிரதேசத்தில் ஜெர்மன் ஆகாய விமான்ங்கள், பிரிட்டிஷ் ஆகாய விமானங்களால் தாக்கப் பட்டதாகவும், பன்னிரண்டு ஜெர்மானிய ஆகாய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

19 பிரிட்டிஷ் பிரதம மந்திரி, பிரெஞ்சு பிரதம மந்திரி முதலியோர் அடங்கிய 'சுப்ரீம் யுத்த கவுன்சில்' கூடியது.

இன்று காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் வார்தாவில் கூடியது.

20 'கொலம்பஸ்' என்ற ஜெர்மானியக் கப்பல் இன்றுதானே மூழ்கி விட்டது.

'வான் ஸ்பீ' என்ற கப்பலின் காப்டன், தற்கொலை செய்து கொண்டார்.

ஊ தாரவாடி மவுங் மவுங் என்பவர் பர்மா அரசாங்கத்தின் மந்திரிகளில்ஒருவராக நியமிக்கப் பட்டிருக்கிறார். ஆக இப்பொழுது மொத்தம் ஏழு மந்திரிகள்.

இன்றும் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் வார்தாவில் கூடியது.

21 பின்லாந்திலுள்ள ஸால்லோ முஸால்மி என்ற இடத்தில் நடை பெற்ற யுத்தத்தில் இருபதினாயிரம் ருஷ்யர்கள் கொல்லப்பட்டார்கள் என்று ஒரு செய்தி கூறுகிறது. இத்தாலிய அரச தம்பதிகள் இன்று போப்பரசரை தரிசித்தார்கள்.

இன்று கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்தில் தேசீய சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

ஜெக்க நாடு இன்னும் இருப்பதாக பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கீகரிக்கிற தென்று லார்ட் ஹாலிபாக்ஸ், டாக்டர் பெனேஷுக்கு ஒரு செய்தி அனுப்பி யிருக்கிறார்.

22 'நாம் ஒரு வல்லரசு என்ற முறையில் ராஜீநாமா வாவது செய்வோம்; அல்லது இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவோம்' என்று டாக்டர் கெப்பல்ஸ் ஒரு கூட்டத்தில் கூறினார்.

ஸ்டாலின் 60வது பிறந்ததினம் ருஷ்யா வெங்கணும் கொண்டாடப் பட்டது. ஹிட்லர் வாழ்த்துச் செய்தியனுப்பினார்.

23 பின்லாந்து போராட்டத்தில், ஜெர்மனியின் உதவியை ஸ்டாலின் கேட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

24 உலகத்தில் நிரந்தரமான அமைதி நிலவியிருக்கும் பொருட்டு. எல்லா நாடுகளுக்கும் சுதந்திரம் அளிக்க வேண்டுமென்று போப்பரசர் ஒரு செய்தி விடுத்திருக்கிறார்.

ஹிட்லர், மேற்குப் போர் முனையைப் பார்வை யிட்டதாகச் சொல்லப் படுகிறது.

25 ஸ்டாலினுடைய 60 வது பிறந்தினத்தை முன்னிட்டு, தளபதி சியாங்கை ஷேக் ஓர் ஆசிச் செய்தி அனுப்பி யிருக்கிறார்.

நூற்றுக் கணக்கான ருஷ்ய ஆகாய விமானங்கள் பின்லாந்தின் மீது பறந்து சென்று குண்டுகள் போட்டன வென்று ஒரு செய்தி கூறுகிறது.

26 பிரிட்டனுக்கு உதவி செய்வதற்காக, ஆஸ்திரேலிய ஆகாய விமானப் படையொன்று இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தது.

27 துருக்கியிலுள்ள அனடோலியாமாகாணத்தில் பூமியதிர்ச்சி ஏற்பட்டது. பல கிராமங்கள் அழிந்து பட்டன. ஆயிரக்கணக்கான உயிர்ச் சேதம்.

பிரிட்டனுக்கும் ருஷ்யாவுக்கும் உள்ள வியாபார சிநேகம் எந்த விதத்திலும் பாதிக்கப் படவில்லை யென்று பிரிட்டிஷ் அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

பின்லாந்துப் போராட்டத்தில் வெற்றி ஏற்படுத்திக் கொடாததின் காரணமாக மூன்று ருஷ்ய தளபதிகள் சுட்டுக் கொல்லப் பட்டார்கள்.

ருஷ்யா, பின்லாந்தின் மீது படையெடுத்ததை, மெக்ஸிகோவிலுள்ள ட்ரோட்ஸ்கி அங்கீகரிக்கவில்லை யென்று சொல்லப்படுகிறது.

28 நார்வே நாட்டிலிருந்து பின்லாந்துக்கு 80 லட்சம் க்ரோனர் (நார்வே நாணயம்) நன் கொடையாகச் சேர்க்கப் பட்டு அளிக்கப்பட்டிருக்கிறது.

போப்பரசர் தமது பரிவாரங்களுடன் இத்தாலிய அரச தம்பதிகளைச் சென்று பார்த்தார்.

பின்லாந்து யுத்தத்தில், ருஷ்யப்படைகள் சுவாண்டோ என்னும் ஏரியைக் கடந்து போகையில், பின்னிஷ் படைகளால் அழிக்கப் பட்டன வென்று ஒரு செய்தி கூறுகிறது.

29 மேற்குப் போர் முனையில் சீதோஷ்ண நிலை சரியாயில்லாத காரணத்தினால எவ்விதமான யுத்த சம்பவங்களும் ஏற்படவில்லை யென்று சொல்லப்படுகிறது.

ஏகாதிபத்திய அரசாங்கத்தின் கிழலில், ஓர் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டவேண்டுமென்று நமது தலைவர்கள் கூறுவது, இந்திய மகா ஜனங்களின் மீது சுமத்தப்படுகிற ஓர் ஏமாற்றமாகும். நாம் அரசியலைப் பற்றியும் சரித்திரத்தைப் பற்றியும் படித்திருக்கிறோம். அரசியல் அதிகாரத்தைக் கைப் பற்றிக் கொண்ட பிறகுதான், அரசியல் நிர்ணய சபை ஏற்படும். உதாரணமாக இந்தியப் பிரச்னையைப் பற்றி காங்கிரஸும், பிரிட்டிஷ் அரசாங்கமும் ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்குமானால், முதலில் காங்கிரஸ் வெற்றியடைய வேண்டும். பின்னர், அதிகாரத்தைக் கைப் பற்றிக் கொள்வதற்காகத் தற்காலிக அரசாங்கமொன்று ஏற்படவேண்டும். அந்தத் தற்காலிக தேசிய அரசாங்கந்தான், இந்தியாவுக்கென்று ஓர் அரசியல் திட்டத்தை வகுக்க இந்த அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட முடியும். காரியக் கமிட்டியார், இப்பொழுது கூட்ட வேண்டுமென்று சொல்லும் அரசியல் நிர்ணய சபை யானது, புகழ் நிறைந்த ஒரு சர்வகட்சி மகாநாடா யிருக்கலாம். அவ்வளவுதான். உண்மையான ஓர் அரசியல் நிர்ணய சபையாக அது இராது.

—சுபாஷ் சந்திர போஸ்.

ஆண்கள் எத்தனை பேர்? ...

... பெண்கள் எத்தனை பேர்?

உலகத்திலுள்ள பல நாடுகளின் ஜனத்தொகையில் ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர் என்ற விவரங்களைச் சமீபத்தில் சர்வ தேச சங்கத்தினர் ஓர் அறிக்கையாக வெளியிட்டிருக்கின்றனர். அதன் விவரம் வருமாறு :—

	நாட்டின் பெயர்		ஆண்கள்.	பெண்கள்.
1	தென்னாப்பிரிக்கா (வெள்ளையர்கள் மட்டும்)		1,038,000	1,005,000
2	ஆஸ்திரியா	—	3,487,000	3,405,000
3	பர்மா	—	8,088,000	7,774,000
4	பல்கேரியா	—	3,053,000	3,024,000
5	கானடா	—	5,782,000	5,427,000
6	அமெரிக்கா (ஐ. மா)	—	64,161,000	63,180,000
7	இந்தியா	—	180,206,000	169,554,000
8	ஐர்லாந்து	—	1,520,000	1,448,000
9	ஜப்பான்	—	34,734,000	34,520,000
10	மலேயா	—	2,584,000	1,774,000
11	நியூஜிலந்து	—	769,000	748,000
12	ஜெர்மனி	—	36,427,000	38,400,000
13	பெல்ஜியம்	—	44,110,000	1,193,000
14	சில்லி (தெ. அ)	—	2 123,000	2,165 000
15	டென்மார்க்	—	1,862,000	1,915,000
16	எகிப்து	—	1,068,000	7,120 000
17	எஸ்தோனியா	—	531,000	600 000
18	பின்லாந்து	—	1,804,000	1,941,000
19	பிரான்ஸ்	—	19,900,000	21,400,000
20	கிரீஸ்	—	3,076,000	3,128,000
21	ஹங்கேரி	—	4,456 000	4,634,000
22	இத்தலி	—	21,057,000	21,849,000
23	லாட்வியா	—	928,000	1,053,000
24	மெக்ஸிகோ	—	8,119,000	8,434,000
25	நார்வே	—	1,420,000	1,479,000

26	நெதர்லாண்ட்ஸ்	—	4,308,000	4,324,000
27	போலந்து	—	17,124,000	17,966,000
28	போர்த்துகல்	—	3,256,000	3,570,000
29	ருமேனியா	—	8,871,000	9,182,000
30	யுனைடெட் கிங்டம்	—	22,725,000	24,562,000
31	ஸ்வீடன்	—	3,101,000	3,466,000
32	ஸ்விட்ஜர்லாந்து	—	2,034,000	2,176,000
33	ஜெக்கோ ஸ்லோவேகியா		7,372 000	7,786,000
34	துருக்கி	—	7,932,000	8,221,000
35	ருஷ்யா	—	71,034,000	75,985,000
36	யூகோஸ்லேவியா	—	6,892,000	7,042,000

குறிப்பு:—இவற்றில் முதல் பதினோரு நாடுகளில் ஆண்களின் ஜனத்தொகை அதிகம். பிந்திய இருபத்தைந்து நாடுகளில் பெண்களின் ஜனத்தொகை அதிகம்.

கையெழுத்துப் போடு முன்

1. ஒரு காகிதத்தில் கையெழுத்துப் போட வேண்டுமானால், முதலில் அதிலுள்ள விஷயங்களை நன்றாகப் படித்துப்பார். அதன் அர்த்தங்களை நன்றாகத் தெரிந்துகொள். உலக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும், அது உனக்குச் சாதகமா யிருக்குமா, பாதகமா யிருக்குமா வென்பதை யோசித்துப்பார்.

2. மேற்படி விஷயத்தினுடைய அர்த்தம் உனக்குத் தெரியாவிட்டால், அதில் கையெழுத்துப் போடுவதற்கு முன்னர், உன்னுடைய வக்கீலைக் கலந்து ஆலோசனை செய்.

3. வேறொரு நபர் வந்து, உனக்கு லாபம் சம்பாதித்துக்கொடுப்பதாகச் சொல்லி, உடனே கையெழுத்துப் போடுமாறு வற்புறுத்துவாரானால், அஃது உன்னை ஏமாற்றுவதற்காக என்று நிச்சயப் படுத்திக் கொள்.

4. எந்த தஸ்தவேஜில் நீ கையெழுத்துப் போட வேண்டுமென்று கேட்கப் படுகிறாயோ, அந்த தஸ்தவேஜு சட்ட மூலமாக யாரையும் கட்டுப் படுத்தாது என்று சொன்னால், ஒரு மோசடிக்காரன் எதிரில் நீ இருக்கிறாய் என்பது உனக்கு ஞாபக மிருக்கட்டும்.

தமயனின் கடிதம்-9

—"தேவி தாசன்"

(அஞ்சலி)

உன்னை நினைக்கையிலே—தேவியென்
உள்ளக் கடலினிலே
அன்புத் திரை யெழும்பிக்—களித்துளி
அள்ளி யிறைக்கு தம்மா! 1
அன்னையைப் போலுவந்தே—என்றுமெனக்
காறுதல் சொல்லிடு வாய்
அன்னையினை விடுத்து—சேய்க்கொரு
அரிய துணையு முண்டோ? 2
சவலைக் குழந்தை யம்மா—நன்றுதீது
சற்றுந் தெரிய னம்மா!
கவலைப் புணை யளித்து—ஞாலமாயக்
கடலி லென்னை விடுக்கேல். 3
வாடும் பயிரெனவே—நெஞ்சம்மிக
வாடித் தவிக்கு தம்மா
பாடியரற்று தம்மா—உனக்கினி
பராசக்தி சக்தி யென்றே. 4
புயலிடைப் பட்ட தொரு—கட்டுமரம்
போலவென வாழ்வுக் கலம்
அயர்வு கண்டஞ்சு தம்மா!—பிரபஞ்ச
ஆழி யிடையினிலே! 5
ஆசையெனும் புலிகள்!—என்னைமிக
அண்டி வருது தம்மா!
நேசம் விழைது தம்மா!—என்றனொடு
நெருங்கி வாழ்ந்திடவே. 6
வஞ்ச மெனும் நரிகள்—என்றனொடு
வார்த்தைக ளாடு தம்மா!
மிஞ்சிய தந்திரங்கள்—கூறுதிந்த
மேதினி வாழ்ந்திடவே. 7
காமக் கொடுங் கள்ளன்—என்றன்சிறு
கருத்தைக் கவரு கின்றான்
தாமக் கருங் குழலாய்—இவைனின்று
தப்பவோர் தந்திரம் சொல். 8
கச்சை மணியசைய—நீரைமிகக்
கண்ணில் வடித்தழுத
பச்சைக் குழந்தைக்கு நீ—அன்றளித்த
பாலமு தத்தை யெண்ணி 9
சின்னவென சித்தக்கிளி—கத்துதம்மா
சிறிதும் ஓய்ச்ச லின்றி
இன்னே யருளமுதம்—வார்த்திடுவென்
இதயக் கிளி களிக்க. 10